21 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)



அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

BANQUET & EVENT CENTER
IN GTA SQUARE MALL

- Birthday Party
- Special Events
- Upto 50 People
- Reasonable Price



Contact: 416.640.3535

நதி 21 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2011

# ரொறொன்ரோ மாநகரசபை ஊழியர்களின் எண்ணிக்கை குறைப்பு

ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் றொப் போர்ட் (Rob Ford) தனது 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் துண்டு விழும் தொகையை இல்லாமல் செய்ய அல்லது குறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். தற்போது இத்துண்டு விழும் தொகை $443 மில்லியன் இற்கும் $774 மில்லியனிற்கும் இடைப்பட்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ரொறொன்ரோ மாநகரசபையின் 17,000 ஊழியர்களுக்கும் நகரமுதல்வரால் ஒரு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி தாங்களாகவே முன்வந்து வேலையில் இருந்து விலகுவோருக்கு அவர்கள் வேலை செய்த ஒவ்வொரு வருடத்திற்கு மூன்று கிழமை சம்பளம் என கணக்கிட்டு ஒரு தொகை அவர்கள் வேலையை விட்டு விலகும் போது வழங்கப்படும். இத்தொகை அதிகூடியது ஆறுமாத சம்பளத்தொகைக்கு மேல் போக முடியாமல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்புவர்கள் செப்ரெம்பர் மாதம் ஒன்பதாம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயரை பதிவு செய்ய வேண்டும்.

மாநகரசபை முதல்வர் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகைக்கு தெரிவிக்கையில் போதிய அளவு ஊழியர்கள் தாங்களாகவே முன்வந்து இவ் உதவித்தொகையை பெற்றுக்கொண்டு வேலையில் இருந்து விலகாவிட்டால் தாங்கள் வேலை நீக்கம் செய்ய வேண்டிவரும் என்றார்.

ரொறொன்ரோ மாநகரசபையின் ஊழியர்கள் 17 ஆயிரம்பேர் உட்பட ரொறொன்ரோ மாநகரசபையில் தங்கியிருக்கும் நிறுவனங்களில் (Agencies) 50,000 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 3000 பேர்வரையில் தாங்களாகவே முன்வந்து பதவி விலகவேண்டும் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ரொறொன்ரோ மாநகரசபை மற்றும் அதில் தங்கியிருக்கும் நிறுவனங்களில் இருந்து 30,000 பேர் CUPE என்னும் தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்களது மாநகர சபையுட-னான உடன்படிக்கை (Contract) டிசம்பர் 31, 2011 உடன் முடிவடைகிறது. தற்போதைய உடன்படிக்கையின்படி இவ் ஊழியர்களுக்கு மாநகரசபை வேலை உத்தரவாதம் வழங்கியுள்ளது. இவ் உடன்படிக்கை ஜனவரி 2012 இல் புதுப்பிக்கப்படும் போது மாநகரசபை இவ்வேலை உத்தரவாதத்தை உடன்படிக்கையில் இருந்து எடுத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு புதிப்பிக்கப்படும் உடன்படிக்கையை தொழிலாளர் சங்கம் ஏற்க மறுத்தால் ஜனவரி 2012 இல் ஒரு வேலை நிறுத்தம் வருவது தவிர்க்க முடியாதது. இதனால் ரொறொன்ரோ நகரில் 2009 ஐ போல் ஜனவரி 2012 இல் மீண்டும் குப்பை கூழங்கள் நிரம்பி வழியலாம். ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் ரொறொன்ரோ நகரசபையின் "ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலை' உட்பட மூன்று முக்கிய நிறுவனங்களை தனியாரிற்கு விற்க இருப்பதாக ஏற்கெனவே அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலண்டன் கலவரமும் சமூக ஊடகங்களும்

ஆகஸ்ட் 04, 2011 இல் Mark Duggan என்ற 29 வயது சிறுபான்மை இனத்தை சேர்த்த தந்தையார் ஒருவர் பொலிஸாரால் வடக்கு இலண்டனில் உள்ள Tottenham நகரில் சுட்டுக்கொல்லப்பட்டத்தை அடுத்து இலண்டனில் கலவரம் ஆரம்பமானது. இவர் ஒரு முன்னாள் குற்றவாளியும் தற்போது ஒரு நல்ல தந்தையாராக குடும்பத்துடன் வசிப்பவர் எனவும், பொலிஸார் வேண்டும் என்றே சுட்டுக்கொன்றார்கள் என ஒரு பகுதியினர் கூறுகின்றனர். இவர் தம்மை நோக்கி சுட்டதாலேயே தாங்கள் சுட்டதாக பொலிஸார் கூறினாலும் இவரிடம் இருந்தோ அல்லது இவர் வந்த வாகனத்தில் இருந்தோ எந்த துப்பாக்கியும் எடுக்கப்படவில்லை.

இதை தொடர்ந்து ஆகஸ்ட் 06, 2011 இல் Tottenham நகரில் 300 பேரிற்கு மேல் பொலிசாரிற்கு எதிராக நடத்தப்பட்ட ஊர்வலத்துடன் கலவரம் வெடித்தது. இதை தொடர்ந்து கலவரம் இலண்டனில் உள்ள பலபகுதிகளிற்குப் பரவியது. 16,000 இற்கு மேற்பட்ட பொலிஸார் இலண்டன் நகரில் குவிக்கப்பட்டு கலவரத்தை அடக்க முற்படுகையில் கலவரம் தவிர்ந்த Manchester, Liverpool மற்றும் Birmingham நகரங்களுக்கு பரவியது. ஆகஸ்ட் 06, 2011 இல்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்

Great Options for all your Mortgage needs

- Lowest interest rates and best prepayment options.
- 1st time Home buyers.
- Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்



Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA





KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <

8 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை

- 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை





மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3
416.267.8221

3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE



Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# ரொறொன்ரோ...

**01ஆம் பக்கத்தொடர்ச்சி**



ஆரம்பமாகிய கலவரம் தொடர்ந்து நான்கு நாட்களாக பல இடங்களில் நடைபெற்றது. ஆகஸ்ட் 11, 2011 இல் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதுவரை இக்கலவரத்தில் ஈடுபட்டதாக நாடு முழுவதும் 1700 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் 600 பேர்வரையில் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இக்கலவரத்தின்போது நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பலகட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன, ஐவர் இதுவரை பலியாகியுள்ளனர்.

இல்கலவரத்தில் பங்குபற்றியவர்கள் எல்லாரும் சிறுபான்மை இனத்தவர்களோ அல்லது குற்றம் செய்வதை வழக்கமாக கொண்டவர்களோ அல்ல. எல்லா இனத்தவர்களும் இக்கலவரத்தில் பங்குபற்றி கடைகளை கொள்ள அடித்துள்ளார்கள். இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 11வயது சிறுவன், Ballerina ஆடும் பதின்ம வயதினர், கோடீஸ்வரனின் பதின்மவயது மகள், பாடசாலை மாணவர்கள் என எல்லாவகையினரும் அடங்குவர்.

இக்கலவரம் இனம், மதம் சம்பந்தப்பட்டது அல்ல என்பது வெளிப்படையாக உள்ளது. இக்கலவரத்திற்கு முக்கிய காரணம் நாட்டின் தற்போதைய பொருளாதார மந்த நிலை, வேலையின்மை, விரக்தி என கூறப்படுகிறது. கலவரம் இவ்வளவுவேகமாக நாடுமுழுவதும் பரவியதிற்கு காரணமாக சமூகஊடகங்கள், கைத்தொலைபேசி, Blackberry போன்றவையே இருந்துள்ளன. இலண்டனில் நடைபெற்ற கலவரங்கள் 'Twitter' இணையத்தளமூலம் வழிநடத்தப் பட்டுள்ளது. கலவரத்திற்கு மக்கள் Text செய்திகள் மூலம் நேரம் மற்றும் இடம் என்பன குறிக்கப்பட்டு அனுப்பப்பட்டு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இலண்டனில் நடைபெற்ற கலவரத்தில் ஒரு சம்பவம் Youtube இல் ஒரு மில்லியன் மக்களால் இதுவரை பார்வையிடப்பட்டுள்ளது. எல்லா முக்கிய ஊடகங்களில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 20வயது மலேசிய மாணவன் ஒருவன் கலவரக்காரர்களால் தாடை எலும்பு உடைக்கப்பட்டு கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவத்தின் ஒளிப்பதிவுக் காட்சியே அது. அந்த ஒளிப்பதிவில் அம்மாணவனிற்கு உதவுவதற்காக செல்லும் ஒருவரே அவரின் Wallet யை அவரது முதுகுப் பையில் இருந்து களவாடுவது தெளிவாக காட்டப்படுகிறது. அம்மாணவன் அன்று பகல் முழுவதும் றம்ளான் நோன்பு இருந்து விட்டு உணவு வாங்க செல்லும் போதே இவ்வாறு கலவரக்காரர்களால் அடித்து கொள்ளை அடிக்கப்பட்டார். அம்மாணவன் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். அவரை U.K இற்கான மலேசியா தூதுவர் மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

சமூக ஊடகங்கள் எவ்வாறு பரிக்கப்படுகின்றன என்பது பற்றி கூறிய ரொறொன்ரோ பேராசிரியர் Megan Boler, அண்மையில் அரபு உலகில் ஊழல் அரசாங்கங்களுக்கு எதிராக நடந்த கலவரங்களை உலகம் முழுவதும் பரவ செய்ததற்காக சமூக ஊடகங்கள் 21 ஆம் நூற்றாண்டின் ஜனநாயகத்திற்கான புதிய உபகரணம் என புகழப்பட்டன என்றார். தற்போது அதே சமூக ஊடகங்கள் இலண்டனில் நடைபெறும் கலவரத்திற்கு துணைபோவதால் அவை தூற்றப்படுகின்றன என்றார்.

பிரிட்டினை சேர்ந்த அதிகாரிகள் சமூகஊடகங்கள் அதுவும் குறிப்பாக Blackberry Messenger இலண்டனில் கலவரம் தொடங்க, வழிநடத்த முக்கிய ஊடகமாக இருந்தது என்கிறார்கள்.

ஆனால் இவ்வாறான சமூக ஊடகங்கள் தான் தற்கால வாழ்க்கை முறையின் தொடர்பு சாதனங்கள். அவை உலகில் நடக்கும் நல்ல காரியங்களுக்கும் சரி, கூடாதா காரியங்களுக்கும் சரி துணை போகின்றன.

# G8 மாநாடு செலவீனம் குறித்து புதிய ஜனநாயகக்கட்சி குற்றச்சாட்டு


NDP MP Charlie Angus

புதிய ஜனநாயகக்கட்சியின் ஒழுக்கநெறி: (Ethics) சார்பாக விமர்சிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ளி அங்கஸ் (Charlie Angus) பழமைவாதக்கட்சியின் மஸ்கோக்கா (Muskok) பிராந்தியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் அப்போதைய தொழில்துறை அமைச்சருமான ரோனி கிலெமென்ற் (Tony Clement) 50 மில்லியன் டொலரை தமது தொகுதியின் அபிவிருத்திக்காக சரியான அரச அனுமதி எதுவும் இல்லாமல் செலவிட்டார் என குற்றம்சாட்டினார். இச்செலவுகளெல்லாம் அரச கணக்குப் பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப் படாத முறையில் செலவழிக்கப்பட்டுள்ளன. G8 செலவினங்களுக்கெ ஒதுக்கப்பட்ட பணத்தை G8 மாநாடு நடைபெற்ற இடத்துக்கு அருகாமையில் உள்ள தனது மஸ்கோக்கா தொகுதியில் சமூக நிலையங்களைத் திருத்தவும், பாதைகளைப் புனரமைக்கவும், சோலைகளைப் புனரமைக்கவும், பொதுசனமலசலகூடங்கள் அமைக்கவும், பாதைகளுக்கு அருகில் இளைப்பாறும் வாங்குகளை அமைக்கவுமாக 32 செயல் திட்டங்களுக்காக செலவிட்டுள்ளார்.

# இலண்டன் சென்ற மாணவமாணவிகள் ஏமாற்றம்

பிரித்தானியாவிலுள்ள உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி வாய்ப்பு பெற்றுத் தருவதாக உறுதியளித்து இலண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மாணவ மாணவியர் 80 பேர் அங்கு கைவிடப்பட்டு நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களை பிரித்தானியாவுக்கு அழைத்துச்சென்ற இரு நிறுவனங்களும் மாணவர் ஒருவரிடம் இருந்து சுமார் 15 லட்சம் ரூபா என்ற ரீதியில் 12 கோடி ரூபா வரையிலான தொகையொன்றை மோசடி செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொள்ளுப்பிட்டி மற்றும் நீர்கொழும்பிலுள்ள இரு வர்த்தக நிறுவனங்கள் மூலமாகவே இவர்கள் பிரித்தானியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களின் பிரதிநிதிகள் சிலர் இலண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளதாகத் தூதரக அமைச்சு ஆலோசகரான சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார். இந்த முறைப்பாட்டை அடுத்து அது பற்றிய விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கும் சமிந்த குலரத்ன, பிரித்தானியா அரசின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சுக்கும் நிலைப்பாடு தெளிவுபடுத்தப் பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பணம் செலுத்திப் பிரவேசித்த அந்த உயர் கல்வி நிறுவனம் காரணங்கள் எதனையும் தெரிவிக்காது திடீரென மூடப்பட்டதால் நாங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு நிறுவனங்களும் தற்போதும் பிரித்தானிய கல்வி வாய்ப்புகள் தொடர்பாக மாணவர்களை அனுப்பி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# அலை அலையான அழுத்தங்களினால் ஆடிப்போயுள்ள இலங்கை அரசு! அரசியல் தீர்வு விடயத்தில் அணுகுமுறைகளை மாற்றுமா, அல்லது...?

**இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்**

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுத்த விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்து, அவர்களை இல்லாமல் செய்துள்ள இலங்கை அரசாங்கத்தின் ஏதேச்சதிகாரப் போக்கிற்கு எதிரான அழுத்தங்கள் இப்போது அலை அலையாக அதிகரித்திருக்கின்றன.

இறுதி யுத்தத்தின்போது அரச படைகள் மனிதாபிமானமற்ற பல செயல்களில் ஈடுபட்டிருந்ததனால், அதற்கு எதிராகப் போர்க்குற்றம் சுமத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச கோரிக்கை வலுவடைந்து செல்கின்றது.

முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது அப்பாவிப் பொதுமக்கள் வகைதொகையற்ற முறையில் கொல்லப்பட்டார்கள். சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், விதிகளை மீறிய வகையில் இலங்கையின் அரச படைகள் நடந்து கொண்டிருந்தன. எனவே, இந்த இறுதி நேரச் சண்டைகள் குறித்து சர்வதேச தரத்திலான விசாரணைகள் நடத்தப்பட்டு, இலங்கையின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது ஐநா உட்பட சர்வதேச மட்டத்தில் உலக நாடுகளினதும், மனிதாபிமானம் மற்றும் மனித உரிமை அமைப்புக்களினதும் ஏகோபித்த நிலைப்பாடாக இருக்கின்றது.

ஆயினும் சர்வதேச மட்டத்திலான எந்த விசாரணையும் அவசியமில்லை. ஏனெனில் இலங்கை இராணுவத்தினர் ஒரு கையில் துப்பாக்கியையும் மறுகையில் மனிதாபிமானத்தையும் ஏந்தி, பயங்கரவாதிகளான விடுதலைப்புலிகளின் பிடியில் இருந்த தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான மனிதாபிமானச் செயற்பாட்டிலேயே ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் எந்த ஒரு சிவிலியன்களையும் கொல்லவில்லை. மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை. ஆகவே மனித உரிமை மீறல் தொடர்பாக எத்தகைய ஒரு விசாரணையும் அவசியமில்லை. அத்தகைய விசாரணை நடைபெறுவதற்கு நாங்கள் இடமளிக்கப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது.

இந்த நிலையில் பிபிசியின் சனல் 4 தொலைக்காட்சி, இறுதி நேர யுத்தத்தின் போது எத்தகைய மனித உரிமை மீறல்களில் இலங்கையின் அரச படைகள் ஈடுபட்டிருந்தன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்ற 'இலங்கையின் கொலைக் களங்கள்' என்ற தொலைக்காட்சிச் சித்திரத்தை வெளியிட்டு, சர்வதேச ரீதியாகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் போர்க்குற்றச் செயற்பாடுகள் குறித்து ஐநா மன்றம் வெளியிட்டிருந்த தருஸ்மன் அறிக்கையிலும் பார்க்க, இலங்கையின் கொலைக்களங்கள்' தொலைக்காட்சிச் சித்திரம் உலக நாடுகள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல், இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச் செயற்பாடுகள் குறித்த குற்றச்சாட்டிற்குச் சிறந்ததோர் ஆவணமாகவும் இந்தத் தொலைக்காட்சிச் சித்திரம் கருதப்படுகின்றது.



சர்வதேச மட்டத்திலான எந்த ஒரு விசாரணையும் அவசியமில்லை என்ற பிடிவாதத்திற்கு ஆதரவாக இறுதி யுத்தத்தின்போது என்ன நடந்தது என்பதை விபரிக்கும் வகையில் அறிக்கையொன்றை இலங்கை அரசு வெளியிட்டிருக்கின்றது. ஐநாவின் போர்க்குற்றச் சாட்டு அறிக்கைக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக இந்த அறிக்கையை அரசாங்கம் தயார் செய்திருக்கின்றது. இதனால், தருஸ்மன் அறிக்கையை எந்த வகையிலும் வலுவற்றதாக்குவதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயிருக்கின்றது.

இதேபோல, பிபிசி சனல் 4 வெளியிட்ட, 'இலங்கையின் கொலைக்களங்கள்" தொலைக்காட்சிக்குப் பதில் வெளியீடாக இலங்கை அரசாங்கமும் ஒரு தொலைக் காட்சிச் சித்திரத்தை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இறுதி யுத்தத்தின்போது எந்தவிதமான மனித உரிமை மீறல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை நிரூபிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சித்திருக்கின்றது. அந்த முயற்சியும் நகைப்புக்கு உள்ளாகிப்போயிருக்கின்றது.

சர்வதேசத்தின் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும் என்பதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட மறுப்பு தெரிவிக்கும் இரண்டு நடவடிக்கைகளுமே, எந்தப் பயனையும் ஏற்படுத்தவில்லை. இதனை உறுதிப்படுத்தும் வகையில் மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச தரத்திற்கிணங்க ஒரு விசாரணையை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்கா இப்போது வலியுறுத்தியிருக்கின்றது.

இந்த விசாரணை சுதந்திரமானதாக இருக்க வேண்டும். அது நம்பகத்தன்மையுடையதாக அமைந்திருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் இருக்க வேண்டும் என அமெரிக்க சுட்டிக்காட்டியிருக்கின்றது. இத்தகைய விசாரணையொன்றை இலங்கை தானே மேற்கொள்ளத் தவறினால், சர்வதேச சமூகத்தின் நடவடிக்கையை அது எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் அமெரிக்கா எச்சரிக்கை செய்திருக்கின்றது.

'இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் சர்வதேச மனிதாபி மானச் சட்ட மீறல்கள் தொடர்பாக முழுமையான, நம்பகமான, சுயாதீனமான ஏற்றுக்கொள்ளத்தக்க விசாரணைக்கு நாம் ஆதரவளிக்கிறோம். இலங்கையர்கள் இவ்விசாரணையை சர்வதேச தரத்திற்கமைய அவர்களாகவே செய்வதைக் காண நாம் விரும்புகிறோம். எனவே இலங்கை விமர்சர் களுக்கு நான் கூறுவது என்னவென்றால், உங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சர்வதேச தரத்திலான விசாரணையை ஆரம்பியுங்கள்' என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நியுலண்ட் கூறியுள்ளார்.

கடந்த வாரம் வாஷிங்டனில் நடைபெற்ற நாளாந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'இதனை விரைவாகச் செய்யுமாறு நாம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். இலங்கையர்கள் தாமாகவே இதைச் செய்வார்கள் என நாம் நம்புகிறோம். ஆனால், அவர்கள் அதைச் செய்யாவிட்டால், இலங்கையர்களின் விருப்பத்திற்கு மாறான வகையில், சர்வதேச நடவடிக்கைளுக்கான அழுத்தம் சர்வதேச சமூகத்தின் மத்தியிலிருந்து அதிகரிக்கப்போகின்றது' எனவும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளராகிய விக்டோரியா நியுலண்ட் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த அழுத்தத்திற்கு முன்னதாக, போருக்குப் பிந்திய இலங்கை அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான போக்கிற்கு எதிராகப் பலதரப்பில் இருந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் சார்பில் ஓங்கிக் குரல் கொடுத்து வந்த விடுதலைப்புலிகளின் செயற்பாடானது இலங்கை அரசாங்கத்திற்குத் தொடர்ச்சியான தலையிடியைத் தருவதாக அமைந்திருந்தது. அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் இதனால் அரசாங்கத்திற்கு அதிகரித்திருந்தன. நாட்டில் நிர்வாகத்தைக் கொண்டு செல்ல முடியாத அளவிற்கு நிலைமைகள் மோசமாகியிருந்தன. நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தை நோக்கிச் சென்றது. சர்வதேச மட்டத்திலும், இராஜதந்திர ரீதியிலும் தரம் குறைந்த நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருந்தது. தோற்றுப்போன,

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# உங்கள் கைகளிலா உங்கள் விதி?



## சத்குரு வாசுதேவ்

உங்கள் விதியும் உங்கள் வாழ்க்கையும் உங்கள் கைகளில் இருக்கின்றன என்று நினைக்கிறீர்கள். அதே நேரம், உங்களுடன் இருப்பவர்களின் எண்ணங்களையும், வாழ்க்கை முறையையும் நீங்களே தீர்மானிக்க விரும்புகிறீர்கள். உங்கள் விதியும், எண்ணங்களும், வாழ்க்கையும் உங்கள் கைகளில் என்றால், அவர்களின் வாழ்க்கை அவர்கள் கைகளில்தானே இருக்க வேண்டும்? நீங்கள் என்ன செய்தாலும் அதற்கோர் எதிர்விளைவு இருக்கும். ஒரு செயலைத் தேர்ந்தெடுக்கும் போதே அதன் விளைவுகளுக்கும் நீங்கள் தயாராக வேண்டும். செயலுக்கு விருப்பம், விளைவுக்கு வருத்தம் என்பது வாழ்க்கைக்கு உதவாத வெற்று உணர்ச்சிப் போராட்டமாகத்தான் இருக்கும். அப்படியானால் உங்கள் வாழ்க்கை கூட உங்கள் கைகளில் இல்லை. வேறேதோ ஒன்றில் சிறைப்பட்டிருக்கிறது.

முதலில் நீங்கள் யார் என்பதே தெளிவாக இல்லை. உங்கள் எண்ணங்களுடன் நீங்கள் உங்களை அடையாளப்படுத்தியிருக்கிறீர்கள் என்றால், உங்கள் விதி உங்கள் கைகளில் இல்லை. ஏனெனில், உங்கள் எண்ணங்களே உங்களுடையவை இல்லை. இந்த சமூகத்திலிருந்து எங்கெங்கோ சேகரித்தது தான் உங்கள் எண்ணம், உங்கள் குடும்பப் பின்னணி, உங்கள் சமூகப் பின்னணி, உங்கள் சமயப் பின்னணி என்று உங்களுக்கு போதிக்கப்பட்ட பல விஷயங்களின் பாதிப்பில்தான் உங்கள் எண்ணங்களின் அமைப்பே இருக்கிறது. அப்படியானால் உங்கள் விதி உங்கள் கைகளில் இருக்க வாய்ப்பேயில்லை.

எவையெல்லாம் நீங்கள் இல்லையோ அவற்றுடன் எல்லாம் உங்களை நீங்கள் அடையாளப்படுத்திக் கொண்டால், உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில் இல்லை என்று பொருள். உங்கள் உடலுடன் நீங்கள் உங்களை அடையாளப்படுத்துகிறீர்கள். உண்மையில் இந்த உடல் நீங்கள் இல்லை. பூமியின் பல இடங்களில் விளைந்த உணவுப்பொருட்களை சேகரித்து உங்கள் உடல் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த உடலை நீங்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும்போது, உங்கள் வாழ்க்கை உங்களுடையதாயிருக்க வாய்ப்பில்லை. மந்தைக் கூட்டத்தில் ஒருவராக சந்தையில் நிற்பீர்களே தவிர, உங்கள் தனித்தன்மையின் அடையாளத்தை உங்களால் தக்க வைத்துக் கொள்ளவே முடியாது.

உங்கள் உடல், உங்கள் மனம் இரண்டுமே நீங்கள் இல்லை என்கிற போது, அவற்றுடன் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டால், உங்களால் ஒருபோதும் தனித்தன்மையுடன் திகழவே முடியாது. உங்களுக்குள் வார்க்கப்பட்ட போக்கிலேயே நீங்கள் போவீர்கள். சில நேரங்களில் அதை எதிர்த்துக் கலகம் செய்வீர்கள். அதுவும் உங்களுக்குள் வார்க்கப்பட்ட விஷயம்தான். சிலர் தங்களுக்குள் வார்க்கப்பட்ட தன்மையை ஒட்டிப் போவார்கள். சிலர் அதனை எதிர்த்துப் போவார்கள். அவ்வளவுதான். எனவே உண்மையாகவே உங்கள் விதி உங்கள் கைகளில் இருக்க வேண்டுமென்றால், நீங்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள அம்சங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்த வேண்டும். உங்கள் உள்நிலை அனுபவத்திலும், உங்கள் விழிப்புணர்விலும் எது நீங்கள்-எது நீங்களில்லை என்பது தெளிவாக உணரப்பட வேண்டும். இதையெல்லாம் செய்து, உங்கள் விதியை உங்கள் கைகளில் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகுதான் மற்றவர்கள்.

ஓர் இளைஞன் என்னிடம், 'என் அம்மாவின் கருத்துக்களே என் கருத்துக்களிலிருந்து முரண்படுகின்றன. அவருடைய எண்ண ஓட்டங்களை நான் எப்படி மாற்றுவேன்?" என்று ஆதங்கப்பட்டார். 'உங்கள் அம்மாவாகவே இருக்கட்டும். அவர் உங்களுக்கு முந்தைய தலைமுறையைச் சேர்ந்தவர். அவருக்கு அவருடைய வாழ்க்கை பற்றி ஓர் அபிப்பிராயம் இருக்கும். உங்கள் பார்வை வேறுபட்டிருக்கும். உங்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகிற போது இதே சிக்கல்தான் ஏற்படும். உங்கள் கருத்து புதுமையென்று நீங்கள் இப்போது நினைப்பீர்கள். அதை விட பல மடங்கு புதுமையாக உங்கள் பிள்ளைகள் சிந்திப்பார்கள். எனவே உங்கள் அம்மாவுடன் இருங்கள். அவருடைய சிந்தனைப் போக்கையும், வாழ்க்கையையும் நீங்கள் தூக்கிச் சுமக்க முயலாதீர்கள்" என்று சொன்னேன். ஏனென்றால், இன்னொருவரின் வாழ்க்கையை உங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைக்க முயல்கிறீர்கள்.

விருப்பு, வெறுப்புகளுக்கு நீங்கள் இடம் தரத் தொடங்கிவிட்டாலே உங்கள் வாழ்க்கையோ விதியோ உங்கள் கைகளில் இல்லை. ஏனென்றால் விரும்பியதை மட்டுமே செய்யும் விதமாக வாழ்க்கை இல்லை. பிறப்பு முதல் உங்களுக்குள் வார்க்கப்பட்ட எண்ணப்போக்கின் விளைவுதான் விருப்பு, வெறுப்புகள். ஒரு விருப்பையோ, வெறுப்பையோ நீங்கள் எப்போது ஏற்படுத்தினாலும் உடனே ஒரு தடையை ஏற்படுத்தி விடுகிறீர்கள். பலரும் என்னிடம் வந்து, 'ஆன்மீகப் பாதையில் செல்ல எனக்கு விருப்பம்" என்று சொல்வார்கள். 'ஒரு வாரம் இங்கே இருங்கள். என்ன செய்யலாம் என்று பார்க்கலாம்" என்றதுமே, 'வருகிற புதன்கிழமை என் பெரியம்மா மகனுக்குப் பிறந்தநாள் விழா" என்பார்கள். 'சரி! அதற்கு முன் இரண்டு நாட்களாவது இங்கே இருந்து இதையெல்லாம் செய்யுங்கள்" என்றால், 'நீங்கள் சொல்வதில் சில விஷயங்கள் எனக்குப் பிடிக்காது" என்பார்கள். உடனே நான் அவர்களிடம் காகிதத்தையும், எழுதுகோலையும் கொடுத்து, 'உங்களுக்குப் பிடித்ததை மட்டும் எழுதுங்கள்" என்றால், ஐந்தாறு விஷயங்களை மட்டும் எழுதுவார்கள்.

ஆன்மீகப் பாதையில் நடையிடுவது என்றால் உங்கள் அனுபவ எல்லைக்குள் ஏராளமான அம்சங்களைக் கொண்டு வருவது. ஆனால், இந்த மொத்தப் பிரபஞ்சத்திலேயே உங்களுக்குப் பிடித்த விஷயங்கள் ஐந்தோ ஆறோதான்.

ஆன்மீகம் என்பது, கண்மூடி அமர்ந்து மொத்த பிரபஞ்சத்தையும் உங்களுக்குள் ஒரு பகுதியாக உணர்வது. கற்பனையாக அல்ல. உள்நிலை அனுபவமாகவே உணர்வது. பிரபஞ்சத்தில் விளைந்த தானியங்களில் சில கிலோக்களை உங்களில் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டீர்கள். அது சாத்தியம் என்றால், மொத்தப் பிரபஞ்சத்தையும் உங்களில் ஒரு பகுதியாக உணர்வதும் சாத்தியம்தான். ஆனால் மொத்தப் பிரபஞ்சத்திலேயே ஐந்தாறு அம்சங்கள்தான் உங்களுக்குப் பிடித்திருக்கிறதென்றால், உங்கள் வெறுப்பு விருப்புகள் வலுவாக இருப்பதாகப் பொருள். இப்படியிருந்தால் உங்கள் வாழ்க்கையை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சாத்தியமேயில்லை. எல்லாமே உங்களுக்குப் பிரியமானவையாய் இருந்தாலும் வளர்ச்சி சாத்தியம். எதுவுமே உங்களுக்குப் பிரியமானதில்லை என்றாலும் வளர்ச்சி சாத்தியம். சில விஷயங்கள் பிடிக்கும். சில விஷயங்கள் பிடிக்காது என்று நீங்கள் பிரிக்கத் தொடங்கிவிட்டால் உலகை இரண்டாகப் பிரிப்பதாகப் பொருள். எல்லாற்றையும் உள்ளடக்கிக் கொள்கிற போதுதான் வளர்ச்சி சாத்தியமாகிறது. இன்று பல விளம்பரங்கள், 'பிரத்யேகமாய் உங்களுக்காக" என்று அலறுகின்றன. பொருளாதாரம் வீழ்ச்சியடைகிறபோது எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொருளாதாரம் குறித்து எல்லோரும் பேசுகிறார்கள். பிரத்யேக நிலையிலிருந்து உள்ளடக்கும் நிலைநோக்கி நகர வேண்டும். ஏனென்றால், எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொள்வதில்தான் வாழ்க்கை நிகழ்கிறது.

வாழ்க்கை என்கிற அனுபவம் அற்புதமாக அமைய வேண்டும் என்கிற ஆசை உங்கள் எல்லோருக்கும் இருக்கிறது. அதனால்தான் இவ்வளவு விஷயங்களைச் செய்கிறீர்கள். உங்களால் செய்ய முடியாததை இந்த வாழ்வில் செய்யாவிட்டால் பரவாயில்லை. ஆனால் உங்களால் செய்ய முடிந்ததைச் செய்யாவிட்டால் அது பெரும் அவலம். எனவே, நீங்கள் வாழ்க்கையை உங்கள் கைகளில் எடுங்கள். இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாமே மகிழ்ச்சிக்குத்தான் ஏங்குகிறது. அதை நிகழச் செய்யுங்கள். உங்கள் வாழ்வின் அடிப்படைக் கேள்வியை உங்களை நோக்கிக் கேளுங்கள். வாழ்வின் நீங்கள் தேடிச் செல்வது, கை விலங்குகளையா? கட்டற்ற விடுதலையையா? விருப்பு வெறுப்புகள் விலங்குகளைப் பூட்டும். எல்லாவற்றையும் உள்ளடக்குவதே விடுதலைக்கான பாதையைக் காட்டும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


**YOGA - MEDITATION CLASSESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***

**ELECTRICAL WORKS**



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: **ஈசன் - *416-286-2880***

# காக்க காக்க கமரோன் கவிழ்க்க!

*‘Our lives, our homes, our liberties each day are made less secure because of unrestrained and unpunished police brutality.”*
National Negro Congress, Petition Against Police Brutality, 1938

சில வாரங்களுக்கு முன்னர் பாரிசின் மெட்ரோ நிலையத்தில் நானும் எனது நண்பரும் நுழைவாயிலில் நின்ற போது, அமெரிக்காவைச் சேர்ந்த சில வெள்ளை நிற மாணவர்களும், ஒரு 35 வயது மதிக்கத்தக்க ஒருவரும் நுழைவாயில் உள்ளே செல்லும் கதவருகில் நின்று கொண்டிருந்தனர். ஒருவரிடம் நுழைவுச் சீட்டு இருந்தது. மற்றவரிடம் இல்லை. ஒவ்வொருவராக நுழைவுச் சீட்டை உள்ளே தள்ளும் போது கதவு திறக்கும். 35 வயது மிக்க வெள்ளை இனத்தவர் திறந்த கதவை இழுத்துப் பிடிக்க அனைவரும் நுழைவுச் சீட்டின்றி உள்ளே புகுந்தனர். இதென்ன புதிய விடயம். அனைவரும் செய்வது தானே எனக் கேட்கலாம். என்னைப் போன்ற கறுப்பு நிறத்தவர் செய்தால் ‘சட்டத்தை மீறுவோர்’ என்ற பெயர். வெள்ளை இனத்தவர்கள் செய்தால் அதற்கு விதிவிலக்கு. இதனைத்தான் பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் ‘எழுதப்படாத சட்டம்’ ஆக உள்ளது. தொடர்ந்து கொண்டிருக்கும் லண்டனின் கலவரங்களின் பின்னணியும் இந்த நிற ஒடுக்கு முறையின் வெளிப்பாடே.

**- ரதன் -**

வன்முறைகளின் ஆரம்பம் Mark Duggan என்ற (கலப்பின) கறுப்பினதவரை பொலிஸார் சுட்டுக் கொன்றதே. ஆவணி நான்காம் நாள் அதாவது ஒபமாவின் 50வது பிறந்த நாளன்று மாலை 6.15க்கு Tottenham Hale Tube station க்கு அருகில் உள்ள Ferry Laney சுடப்பட 6.41க்கு உயிரிழந்தார். பொலிசார் இவரை சுட்டுக்கொன்ற முறை கறுப்பின மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தன்னை பொலிசார் துரத்தி வருவதை கைத்தொலைபேசி செய்தி காவி மூலம் தனது காதலி Semone Wilson க்கு தெரிவித்து 15 நிமிடங்களுக்குள் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். Mark Duggand வயது 29. நான்கு பிள்ளைகளின் தந்தை. Star Gang உறுப்பினர் என பொலிசாரார் தெரிவிக்கப்படுகிறது. பொலிசாரின் கண்காணிப்பில் தொடர்ச்சியாக இருப்பவர். The Independent Police Complaints Commission (IPCC) இவ்விடயத்தை விசாரித்து வருகின்றது. IPCC, பொலிசார் கூறிய சில தடயங்கள் தெளிவற்றுள்ளதாக கூறியுள்ளது. இவரிடம் உள்ள துப்பாக்கியின் குண்டு சன்னங்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தில் காணப்படவில்லை. எனவே இவர் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியதற்கான ஆதாரங்கள் இல்லை என சில ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன. இதற்கு முன்னரும் லண்டனில் பல கறுப்பினத்தவர்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பொழுது கொல்லப்பட்டுள்ளனர். David Emmanuel 29 வயது, பங்குனி 15, 2011 ல் கொல்லப்பட்டுள்ளார். கடந்த பங்குனி 27, வீதியில் தனது 5 வயது மகனுடன் சென்று கொண்டிருந்த Burrell Brown பாதுகாப்பு காரணங்களுக்காக பொலிஸாரை நாடிய போது இவர் மனநோயாளி எனக் கூறி கைது செய்துள்ளனர். இருபது நாட்கள் கழித்து (16-சித்திரை-2011)ல் இறந்துள்ளார். இவரது மகன் இவரை பொலிஸார் அடித்ததாக கூறியுள்ளனர். IPCC இன் அறிக்கை ஒன்று பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பொழுது இறந்தவர்களில் 68 வீதமானோர் வன்முறையற்ற காரணங்களுக்காக கைது செய்யப்பட்டோர் என தெரிவிக்கின்றது. பொலிஸாரின் வன்முறைகள் வெள்ளையின கைதிகளுக்கு நான்கு வீதமாக காணப்படுகின்றது. மிகுதி 96 வீதம் கறுப்பு-மற்ற இனத்தவருக்கு எதிராகவே உள்ளது.

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் Rodney King என்ற கறுப்பின அமெரிக்கர் லொஸ் ஏன்ஜல்ஸ் பொலிசாரால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டதை உலகமே அறியும். இன்றும் இணையத்தளங்களில் இக் காட்சிகளை காணலாம். இவர் கடந்த மாதம் கூட போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்துக்காக விசாரணைக்குட்படுத்தப் பட்டார். இதற்கு முன்பாக அமெரிக்காவில் பல தடவை நிறக் கலவரங்கள் வெடித்துள்ளன. 1967, 1943ம் ஆண்டுகளில் டிரொய்ட் நகரில் வெடித்த நிறக் கலவரங்களின் பின்னணியும், இன்றைய லண்டன் கலவரங்களின் பின்னணியும் பல விடயங்களில் ஒத்துள்ளன. கறுப்பின மக்கள் சமூக, வாழ்வியல் எதிர்பார்ப்புக்கள் எதுவுமற்று அன்றும் இன்றும் வாழ வைக்கப்படுகின்றார்கள்.



வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருந்த காலத்தில் வன்முறைக்கான காரணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. ஊடகங்களில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய காரணங்கள் இவை. பி.பி.சி முன்வைத்த காரணங்களும், பல முக்கியஸ்தர்களின் கருத்துக்களும் இவை.

1.சமூக நிதிக் கொடுப்பனவில் (welfare) வாழ்பவர்கள், படிப்பறிவற்றவர்கள் செய்யும் செயலே இதுஎன டெய்லி மெயில் பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும் இப் பத்திரிகை வன்முறையாளர்கள் குடும்ப-கலாச்சார மதீப்பீடுகள், முக்கியங்கள் பற்றி எதுவும் தெரியாதவர்கள். தந்தை வேலையற்றவராக அல்லது குடும்பத்தை உதறிவிட்டு செல்பவராக இருப்பார். They respond only to instinctive animal impulses — to eat and drink, have sex, seize or destroy the accessible property of others. என மிக மோசமாக குற்றஞ்சாட்டியுள்ளது. (http://www.dailymail.co.uk/debate/article-2024284/UK-riots-2011-Liberal-dogma-spawned-generation-brutalised-youths.html#ixzz1UcR7CQYU)

2. இன்டிபென்டன்ட் (The Independent) பத்திரிகை வன்முறையாளர்கள் சமூகத்தில் இருந்து விலகியவர்கள் அல்லது ஒதுக்கப்பட்டவர்கள் இவர்கள் செய்யும் செயலே இது. They are "opportunist criminals" and "disgusting thieves". எனக் கூறியுள்ளது.

3.இந்தக் குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் Gang உறுப்பினர்கள். இவர்கள் gang தலைமைக்கு கட்டுப்பட்டவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஒரு விடயத்தில் ஒற்றுமையாக இருப்பார்கள் அது No father at home இவர்களுக்கு வழிகாட்டிகள் இல்லை என The Telegraph பத்திரிகை கூறுகின்றது.

4. புதிய கொன்சவேற்றிவ் அரசாங்கம் பல சமூகநலத் திட்டங்களுக்கான நிதியை வெட்டியதன் விளைவு என தொழிற்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. If you're making massive cuts, there's always the potential for this sort of revolt against that.

5. சன் பத்திரிகை பொலிசாருக்கு அதிக அதிகாரங்கள் இல்லை. கண்ணீர் புகை அடிக்க அனுமதியில்லை எனக் கூறுகின்றது.

6. Christina Patterson: We can't deny that race plays a part - இன்டிபென்டன்ட் The Independent பத்திரிகை மேற்கண்டவாறு வெளிப்படையாகவே ஒத்துக் கொண்டுள்ளது. லண்டனில் உள்ள நண்பர் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவர் கூறிய விடயம் இது ‘லண்டன் நகர மெற்றோ ரெயில் குண்டு வெடிப்பின் பின் அதிகளவு பொலிசாரால் சோதனைக்குட்படுத்தப் பட்டவர்கள் கறுப்பினத்தவரே’ எனக் கூறினார். இன்டிபென்டன்ட் ல் மேலும் “Too many black men have been killed by the police. Too many black men and women have been treated like criminals when they're not. This is not the cause of these riots, but it's there in the mix, a mix where the key ingredient is feeling powerless. Cuts won't help. Growing unemployment won't help. Some investment, in youth services, and better schools, and mentoring schemes, might, but money alone isn't the answer.” வெளிப்படையாக எழுதப்பட்டுள்ளது. அதிகளவு நிதி மாத்திரம் இப்பிரச்சினையை தீர்க்காது. அதே இவ்விளைஞர்களின் பிரச்சினைகள் நன்கறியப்பட்டு அதற்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இவ் விளைஞர்கள் மாத்திரமல்ல முழுச் சமூகமும் தங்களது பிற்போக்கு வாத நிற வாத கருத்து நிலையில் இருந்து மாறவேண்டும்.

7. வன்முறை கலாச்சாரம் I blame the pernicious culture of hatred around rap music, which glorifies violence and loathing of authority (especially the police but including parents), exalts trashy materialism and raves about drugs. என லணடன் டெய்லி மிறர் (Daily Mirror) பத்திரிகை கட்டுரையாளர் Paul Routledge ரப் இசைக் கலாச்சாரத்தை குற்றஞ்சாட்டியுள்ளார். இவ்வாறான வன்முறைகள் நடைபெறும் பொழுது வன்முறையாளர்களைச் சுற்றியுள்ள அனைத்தும் ஆய்வுக்குட்படுத்தப்படும். ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் இது ஒரு நல்ல விடயமே. அப்படியாவது ரப் இசையின் நல்ல பக்கத்தை உணர்ந்து கொள்வார்கள்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



**சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.**

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# விளையாட்டுத் தகவல்கள் 312

## டெஸ்ட் கிரிக்கெட்டில் 1,000 விக்கெட்டுக்களை எடுக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது: - முத்தையா முரளிதரன்

டெஸ்ட் கிரிக்கட்டில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை படைத்தவர் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். அவர், டெஸ்டில் 1,000 விக்கெட்டுகளை எடுக்க வேண்டும் என்ற ஆசை தனக்கு இருந்தது என்று தெரிவித்துள்ளார். ஆனால் காயங்களும், வயதானது போன்ற உணர்வும் ஓய்வு குறித்து தன்னைச் சிந்திக்க வைத்ததாக முரளிதரன் தெரிவித்தார். கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரில் காலேயில் பிரக்யான் ஓஜா விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் முரளிதரன் 800 டெஸ்ட் விக்கெட்டுகள் உலகச் சாதனை புரிந்தார் அத்துடன் ஓய்வும் பெற்றார். 1000 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தும் மனிதனாக இருக்கும் ஆசை என்னிடம் இருந்தது, இந்திய அணிக்கு எதிராக 8 விக்கெட்டுகளை எடுத்து 800 விக்கெட்டுகள் மைல்கல்லை எட்டிய பிறகு ஓய்வு பெற்றேன், இருந்தாலும் ஆயிரம் விக்கெட்டுகள் வரை டெஸ்ட் ஆடியிருக்கலாமோ என்ற சபலம் எனக்கு இருந்தது. அதாவது 1000 விக்கெட்டுகளை கைப்பற்றுவது சாத்தியமா அல்லது 800 விக்கெட்டுகளுடன் ஓய்வு பெறுவது சிறந்ததா என்றெல்லாம் எனது மனம் மாறியது என்று விஸ்டன் கிரிக்கட்டர் இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். இலங்கை அணி ஆண்டொன்றுக்கு 8 டெஸ்ட் போட்டிகளை மட்டுமே விளையாடுகிறது. எனவே நான் 1000 விக்கெட்டுகளைக் கைப்பற்ற இப்போது நான் விக்கெட்டுகளை வீழ்த்தும் சராசரியை வைத்துப் பார்க்கும்போது எனது 43 வது வயதில் தான் 1000 விக்கெட்டுகள் சாத்தியம் என்று தெரிந்தது. அது வரையில் அணியில் என்னை வைத்திருங்கள் என்று நிர்பந்திப்பது கொஞ்சம் அதிகபட்சம் தான். அதன் பிறகு எனது உடம்பு கூறியதைக் கேட்டு ஓய்வு அறிவிக்க முடிவெடுத்தேன். அடுத்த ஆண்டு ஒருநாள் மற்றும் B20 கிரிக்கட் மட்டுமல்லாது அனைத்து வகை கிரிக்கட்டிலிருந்தும் தான் ஓய்வு பெறப்போவதாக முரளிதரன் தெரிவித்தார்.

### தனது ஹாட்ரிக் பாணியை பிராட் கொப்பி அடித்துவிட்டார்: ஹர்பஜன் சிங் நூதன புகார்

தான் 2001 ம் ஆண்டு நிகழ்த்திய டெஸ்ட் ஹாட்ரிக் பாணியை இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் கொப்பி அடித்து விட்டதாக நூதன புகாரை தெரிவித்துள்ளார் இந்திய பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங். லார்ட்ஸ் டெஸ்ட் போட்டியிலும் சரி, நாட்டிங்காம் டெஸ்ட்டிலும் சரி ஹர்பஜன் சிங்கால் இந்தியாவுக்கு எந்த உபயோகமும் இல்லை. பந்து வீச்சில் மகா சொதப்பலை வெளிப்படுத்தினார் ஹர்பஜன் சிங். 2வது டெஸ்ட் போட்டியில் 2வது இன்னிங்சில் 46 ரன்களை எடுத்தது மட்டுமே இவர் செய்த பெரிய விடயம். இந்த நிலையில் நூதனமான ஒரு புகாரைக் தெரிவித்துள்ளார் ஹர்பஜன் சிங். இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் இந்தத் தொடரில் ஒரு ஹாட்ரிக் சாதனை செய்தார். தன்னைப் பார்த்து கொப்பி அடித்து தான் பிராட் இந்த சாதனையை செய்து விட்டார் என்று தற்போது ஹர்பஜன் சிங் புகார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 2001 ம் ஆண்டு நான் டெஸ்ட் ஹாட்ரிக் சாதனையைச் செய்தேன். நான் அப்போது செய்த அதே பாணியை, அதே முயற்சிகளை என்னிடம் முன் அனுமதி பெறாமல் கொப்பி அடித்து விட்டார் பிராட். இது காப்புரிமை சட்டத்தின் கீழ் விதி மீறலாகும். எனவே பிராட் மீது வழக்கு தொடருவது குறித்து எனது சட்ட நிபுணர் குழு ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது. இரண்டு ஹாட்ரிக் நிகழ்வுகளிலும், 2வது அவுட் எல்.பி.டபிள்யூ மூலம் வந்தது. இரண்டிலும் நான் சம்பந்தப்பட்டுள்ளேன். இது எனக்கு வேதனையாக இருக்கிறது. எனது தொழிலில் நான் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அவர் அப்பட்டமாக கொப்பி அடித்துள்ளார். இதை ஏற்க முடியாது என்றார் ஹர்பஜன் சிங். ஹர்பஜன் சிங் கூறுவதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஒரு நிருபர் குறுக்கிட்டு, இப்படி வீணான வழக்குகளைப் போட்டு உங்களது சக்தியை வீணடிப்பதற்குப் பதில் விளையாட்டில் ஆர்வம் காட்டலாமே என்று கேட்டார். இதைக் கேட்டு கோபமான ஹர்பஜன் சிங், என்ன சக்தி வீணாகி விடப் போகிறது என்று கோபத்துடன் கேட்டார்.

### ஐ.சி.சி. ஒருநாள் போட்டி தரவரிசை பட்டியல்: இலங்கை அணி முதலிடம் பெற வாய்ப்பு

ஐ.சி.சி. ஒருநாள் போட்டிக்கான தரவரிசை பட்டியலில், இலங்கை அணி முதன்முறையாக 'நம்பர்1' இடம் பிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில் வெளியிடப்படும் ஒருநாள் போட்டிக்கான தரவரிசை பட்டியலில், தற்போது 130 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணி முதலிடத்தில் உள்ளது. இலங்கை (118 புள்ளி), இந்தியா (117 புள்ளி), தென் ஆப்பிரிக்கா (116 புள்ளி), இங்கிலாந்து (106 புள்ளி) உள்ளிட்ட அணிகள் 'டாப் 5' வரிசையில் உள்ளன. இப்பட்டியலில், முதலிடம் பிடிக்கும் வாய்ப்பு இலங்கை அணிக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி, பல்லேகெலே மைதானத்தில் நடக்கிறது. இத்தொடரை இலங்கை அணி 4-1 எனக் கைப்பற்றும் பட்சத்தில், 125 புள்ளிகளுடன் முதல் முறையாக 'நம்பர் 1' இடத்தை அடையலாம். இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 124 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்படும். இப்பட்டியலில் அவுஸ்திரேலிய அணி, கடந்த 2009 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இலங்கை அணி 5 - 0 எனக் கைப்பற்றும் பட்சத்தில், 129 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறும். அவுஸ்திரேலிய அணி 121 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்படும். ஒருவேளை அவுஸ்திரேலிய அணி, 4 - 1 எனக் கைப்பற்றும் பட்சத்தில் 133 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கும். இலங்கை அணி 115 புள்ளிகளுடன் நான்காவது இடத்துக்கு தள்ளப்படும். அவுஸ்திரேலிய அணி 5 - 0 என கைப்பற்றும் பட்சத்தில், 136 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கும். இலங்கை அணி 112 புள்ளிகளுடன் நான்காவது இடத்துக்கு தள்ளப்படும்.

### சர்வதேச ஒருநாள் கிரிக்கட் தரவரிசைப் பட்டியல்: இந்திய அணி பின்னடைவு

ஐ.சி.சி. ஒருநாள் கிரிக்கட் புதிய தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி 3 வது இடத்திற்கு சற்றே பின்னடைவு கண்டுள்ளது. உலகக்கோப்பையை வென்றும் இலங்கைக்குப் பின்னால் தான் இந்திய அணி தற்போது உள்ளது. கடந்த ஓராண்டில் இந்திய அணி 9 ஒருநாள் போட்டிகளில் தோல்வி தழுவியுள்ளது. ஒட்டு மொத்தமாக வெற்றி, தோல்வி விகிதத்தைக் கணக்கு எடுத்துப் பார்த்தால் இந்திய அணி யின் வெற்றி, தோல்வி விகிதம் இலங்கை, அவுஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்க அணிகளைக் காட்டிலும் மோசமாக உள்ளது. இதனால் இந்திய அணி 3 வது இடத்திற்குச் சரிந்தது.

### ஐ.சி.சி தரவரிசைப் பட்டியல்: இங்கிலாந்து அணி முன்னேற்றம்

ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இயான் பெல் உள்ளிட்ட இங்கிலாந்து வீரர்கள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். டெஸ்ட் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கட் கவுன்சில்(ஐ.சி.சி) துபாயில் நேற்று வெளியிட்டது. இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் சதம் கடந்து அசத்திய இங்கிலாந்து வீரர் இயான் பெல் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறினார். துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட மாட் பிரையர்(21வது இடம்), ஸ்டுவர்ட் பிராட் (44வது இடம்), டிம் பிரஸ்னன் (75வது இடம்) உள்ளிட்ட இங்கிலாந்து வீரர்கள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். இரண்டாவது டெஸ்டில் விளையாடாத இங்கிலாந்து வீரர் ஜோனாதன் டிராட் இரண்டு இடங்கள் பின்தங்கி 4வது இடம் பிடித்தார். துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய அலெஸ்டர் குக், ஆறு இடங்கள் பின்தங்கி 11வது இடம் பிடித்தார். கெவின் பீட்டர்சன் 15வது, கப்டன் ஸ்டிராஸ் 35வது இடத்தில் உள்ளனர். இந்தியா சார்பில் ராகுல் டிராவிட் நான்கு இடங்கள் முன்னேறி 11வது இடம் பிடித்தார். லார்ட்ஸ் மற்றும் நாட்டிங்காம் டெஸ்டில் அடுத்தடுத்து சதம் கடந்ததே இம்முன்னேற்றத்துக்கு காரணம். இரண்டாவது டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் அரைசதம் கடந்து ஆறுதல் அளித்த சச்சின் ஒரு இடம் முன்னேறி 3வது இடம் பிடித்தார். பெரிய அளவில் சோபிக்காத லட்சுமண் ஒரு இடம் பின்தங்கி 9வது இடம் பிடித்தார். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் ஏழாவது இடத்துக்கு முன்னேறினார். இரண்டாவது டெஸ்டில் வேகத்தில் அசத்திய மற்றொரு இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் டிம் பிரஸ்னன் 14 இடங்கள் முன்னேறி 25வது இடம் பிடித்தார். ஜேம்ஸ் ஆண்டர்சன், இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். இங்கிலாந்து சுழற்பந்துவீச்சாளர் சுவான், நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இந்தியா சார்பில் ஜாகிர் கான் (5வது இடம்), இஷந்த் சர்மா (7வது இடம்) உள்ளிட்டோர் டாப்-10 வரிசையில் உள்ளனர். சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் 12வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

### அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர்: இலங்கை அணியில் மலிங்கா, தரங்கா தெரிவு

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்க உள்ள இலங்கை அணியில், வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா, துவக்க வீரர் உபுல் தரங்கா உள்ளிட்டோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி, பல்லேகெலே மைதானத்தில் நடக்கிறது. ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட அணியை, இலங்கை கிரிக்கட் வாரியம் நேற்று அறி வித்தது. இதில் சமீபத்தில் முடிந்த இரண்டு போட்டிகள் கொண்ட 'டுவெண்டி 20' தொடரில் பங்கேற்காத, வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா, துவக்க வீரர் உபுல் தரங்கா, 'மிடில் ஓர்டர்' துடுப்பாட்ட வீரர் சமர சில்வா உள்ளிட்டோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இளம் வேகப்பந்து வீச்சாளர் 'மிந்தா எரங்கா, புதுமுக வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். 'டுவெண்டி 20' தொடரில் சுழற்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்ததால், ஒருநாள் தொடருக்கு ஐந்து சுழற்பந்து வீச்சாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 16 பேர் கொண்ட இலங்கை அணி: திலடெஸ்ட் கிரிக்கட்டில் 1,000 விக்கெட்டுகளை எடுக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது: முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கட்டில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை படைத்தவர் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். அவர், டெஸ்டில் 1,000 விக்கெட்டுகளை எடுக்க வேண்டும் என்ற ஆசை தனக்கு இருந்தது என்று தெரிவித்துள்ளார். ஆனால் காயங்களும், வயதானது போன்ற உணர்வும் ஓய்வு குறித்து தன்னைச் சிந்திக்க வைத்ததாக முரளிதரன் தெரிவித்தார். கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரில் காலேயில்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# பின்தள்ளப்படும் வட்டிவீத அதிகரிப்பு

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 347**

மத்திய வங்கியின் வட்டிவீதத்தை கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்ணி அவர்கள் 2011ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் அதிகரிக்கலாம் என பொருளாதார நிபுணர்களால் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் ஏற்பட்டுள்ள பொருளா தார நெருக்கடி, சிக்கல்கள் போன்றவற்றால் வட்டிவீத அதிகரிப்பு நிச்சயமாக பின்தள்ளப்படும் என எதிர்பார்க்கலாம். திரு. கார்ணியின் அறிக்கைகளின்படி, கனடிய வட்டிவீதம் அதிகரிக்கலாம் என பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்த்திருந் தார்கள். ஆனால் எதிர்பாராத பொருளாதார இறக்கத்தால், வட்டிவீதம் அடுத்த வருடம் (2012) ஆரம்பம் வரை அதிகரிக்கப்பட மாட்டாது என எதிர்பார்க்கலாம்.

அடமானக்கடனின் வட்டிவீதம், எந்த சந்தர்ப்பத்திலும் அதிகரிக்கலாம் என கவலை கொண்டிருந்த வீட்டு உரிமையாளர் களுக்கு சிறிது நிவாரணம் போலத்தான் தோன்றுகின்றது. இந்நிலைமை ஆதன வியாபாரத்திற்கு தென்பை கொடுக்கலாம்.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கடன்பழுவின் இக்கட்டான நெருக்கடியினால், மேலும் ஒரு பொருளாதார இறுக்கம் (Inflation) ஏற்படுமா? என பொருளாதார நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள். இதற்கு உலக பொருளாதாரம் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார சுமை, மார்ச் 11, 2011 இல் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம், அதனைத் தொடர்ந்த சுனாமி போன்ற நிகழ்வுகள், அண்மையில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கலவரம் (Riots), மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டு வரும் கிளர்ச்சிகள், சில்லியில் மாணவர்களால் ஏற்படுத்திய போராட்டம் உலக பொருளாதாரத்தின் வளர்ச்சியை முடக்கியது மட்டுமல்லாமல், வளர்ச்சியை எதிர் மறைவாக்கலாம் என்றே தோன்றுகின்றது. கடந்த இருவாரங்களிற்கு முன்பு இருந்த பொருளாதார நிலைமை இன்று இல்லை என்றே அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலைமை சற்று கடுமையாகவே தோன்றுகின்றது.

கனடிய பொருளாதாரம், இன்றைய நிலையில் ஆரோக்கியமாகவே காணப்படுகிறது. பொருளாதாரத்தில் AAA கிறடிட் கொண்ட நாடகவே காணப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலிருந்து (Fall 2010) கனடிய வட்டிவீதம் 1% ஆகவே உள்ளது. (முதன்மை வட்டி வீதம் 3% ஆகவும் 5 வருட மாறுகின்ற அடமானக் கடன் வட்டிவீதம் 3% - 0.90 = .1% ஆகக் காணப்படுகின்றது.)

செப்ரெம்பர் 07, 2011 இல் வட்டிவீதம் அதிகரிக்கலாம் என அனேகர் எதிர்பார்த்து இருந்தார்கள். இன்றைய நிலையில் வட்டி அதிகரிப்பு ஏற்படாது எனத்தோன்றுகின்றது. வீட்டு உரிமையாளர்களிற்கு சிறிது நிவாரணம் போலத்தான் தோன்றுகின்றது. அதுமட்டுமல்லாமல் சில பொருளாதார நிபுணர்கள், கனடிய வங்கியின் வட்டிவீதம் அதிகரிப்பதற்கு பதிலாக இறக்கலாம் அல்லது குறைக்கலாம் எனவும் எதிர்வு கூறுகின்றார்கள். (?) அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் பணவீக்கம் (Inflation) தலை எடுக்கலாம் என்ற நிலையும் உருவாகலாம்.

எது எவ்வாறாக இருந்தாலும் திரு. மார்க்கார்ணி மற்றும் கனடிய நிதி அமைச்சர் திரு. ஜிம் பிளகற்றி போன்றவர் கள், உலக பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, கனடிய வட்டிவீத அதிகரிப்பை நிச்சயமாக பின்தள்ளலாம் என எதிர்பார்க்கலாம் இவ்வாறான நிலைமை, கனடிய ஆதன வியாபாரத்தை சமநிலையில் வைத்திருக்கலாம்.

ஏற்கெனவே ரொறொன்ரோ பெரும்பாகத்தின் சில பகுதிகளில் ஆதன வியாபாரம் மந்தநிலையில் காணப்பட்டது. வட்டிவீத அதிகரிப்பு ஏற்படாது என்ற நிலைமை பங்குச் சந்தையில் ஏற்பட்ட அதள, பாதாள இறக்கம், பங்குச் சந்தையில் முதலிட்ட பணம் ஆதனச் சந்தைக்கு திரும்பலாம் எனவும் சிந்திக்கலாம்.

இவ்வாறான நிகழ்வுகள் ஆதன வியாபாரத்திற்கு ஊக்க சக்தியாகலாம். உலக பொருளாதாரம் அரசியல் மாற்றங் கள், காலநிலை மாற்றங்கள், தொழில்நுட்ப மாற்றங்களின் அதீத ஏற்ற இறக்கங்கள், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நாட்களும் பலவித எதிர்பார்ப்புடனே விடிகின்றது எனலாம்.


HomeLife/GTA
Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"
5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666



Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

CONDO. FOR SALE



SHEPPARD & MCCOWAN
2 Bedroom + 1 parking
condo for sale.
Asking Price $154,900.

HOUSE FOR SALE
JUST NORTH OF NEWMARKET
5 Acre land + home.
Raised bungalow. Walk-out
bsmt , renovated 3 washrooms

CONDO. FOR SALE



WARDEN & FINCH
3 Bedroom condo
fer sale. Asking
price $139,900

FOR LEASE



FINCH & MIDDLEFIELD
1000 sq.ft. 2nd floor,
3rd floor, main floor
Next to Embassy Restaurant.
$15 Gross Rent.

CONDO FOR SALE
MCCOWAN & ELLESMERE
Brand new 1 bedroom + den.
(Den can be bedroom).
condo for sale.Walking
distance to Scarborough
Town Centre. Spectacular
view. 2 Minutes to hwy 401.
Asking $249,900

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease.
1000 sq.ft
Suitable For Various
Kind Of Uses, Close To
Kennedy Subway Station.

COMMERCIAL CONDO.
SALE OR LEASE
MARKHAM & STEELES
Builders blow-out sale
Red colour building.
Price starts from
$250,000

FOR LEASE



FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA
Square Shopping Mall.
Renovated unit.

# காக்க காக்க...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

8. நுகர்வியல் - அதாவது These are shopping riots - இது Manchester Guardian கட்டுரையாளர் Zoe Williams இன் கூற்று. மக்களிடம் எதுவும் இல்லாத போது, அவர்களால் நுகரமுடியாத பொருட்கள் மீது ஏற்படும் ஆசையால் ஏற்படுத்தப்பட்ட வன்முறையே இது. தங்களது உண்மை நிலையை ஏற்றுக் கொள்ள இவர்களால் முடிவதில்லை. அதன் வெளிப்பாடு இது என கட்டுரையாளர் எழுதியுள்ளார்.

9. சந்தர்ப்பவாதம். தக்க சமயத்துக்காக காத்திருந்து மற்றவர்கள் கொள்ளையடிக்கும் பொழுது தாங்களும் இணைந்து கொள்ளல் இக்கூற்றை Irish Times பத்திரிகை எழுதியுள்ளது.

10. நவீன தொழில்நுட்பம் - முகநூல், இலத்திரனிய கடிதம் போன்றவற்றினூடாக வன்முறையாளர்கள் திரட்டப்படுகின்றார்கள். இவ்வாறு உதவி பொலிஸ் அத்தியட்சர் கூறியுள்ளார். மத்திய கிழக்கில் எழுச்சி ஏற்பட்ட பொழுது முகநூல், இலத்திரனிய கடிதம் போன்றவையே மக்களை அணி திரட்ட பயன்படுத்தப்பட்டன.

11. பிரித்தானிய தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Stuart Bell இந்தக் கலவரங்கள் வேலை வாய்ப்பின்மைக்கு எதிராகவோ, அரசாங்க சமூக கொடுப்பனவு வெட்டாலோ ஏற்படவில்லை. மாறாக ரியுனிசியாவில் இருந்து ஆரம்பமானது என யுரோப்பா தொலைக்காட்சி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

12. Skander என்ற எகிப்திய நவீன தொழில் நுட்ப புரட்சியாளர் (The cyberactivists arrested) லண்டன் பற்றி தெரிவித்த கருத்து இது 'Maybe they don't have a clear political goal, or maybe no political goal at all, but these young people have gone out to express their frustration," ஆம் இவர்கள் தங்கள் மீது தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறை களுக்கும் காட்டுமிராண்டித்தனத்துக்கும் எதிராக கிளர்ச்சி செய்கின்றனர்.

13. Michael Ruppert, founder of the Collapse Network, Global Research TV க்கு அளித்த செவ்வியில் 'இதன் பின்னணி யில் வங்கிகள், மிகப் பெரிய நிறுவனங்கள் உள்ளன. இவைதான் வன்முறையை தூண்டி விடுகின்றன. இது அரேபிய போராட்டத்தின் தொடர்ச்சியல்ல. சந்ததிகளின் கிளர்ச்சி. (This is generational revolution) இந்த மக்களுக்கு எந்தவித வாழ்வியல் நம்பிக்கையும் இல்லை. அவர்களின் போராட்டம் இது. ஆனால் இந்த போராட்ட முறை தவறானது. நாங்கள் அனைவரும் வங்கிகளில் முதலீடு செய்வதை தவிர்க்க வேண்டும். வங்கிகளில் உள்ள முதலீடுகளை மீளப் பெறுவதன் மூலம், வங்கிகளின் உள் கட்டமைப்பு புனரமைப்புச் செய்யப்படும். அங்கிருந்து ஒரு புதிய உள் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.' என்றார். இவரது கருத்துக்கள் முக்கியமானவை. இப்போராட்டங்கள் உலகரங்கில் ஒரு புதிய புரட்சிக்கான ஆரம்பத்தில் உள்ளன.



14. AlJazeera இணையத்தில் Richard Hall வன்முறையாளர்களை புரிந்து கொள்ள முயற்சியுங்கள், அவர்களை கண்டிக்க வேண்டாம் எனக் கோரியுள்ளார். உண்மையும் அது தான். இவ்வன்முறைகள் மத்திய கிழக்கின் தொடர்ச்சி என பல அரசி யல்வாதிகள் குற்றஞ்சுமத்தியுள்ளார்கள். மத்திய கிழக்கிற்கும் லண்டனிற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன என்பது உண்மையே. இரண்டும் அடிப்படையில் வேலையின்மை, வறுமை போன்ற விடயங்களின் வெளிப்பாடாகவும் உள்ளன. மத்திய கிழக்கில் சர்வாதிகாரிகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்கின்றார்கள். கொடூர ஆட்சிக்கு எதிராக போராடுகின்றார்கள். அவர்களை அடிபணிய வைக்கின்றார்கள். சிரியாவில் அரச ஒடுக்குமுறைக்கு நின்று போராடுகின்றார்கள். லண்டனில் திட்டமிட்டு ஒடுக்கும் ஒரு குடியாட்சி அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்கின்றார்கள். மத்தியகிழக்கில் போராடுபவர்களிடம் ஒரு நம்பிக்கை இருந்தது. லண்டனில் போராடுபவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்கள். போராட்டம் தங்களுக்கு சாதகமாக முடியுமா என்ற கேள்விக்குறியுடன் இயங்குபவர்கள். எங்கு செல்வது? என்ன செய்வது என தெரி யாமல் போராடுகின்றார்கள். இரண்டு பிரதான பின்னணிகளுக்கு எதிராக இப்போராட்டங்கள் வெடித்துள்ளன. ஒன்று சமூகப்பின்னணி, இரண்டாவது பொருளாதார பின்னணி.

## சமூக-அரசியல் பின்னணி

1.கறுப்பின மக்களை தொடர்ச்சியாக அடிமைகள் நிலையில் வைத்திருத்தல். அமெரிக்காவின் பல பாகங்களில் இதனை கண்கூடாக பார்க்கலாம்.
2.அவர்களின் பொருளாதார வளங்களை சுரண்டுவதற்கு இது உதவும்.
3.அவர்களை பிரதிநிதிப்படுத்துவதுடன், அவர்களது போராட்ட குணாம்சத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.
4.வெள்ளை இனத்தவருடன் வேலைவாய்ப்பு, கல்வி, வியாபாரம், அரசியல் போன்ற விடயங்களில் போட்டிகளை தவிர்த்தல்.
5.வெள்ளை இனத்தவருடன் சண்டையிடாது ஒற்றுமையாக இருத்தல்.

இந்த ஐந்து பிரதான காரணிகளுக்காக கறுப்பின மக்களின் சமூக வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகின்றது. இவை பல பொருளாதார லாபங்களையும் கொடுக்கின்றன. அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்திலும் கறுப்பின மக்கள் இந்தியாவை விட மிகமோசமான சேரிகளில் வாழ்கின்றனர் என்பது உண்மை. மிச்சிக்கன் அற்லாண்டா நியுயோர்க் போன்ற மாநிலங்களில் இச்சேரிகளை அதிகளவு காணலாம். இன்றெழுந்துள்ள பொருளாதார நெருக்கடிகளில் அதிகம் பாதிக்கப்படுவோர் வந்தேறு குடியேறிகளான என்னைப் போன்றவர்கள். இதற்குள் கறுப்பின மக்கள், தெற்காசியர் அனைவரும் அடங்கும். நோர்வேயில் நடைபெற்றதன் பின்னணியினை ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிப்படும். வட அமெரிக்காவை கைப்பிடித்த பிரித்தானிய, பிரெஞ்சு அரசுகளை செவ்விந்தியருக்கு எதிராக மேற்கண்ட காரணிகளை பயன்படுத்தின. இன்று செவ்விந்தியர் குரலின்றி தமது நிலத்திலேயே வாழ்கின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் சமூக கொடுப்பனவுகள் இவர்களை வாழ்வின் அடுத்த கட்டத்துக்கு செல்ல விடாமல் தடுக்கின்றது. எந்தவித மாற்று வளர்ச்சி முறைகளன்றி சமூக கொடுப்பனவுகளை மாத்திரமே கொடுப்பது எந்த நிலையிலும் அந்த சமூகத்தை உயர்த்திவிடாது. இதனையே மேற்கு நாடுகள் மிகச் சிறப்பாக சிறுபான்மையினர் மீது செய்கின்றன. இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் கூட நூறு வருடங்களுக்கு மேலாக அதே நிலையில் தான் உள்ளார்கள் உழைப்பையும் உயிரையும் சுரண்டும் கொடுங்கோல் இங்கு நடைபெறுகின்றது. இவர்களிடம் எந்தவித சமூக பொருளாதார உயர்வும் இல்லை. இவர்களால் லண்டனில் நடைபெற்ற கலவரம் போன்று செய்ய முடியுமா?

உலகமயமாதலின் வளர்ச்சி பல பெரிய முதலாளிகள் அதிக லாபத்துக்காக குறைந்த விலையில் பொருள் உற்பத்தியை நாடுகின்றார்கள். சீனா, இந்தியா போன்ற நாடுகளில் குறைந்த விலையில் பொருட்கள் உற்பத்தியாகின்றன. நூறு வருடங்களுக்கு முன்னர் சீனா, இந்தியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் அடிமை-களாக மேற்கு நாட்டு தோட்டங்களையும், தொழிலகங்களையும் அலங்கரித்தனர். இன்று தங்களது நாட்டிலேயே அடிமைகளாக வேலை செய்கின்றனர். இதற்கு அந்த நாடுகளும் உதவிபுரிகின்றன. இந்த மாற்றம் மேற்கு நாடுகளில் மத்திய வர்க்கத்தை, கீழ் நிலைக்கு தள்ளியது. கலவரம் நடைபெற்ற நகரங்களில் சுமார் 30 வீதமானோர் வேலையற்றுள்ளனர். கார்ல் மாக்ஸ் கூறியது. இங்கு ஒத்துப் போகின்றது: "An accumulation of wealth at one pole of society indicates an accumulation of misery and overwork at the other" 'ஒரு இடத்தில் செல்வம் குவிக்கப்படும் பொழுது மற்ற இடத்தில் அவல நிலையை தோற்றுவிக்கும்' இதுவே இன்றைய முதலாளித்துவ நிலை.

இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரோன் பதவியேற்ற சில மாதங்களில் Multi Culturalisam encouraged people to live "separate lives" apart from the mainstream. இதே போன்ற கருத்தை ஜேர்மனி யின அதிபர் Angela Markel ம் கருத்து தெரிவித்திருந்தார். இன்று மேற்கு நாடுகளுக்கு தொழிலாளர்களின் தேவையற்று விட்டது. சீனா, இந்தியாவில் ஊசியில் இருந்து கார் வரை தயாரிக்கப்படுகின்றன. மேற்கு நாடுகள் தங்களது நாடுகளில் உயர் வர்க்கத்தினர் வாழ்வதையே விரும்புகின்றார் கள். இதன் நடைமுறையை இன்று கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் காணலாம். முன்னொரு காலத்தில் புகையிரத பாதைகள் அமைப்பதற்கும், மலைகளை குடைவதற்கும், வீதிகள் போடவும் கூலிகள் தேவைப்பட்டார்கள். கனடாவில் அவ்வாறு வரவழைக்கப்பட்ட சீனர், வேலை முடிந்து நாடு திரும்பிய பின் மீண்டும் கனடாவிற்குள் வருவதற்கு தலை வரி அறவிடப்பட்டது. இன்று இதே வேலை களை கனரக இயந்திரங்கள் செய்கின்றன. இதனை செயல்படுத்த சிறந்த தொழில்நுட்ப வியலாளர்கள் இருந்தால் செய்து முடிக்கலாம்.

இக்கருத்தை வைத்துப் பார்க்கும் பொழுது இக்கலவரத்தின் பின்னரும் ஒடுக்கப்பட்ட கறுப்பின மக்களின் வாழ்வியல் வளர்ச்சியை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# அலை அலையான...

## 03ஆம் பக்கத்தொடர்ச்சி

கையாலாகாத ஒரு நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

இந்தக் கையறு நிலையில் இருந்து மீண்டு எழுவதற்காக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இந்தியா போன்ற பல நாடுகளின் உதவிகளை நாடி, அவற்றைப் பெற்று, வெற்றிகரமாக விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான, அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருந்தபோது, வேறு வழியில்லாத நிலையிலேயே இராணுவ வழிமுறையை விடுதலைப்புலிகள் தீவிரமாக முன்னெடுத்திருந்தார்கள். இதனால், வன்முறைகளைப் பிரயோகித்த விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதும், அரசியல் தீர்வொன்றை நோக்கி இலங்கை அரசு உடனடியாக நகரும், நகர வேண்டும் என சர்வதேசம் எதிர்பார்த்திருந்தது.

உள்நாட்டு யுத்தத்தில் விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்டுவதற்கு உதவி புரிந்த இந்தியா, அமெரிக்கா உட்பட அனேகமான நாடுகளும் இந்த எதிர்பார்ப்பையே கொண்டிருந்தன, இன்னும் கொண்டிருக்கின்றன.

எதிர்பாராத விதமாக இறுதி யுத்தச் செயற்பாடுகள் குறித்து வெளிப்படைத் தன்மையை கைக்கொள்ளமுடியாது என முரண்டு பிடிக்கும் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் முரட்டுத்தனமான போக்கை வெளிப்படுத்தி வருவது இந்த நாடுகளுக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்திருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வாக அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஆனால், இலங்கை அரசாங்கமோ அத்தகைய ஓர் அதிகாரப் பகிர்வு அவசியமில்லை. தற்போது இருக்கின்ற அரசியலமைப்பிற்கு அமைவான அதிகாரங்களே போதுமானது. எனவே பேச்சுவார்த்தைகள் என நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை. போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்றம் செய்து, அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தாலே போதுமானது என அரசாங்கத் தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ச கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்குப் பொறுப்பாகவுள்ள, அவரது மற்றுமொரு சகோதரராகிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவும் பிரச்சினைகளைப் பேசி தீர்த்துக்கொள்ளலாம் என கூறி வருகின்றார்கள். ஆனால் எவ்வாறு எந்தப் பிரச்சினைகைள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்பது பற்றி அவர்கள் இன்னும் தெளிவான தகவல்களைத் தெரிவிக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் போருக்குப் பிந்திய இந்தப் போக்கு பல தரப்பிலும் பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த ஏமாற்றமே அமெரிக்கா இப்போது விடுத்துள்ள எச்சரிக்கையின் மூலம் பிரதிபலித்திருக்கின்றது.



யுத்தம் முடிவடைந்ததையடுத்து, இனப்பிரச்சினைக்கு முடிவு காண வேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்திய தமிழக முதல்வர் ஜெயலலிதாவை 'மைண்ட் யுவர் பிஸினஸ்' என்ற வகையில் கண்டித்திருந்த இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்சவுக்கு கடும் தொனியில் ஜயலலிதா கண்டனத்தை வெளியிட்டுள்ளார். இது இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை கொண்டுள்ள கடுமையான போக்கிற்கு விடுக்கப்பட்டுள்ள மற்றுமொரு எச்சரிக்கையாகவே இராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

வெளிநாடுகளில் மட்டுமல்லாமல், உள்நாட்டிலும். நிறைவேற்று அதிகார பலம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் எதையும் நடைமுறைப்படுத்த வல்ல அதிகாரம் கொண்டவர்களாகத் திகழும் அவரது சகோதரர்கான பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோட்டாபாய, பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில், முழுமையான அதிகாரம் கொண்டுள்ளவருமான பசில் ராஜபக்ச ஆகியோரின் ஏமாற்று அரசியல் நடவடிக்கைகளுக்கு, நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு கிழக்குப் பிரதேச மக்கள் புள்ளடி மூலமாக பெரும் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும், அபிவிருத்திச் செயற்பாடுகளையும் குழப்பியடித்து, போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பெரிய அளவில் நன்மைகளைச் செய்துள்ளதாக அரசாங்கத்தினால் செய்யப்பட்ட பிரசாரத்தை முழுமையாக நிராகரிக்கும் வகையில் அரசாங்க சார்பு கட்சிகளைத் தோற்கடித்துள்ள வடக்கு கிழக்குப் பிரதேச மக்கள் இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை அமோகமாக வெற்றியடையச் செய்துள்ளனர். புள்ளடி அடையாளங்கள் மூலமாகத் தமிழ் மக்களின் தேர்தலின் ஊடான அதிரடி அரசாங்கத்திற்குப் பெரும் சினத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது.

அதேவேளை, யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து, நீண்டதோர் இழுபறியின் பின்னர் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இனப்பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த அரசாங்கம், எட்டு மாதங்களாக எதுவித முன்னேற்றத்தையும் காட்டாமல் வெறுமனே இழுத்தடித்து வந்தது.

ஏமாற்றுத்தனங்கள் மிகுந்த இந்த இழுத்தடிப்புப் பேச்சுவார்த்தைகளில் இனிமேலும் மினக்கெட்டு ஈடுபட முடியாது என இடித்துரைக்கும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மூன்று விடயங்களை முன்வைத்து அவை தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என கோரியிருக்கின்றது. இந்தக் கோரிக்கைக்கு இரண்டு வாரத்தினுள் பதிலளிக்க வேண்டும் என்ற காலக்கெடுவுடன் கூடிய நிபந்தனையையும் விதித்திருந்தது.

அமைதியான முறையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்த அதிரடி நடவடிக்கையினால் அரசாங்கம் நிலைகுலைந்து போயுள்ளது.

'தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளைப் போல நடந்து கொண்டிருக்கின்றார்கள்' 'தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்த நடவடிக்கை நியாய மற்றது' என்ற கூற்றுக்களின் மூலம் அரசாங்கம் இதனை வெளிப்படுத்தியிருக்கின்றது.

போர்க்குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன, அவை தொடர்பாக சர்வதேச விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஐநா மன்றத்தின் தருஸ்மன் அறிக்கை, அதனைத் தொடர்ந்து சனல் 4 வெளியிட்ட 'இலங்கையின் கொலைக்களங்கள்' தொலைக்காட்சிச் சித்திரத்தினால் ஏற்பட்டுள்ள சர்வதேச மட்டத்திலான அதிர்வலைகள் - அழுத்தங்கள், சர்வதேச விசாரணை இல்லாவிட்டால், உள்நாட்டில் சர்வதேச தரத்திலான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் எச்சரிக்கை, தமிழக முதல்வர் ஜயலலிதாவின் கடும் போக்கு, அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்கான தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிபந்தனைகள் என்பன, இனப்பிரச்சினை விவகாரம், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் ஆகிய விடயங்களில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டிற்கு விழுந்த அதிரடிகளாகவே கருதப்படுகின்றன.

இந்த அதிரடிகளினால், நிலைகுலைந்து எரிச்சலுக்கும், சீற்றத்திற்கும் உள்ளாகியிருக்கின்ற இலங்கை அரசாங்கம் அடுத்த கட்டமாக என்ன செய்யப் போகின்றது என்பது தெரியவில்லை.

இருப்பினும், இறுதி யுத்தம் நடைபெற்றதிலிருந்து இலங்கைக்கு மிகவும் வேண்டப்பட்டா நாடாக மாறியுள்ள சீனாவுக்கு கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது சர்வதேச மட்டத்தில் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து அவர் சீனத் தலைவர்களுடன் விரிவாகக் கலந்துரையாடியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதன் எதிரொலியாக என்ன வகையான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்கப் போகின்றார் என்பதைப் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை, இலங்கையின் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் அடுத்தவாரம் முக்கியமான பேச்சுக்களை நடத்துவதற்கு இந்தியா திகதி குறித்திருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இந்தச் சந்திப்பானது பல முக்கிய முடிவுகளை மேற்கொள்வதற்காகவே நடத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தச் சந்திப்பு இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நெம்புகோலாக அமையுமா அல்லது வெறும் புஸ்வாணமாகத்தான் மாறுமா என்பது அடுத்தடுத்த வாரங்களில் தெரியவரும்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தபாலில் வந்து கொண்டிருக்கும் அந்த சிறு பணத்தொகை

## ONTARIO ENERGY & PROPERTY TAX CREDIT

## கனடிய தகவல் தொடர் 154

தபாலில் வந்து கொண்டிருக்கும் அந்த சிறிய காசோலை இதுவரை கிடைக்க வேண்டியவர்களின் கையில் கிடைத்திருக்க வேண்டும். தங்களிடம் ஏற்கெனவே ஒன்ராரியோ மாகாண அரசு அறவிட்ட பணத்தில் ஒரு சிறு பகுதியினையே பகுதி பகுதியாக அனுப்பிக் கொண்டிருக்கிறது. அந்த சிறு தொகை காசோலை (Ontario Energy & Property Tax Credit) என்னும் பெயரில் வந்து கொண்டேயுள்ளது. இதுவரை பெற்றுக் கொண்டீர்களா?

**எதற்காக? எவருக்கு? இந்தக் காசோலையினை மாகாண அரசு அனுப்பி வைக்கின்றது?**

மக்களை கவர்வதற்காக ஆட்சியில் இருக்கும் அரசு 2009 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினையே தற்போது நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. வருமானம் குறைந்தவர்கள் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் ஒன்ராரியோ மாகாண வாசிகள் (Low to Middle Income Families in Ontario) என்னும் நிலையில் இருப்பவர்களுக்கு மட்டுமே இந்த சலுகை கிடைக்கின்றது.

ஏற்கெனவே பணமாக செலுத்திய (1) வீடு என்ற சொத்து வரி செலவுகள் (Property Tax) (2) மின்சக்தி, வீடுகளுக்கு வழங்கும் வெப்ப சக்திகளுக்குரிய செலவுகள் (Energy Expenses) ஆகியவற்றின் ஒரு பகுதியினை எந்த மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்களோ அதே பணத்தின் ஒரு பகுதியினை மீள வழங்குவோம் என ஏற்கெனவே அறிவித்ததன் பிரகாரமே அதனை பகுதி பகுதியாக திருப்பித்தர அரசு ஆரம்பித்துள்ளது.

**இப்பணத்தினை பெற உரித்துடைய வர்கள் யார்?**

1. 18 வயதுக்கு மேற்பட்டவராகவிருந்து ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

2. 2010 ஆம் ஆண்டுக்குரிய வருமானவரி பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுபவர் குடியிருப்பு வாடகை (Property Rental Payment) செலுத்துபவர் அல்லது சொந்த வீடாக இருந்தால் வீட்டு சொத்து வரி (Property Tax) செலுத்துபவர் என்பது வருமானப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் போது குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

3. நீண்டகால பராமரிக்கும் இல்லத்தில் (Public Long Term Care Home) தங்கியிருக்கும் நோயாளிகளுக்கும் ஒரு பகுதி பணம் (Energy Portion of This Credit) மீளபெறலாம்.

**இந்தப் பணம் எவ்வளவு தொகை? எப்போது? எந்த வழியில் அனுப்பி வைப்பார்கள்?**

2010 ஆம் ஆண்டுக்குரிய தாக்குதல் செய்த வருமானத்தின் அடிப்படையில் ஆக கூடுதலாக $900 டொலர் வரை அனுப்புவார்கள். முதியவர்களுக்கு (Qualifying Seniors) ஆகக் கூடுதலாக $1025 டொலர் வரை அனுப்புவார்கள். இங்கு இந்த தொகையினுள் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும்.

எவ்வளவு தொகை பணம் அனுப்ப தகுதியுடையவர் என தீர்மானிக்கப்பட்ட பின்பு அந்த குறிப்பிட்ட தொகை நான்கு தடவைகளில் பகுதி பகுதியாக பிரித்து அனுப்பி வைப்பார்கள்.
1. முதலில் யூலை 2011
2. இரண்டாவது தடவை டிசெம்பர் 2011
3. மூன்றாவது தடவை மார்ச் 2012
4. நான்காவது தடவை யூன் 2012

சிலருக்கு 2010 ஆம் ஆண்டுக்குரிய வருமானவரி பணம் மீளளிக்கும் போது வந்திருக்கும் காசோலையுடன் ஒன்றாக ஒரே தரத்தில் முழுத்தொகையும் வந்திருக்கும் அல்லது செலுத்த வேண்டிய வருமான வரியில் இத்தொகையினை ஒரே தரத்தில் கழித்தும் இருப்பார்கள்.

பகுதி பகுதியாக அனுப்பி வைக்கும் போது முதல் காசோலையுடன் சேர்ந்து வரும் அறிக்கையில் (Statement) தொடர்ந்து எந்த மாதத்தில் எவ்வளவு தொகை அனுப்பி வைக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருக்கும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# காக்க காக்க...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்பார்க்க முடியாது. அமெரிக்க கலவரங்கள் அமெரிக்க கறுப்பின மக்கள் வளர்ச்சியில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இப்பொழுது கறுப்பின மக்களும் வழிகாட்டிகளும் அடுத்த போராட்ட முறைபற்றி சிந்திக்க வேண்டும்.

# ஆட்டம் காணும் அமெரிக்கா

கடந்த வாரம் அமெரிக்காவின் கடன் வாங்கும்-கொடுக்கும் திறனை AAAல் இருந்து AA க்கு Standard & Poor's (S&P) மாற்றியது. மற்றைய ஆய்வு நிறுவனங்கள் அமெரிக்காவின் திறனில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. S & P இதற்கான காரணத்தை தெரிவிக்கும் பொழுது, திடகாத்திரமற்ற அமெரிக்க அரசியலே இவ் மாற்றத்துக்கான காரணம். பொருளாதார தேய்வு அல்ல எனத் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து பங்குச் சந்தைகள் பெரும் வீழ்ச்சி பெற்றன. பின்னர் ஏறுவதும், இறங்குவதுமாக விளையாடிக் கொண்டிருக் கின்றன. வீழ்ச்சிக்கான காரணம் AAA ல் இருந்து AA க்கு மாற்றியது காரணம் என பொருளாதார ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் உண்மையதுவல்ல. பங்குச் சந்தை வீழ்ச்சிக்கு காரணம், பொருளாதார வீழ்ச்சியே. இதனால் வேலையின்மை வீதம் அதிகரிக்கின்றது. இது வட்டி வீதம் குறைக்கப்பட காரணமாக உள்ளது.



பல மிகப் பெரிய நிறுவனங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. BMW ன் விற்பனை 16 வீதத்தால் அதிகரித்துள்ளது. Porsche முதல் மூன்று மாத லாபம் 59 வீதத்தால் அதிகரித்துள்ளது. Mercedes-Benz ன் மிக அதிகளவு விலையுள்ள காரான S-Class sedans ன் (200,000 டொலர்கள்) விற்பனை யூலை மாதம் 14 வீதத்தால் அதிகரித்துள்ளது. இவை அமெரிக்காவில் பெரிய முதலாளிகள் லாபத்தை அள்ளிச் செல்கின்றனர். மத்திய கீழ்தட்டு மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதைக் காட்டின றது அமெரிக்க சென்சஸ் அறிக்கையின்படி சாதாரண குடும்பத்து வருமானம் 28 வீதத்தால் குறைந்துள்ளது. 45.8 மில்லியன் அமெரிக்கர்கள் அதாவது மொத்த சனத்தொகையின் 15 வீதமானோர் உணவு முத்திரையில் தங்கியுள்ளனர். இதிலும் வெட்டு விழப்போகின்றது. இந்த மக்கள் வீதிக்கு வரப்போகின்றனர். வேலையின்மை வீதம் தற்போது 9. இது இன்னம் சில வருடங்களில் 22 வீதத்தை தாண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது. வேலை செய்வோரின் வருமானம் குறைந்துள்ளது. அதே சமயம் C.E.O எனப்படும் தலைமை அதிகாரியின் வருமானம் அதி-கரித்துக் கொண்டு செல்கின்றது. Deloitte என்ற நிறுவனத்தின் ஆய்வின்படி செல்வந்தர்களின் வருமானம் 225 வீதத்தால் 2020ல் அதி-கரித்திருக்கும். அமெரிக்காவின் வருமானம் 0.1வீதத்தினரின் கைகளில் உள்ளன.

GE, Verizon, Boeing, Wells Fargo, and Fed Ex போன்ற நிறுவனங்கள் வரியாக -0.7 -9.2வீதத்தையே செலுத்தியுள்ளன. வருமான வரிக் குறைப்பால் 30.4 இல் இருந்து 22.4 க்கு குறைத்ததன் மூலம் செல்வந்தர்கள் ஆண்டு ஒன்றிக்கு 136000 டொலர்களை சேமிக்கின்றார். தங்கத்துடன் ஒப்பிடும் பொழுது டொலரின் பெறுமதி குறைகின்றது.

இக்காரணங்கள் அமெரிக்காவிற்கு மாத்திரமல்ல வளர்ந்த நாடுகள் அனைத்துக்கும் பொருந்தும். இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதான காரணம் ஒரு சிலரின் கைகளில் செல்வம் வந்து குவிகின்றது. இதனை ஆங்கிலத்தில் Oligarchy என்பார்கள். இது ஒரு கிரேக்கச் சொல். இதற்கு பல உதாரணங்கள் உண்டு. 1830களில் கனடா Upper Canada வினரால் கட்டுப்படுத்தப்பட்டது. இது இனறைய புவயும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுமாகும். அதே போல் இலங்கையில் மகிந்த குடும்பம். வெகு அண்மையில் தமிழ்நாட்டில் கருணாநிதிக் குடும்பம். அமெரிக்காவில் ஒரு குறிப்பிட்ட செல்வந்தர்களே அரசியலை தீர்மானிக்கின்றார்கள்.

அடுத்த வருடம் நடைபெறும் அமெரிக்க தேர்தல்களில் ரிப்பளிக்கன் வேட்பாளர் தேர்வின் கூட்டமொன்றில் பேசிய வேட்பாளர் ஒருவர் கோப்பிரெட் நிறுவனங்கள் எமது மக்கள் எனக் கூறியுள்ளார். இக்கூற்றே இவர்கள் யாருக்காக ஆட்சியமைக்கப் போகின்றார்கள் என்பது தெளிவாக்கியுள்ளார்கள்.

# ரத்த அழுத்தம் வராமல் தடுக்க

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## *Avoid Blood Pressure*

இன்றைய உலகில் 65 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் ரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ரத்த அழுத்த நோய் எவ்வாறு ஏற்படுகின்றது, இதற்கு காரணமென்ன? இதனை தடுக்க முடியுமா? என கேள்விகள் எழுகின்றன.

### ரத்த அழுத்தம் என்றால் என்ன?

உடலுக்குத் தேவையான உணவும் தண்ணீரும் பிராணவாயுவும் எப்போதும் கிடைக்கச் செய்யவும் அதிலிருந்து உண்டாகும் கழிவுப் பொருட்களை வெளியேறச் செய்யவும் ஒரு அமைப்பு உடலுக்குத் தேவை. அந்த அமைப்புத்தான் இரத்த ஓட்டம் என்பது. இந்த ரத்த ஓட்டம் ஒருவித அழுத்தத்தினால்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இதற்குத்தான் ரத்த அழுத்தம் (Blood Pressure) என்று பெயர்.

**ரத்த அழுத்தம் உண்டாவதன் காரணங்கள்.**

உயர் ரத்த அழுத்தத்தின் சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் வகைகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. முதல் நிலை உயர் அழுத்தம் (Essential Hyper Tension) இதில் பரம்பரை அணுக்கோளாறும் அடங்கும்.
2. உயர் ரத்த அழுத்தம் 2வது நிலை (Secondary Hyper Tension) என்று பெயர்.

95 சதவீத உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஹார்மோன்களின் (Harmones) அளவு மாறுதல் சிறுநீரக கோளாறுகள், ரத்தம் சிறுநீரகத்திற்கு குறைவாகச் செல்லுதல் போன்றவை ஏற்படுகிறது. கவலை, பதட்டம், பயம், மனஇறுக்கம் போன்றவற்றால் ரத்த அழுத்தம் கூடலாம். அதிகமாக உப்பு (Sodium) உட்கொள்வதால் ரத்தம் அதன் அடர்த்தி நிலையைக் குறைக்க உடலில் உள்ள நீரை அதிகமாக எடுத்துக் கொண்டு சிறுநீரகம் மூலமாக அதை வெளியேற்ற முயற்சிக்கிறது. இதனால் ரத்த அழுத்தம் கூடுகிறது.

இக்காலத்தில் இளம் வயதினர் புட்டியில் அடைத்து வைக்கப்பட்ட திடீர் உணவுகள், குளிரூட்டப்பட்ட உணவு வகைகள், ருசிக்காக தயாரிக்கப்பட்ட கொழுப்பு நிறைந்த உணவு வகைகள் என்பவற்றை அடிக்கடி உண்பதால் இளம்மையிலேயே இந்நோய்க்கு ஆளாகின்றனர். அடுத்து வயது ஆக ஆக இரத்த நாளங்களின் சுருங்கி விரியும் தன்மை அதிகமாகி 40-45 வயது கால கட்டத்தில் மிகவும் அதிகமாகி அதிக இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. அத்துடன் உயர் இரத்த அழுத்தம் பல நோய்களுக்கு மூலகாரணமாக அமைகிறது.

### இரத்த அழுத்த நோயைத் தடுக்க

உடலுக்கும் மனதிற்கும் போதிய பயிற்சி தேவை. இவை இரண்டும் சீராக இருந்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து அதுவராமல் தடுக்கும்.

### உணவுக் கட்டுப்பாடு

எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவை மட்டுமே உண்ணவேண்டும். வயிறு புடைக்க உண்பதைத் தவிர்க்கவும். முதலில் உண்ட உணவு செரிமானமாகி பசி எடுக்கும் முன்பே அடுத்த உணவை உண்பதும், நீண்ட நேரம் பட்டினி கிடப்பதும் இரத்த அழுத்ததிற்கு காரணமாக அமையும்.

2. எண்ணெயில் பொரித்த உணவுகளை தவிர்க்கவும். மாமிசம், கொழுப்பு வகைகளை அறவே நீக்க வேண்டும். புளிப்பு மசாலா அதிகமான உணவுகள், அதிக வாயுவை உருவாக்கும் உணவுகள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
3. உணவில் அதிக கீரை வகைகள், பச்சைக்காய் கறிகள் பழங்கள் போன்றவற்றை சேர்க்க வேண்டும். கறிவேப்பிலை அதிகமாக சேர்க்க வேண்டும். காலை உணவு கண்டிப்பாக சாப்பிட வேண்டும்.
4. உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும். உணவு அருந்தியபின்பு உடனே தூங்கக் கூடாது. பகல் தூக்கத்தைக் தவிர்க்கவும். தொடர் சிற்றின்பத்தில் ஈடுபடுவதும் எந்த நேரமும் மன உளைச்சலுடன் இருப்பதையும் தவிர்த்துக் கொள்ளவும். புகை மது பழக்கத்தை அறவே நீக்க வேண்டும்.
5. பிற நோய்களுக்கான மாத்திரைகளை அதிகம் உட்கொள் பவர்களுக்கு ரத்த அழுத்தத்தின் அளவு அதிகரிக்க வாய்ப்புண்டு.

### யோகா பயிற்சியும் உடற்பயிற்சியும்

காலையில் 20 நிமிடமாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அத்துடன் யோகாசனம் பயிற்சி தினமும் செய்து வருபவர்களுக்கு மன அழுத்தம் குறைகிறது. உடல் கழிவுகள் முறையாக வெளியேற்றப்படுகிறது. ஜீரண சக்தி அதிகரிக்கிறது. இரத்த ஓட்டம், சீராக நடைபெறுகிறது. சுவாசக் கோளாறுகள் நீங்குகிறது.

இதனுடன் மூச்சுப் பயிற்சி தியானப் பயிற்சி என்பன செய்து வரும்போது இரண்டு வாரங்களுள் இரத்த அழுத்த இன்னல் நீங்குகிறது. எந்த வயதிலும் இந்த நோய் வர சிறிதளவும் வாய்ப்பு இல்லை. இது உறுதி. இதனை முதலில் ஒரு யோகாசன ஆசிரியரின் உதவிப்புடன் பழகி வருவது சிறந்தது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


ஒண்டாரியோவில் நீரிழிவுநோயுடன்

வாழும் வயது வந்தவர்களுக்கான ஒரு முக்கிய அறிவிப்பு

நீரிழிவுநோயுடன் வாழ்வது சுலபமில்லை, ஆனால் தினசரி அதை நிர்வகிப்பது என்றால் உண்மையில் உங்களை நன்றாகப் பராமரித்துக் கொள்வது என்று பொருள்.

நீரிழிவுநோய் உள்ளவர்கள் முறையாக செய்து கொள்ளவேண்டிய மூன்று முக்கிய சோதனைகள் உள்ளன. அவை:

- **HbA1C இரத்த குளுக்கோஸ் கட்டுப்பாட்டுச் சோதனை**, நோயாளிகள் இதை குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும்
- **LDL-C கொலஸ்டிரால் சோதனை**, நோயாளிகள் இதை வருடத்திற்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும்
- **விழித்திரை கண் பரிசோதனை**, நோயாளிகள் இதை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும்

இந்த மூன்று சோதனைகளையும் நீங்கள் கடைசியாக எப்பொழுது செய்து கொண்டீர்கள் என்பதை உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருக்குத் (தாதிகள் தலைமையில் இயங்கும் ஒரு கிளினிக்கைச் சேர்ந்த பொதுமருத்துவர் அல்லது தாதி) தெரிவிக்க உதவும் பொருட்டு, இந்த நீரிழிவுநோய் சோதனை அறிக்கை உருவாக்கப்பட்டது.

நீரிழிவுநோய் உள்ளவர்கள் முறையாக சோதனைகளை செய்து கொண்டால், அவர்களால் தங்கள் நீரிழிவுநோயை இன்னும் சிறப்பாக நிர்வகிக்க முடிகிறது என்பதுடன், சிக்கல்களையும் தவிர்க்க முடிகிறது. உங்களுக்கு ஒரு HbA1C சோதனை, LDL-C சோதனை அல்லது விழித்திரை கண் பரிசோதனை ஆகியவற்றுக்கான தருணம் கடந்து விட்டதா என்பதை உங்களுக்கும், உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருக்கும் நினைவூட்டுவதன் மூலம் இந்த நீரிழிவுநோய் சோதனை அறிக்கை உங்கள் நீரிழிவுநோய்ப் பராமரிப்பை இன்னும் சிறப்பாக நிர்வகிக்க உதவும் என்பதுடன், உங்கள் நீரிழிவுநோய்ப் பராமரிப்பு பற்றி உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருடன் நீங்கள் பேசவும் இது உங்களை ஊக்கப்படுத்தும்.

உங்கள் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்

நீரிழிவுநோய் சோதனை அறிக்கையை உருவாக்க வேண்டி, உங்கள் முதன்மைப் பராமரிப்பாளர், உங்கள் தனிப்பட்ட உடல்நலத் தகவல்களான உங்கள் பெயர், அடையாள (OHIP) எண், மற்றும் பிறந்த தேதி உள்ளிட்டவைகளை ஆரோக்கியம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சகத்துடன் (MOHLTC) பகிர்ந்து கொள்ளக்கூடும். உங்களுக்கு நீரிழிவுநோய் இருக்கிறதா என்பதையும் அவர் உறுதிப்படுத்துவார். பதிலுக்கு, இந்த மூன்று சோதனைகள் ஒவ்வொன்றும் செய்யப்பட்ட சமீபத்திய தேதிகளை MOHLTC பகிர்ந்து கொள்ளும். உங்கள் இரகசியத்தன்மை முக்கியம் என்பதுடன், இந்த அறிக்கையில் உங்களைப் பற்றிய தகவல்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை.

உங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று முடிவுசெய்தல்

உங்களைப் பற்றிய தகவல்களை உங்கள் முதன்மைப் பராமரிப்பாளர் MOHLTCக்குத் தெரிவிக்க வேண்டாம் என்றும், உங்கள் பராமரிப்பாளரின் நீரிழிவுநோய் சோதனை அறிக்கைகளில் நீங்கள் சேர்க்கப்பட வேண்டாம் என்றும் நீங்கள் முடிவெடுக்கலாம். உங்கள் ஒப்புதலை நீங்கள் அளிக்காமல் இருந்தாலோ அல்லது விலக்கிக் கொண்டாலோ, உங்கள் உடல்நலப் பராமரிப்பாளருடனான உங்கள் உறவுமுறையை இது எந்த விதத்திலும் பாதிக்காது என்பதுடன், அவர் உங்களுக்குத் தொடர்ந்து பராமரிப்பு அளிப்பார்.

உங்களைப் பற்றிய தகவல்களை உங்கள் முதன்மைப் பராமரிப்பாளர் MOHLTC க்குத் தெரிவிக்க வேண்டாம் என்பதற்கும், MOHLTC உங்கள் முதன்மைப் பராமரிப்பாளருக்கு அனுப்பும் நீரிழிவுநோய் சோதனை அறிக்கைகளில் நீங்கள் சேர்க்கப்பட வேண்டாம் என்பதற்குமான உங்கள் ஒப்புதலை நீங்கள் அளிக்காமல் இருக்கவோ அல்லது விலக்கிக் கொள்ளவோ விரும்பினால், **1-800-291-1405 (TTY: 1-800-387-5559)** என்ற எண்ணை அழைக்கவும். நீரிழிவுநோய் சோதனை அறிக்கைகளில் உங்கள் தகவல்கள் சேர்க்கப்பட வேண்டாம் என்பதற்கான உங்கள் ஒப்புதலை நீங்கள் ஏற்கனவே அளிக்காமல் இருந்திருந்தாலோ அல்லது விலக்கிக் கொண்டிருந்தாலோ, மீண்டும் அளிக்காமல் இருக்கவோ அல்லது விலக்கிக் கொள்ளவோ வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் ஒப்புதலை மீண்டும் அளிக்க விரும்பினால், மேலே உள்ள எண்ணை அழைத்துச் சொல்லவும்.

ஒண்டாரியோவில், தனிப்பட்ட உடல்நலத் தகவல்கள் பாதுகாப்புச் சட்டம், 2004 (PHIPA) என்பது, MOHLTC மற்றும் முதன்மைப் பராமரிப்பாளர்கள் உள்ளிட்ட உடல்நலத் தகவல்கள் பராமரிப்பாளர்களால் சேகரிப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, வைத்துக் கொள்ளப்பட்டு, வெளியிடப்படும் தனிப்பட்ட உடல்நலத் தகவல்களின் நிர்வாகம் குறித்த ஒரு சட்டம் ஆகும். நீரிழிவுநோய் சோதனை அறிக்கைக்காக உங்கள் தனிப்பட்ட உடல்நலத் தகவல்கள் சேகரிக்கப்படுவது, பயன்படுத்தப்படுவது, மற்றும் வெளியிடப்படுவது ஆகியவை பற்றி மேலும் விவரங்கள் அறிய விரும்பினால், மேலே உள்ள எண்களை அழைக்கவும். நீரிழிவுநோய் பற்றி மேலும் தகவல்கள் அறிய, பின்வரும் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: **ontario.ca/diabetes**.

ஒண்டாரியோ அரசாங்கம் இதற்கான செலவை ஏற்கிற

Ontario

# ஒன்ராறியோ மாநிலத் தேர்தல்

NDP யினுக்கும் கஷ்டகாலம்: கருத்துக்கணிப்பு தொடர்ந்து மூன்றாவது இடத்திலேதான் NDPயினை வைத்துள்ளது. ஆனால் கொஞ்சம் அச்சம் தரும் செய்திகளும் உள்ளன.

லிபரல் கட்சிக்கும் கொன்சர்வேற்றிவ் கட்சிக்குமிடையே உள்ள இடைவெளி குறைந்துள்ளமை நல்ல தொரு அறிகுறியாக இல்லை NDPயினுக்கும் கருத்துக் கணிபபின்படி ஆதரவு சிறிதளவு (22%லிருந்து 24%) கூடி இருப்பதைக் காட்டினாலும் லிபரல் கட்சி (26% இருந்து 28%) கொன்சர்வேற்றிவ் கட்சியை (41%த்திலிருந்து 38%) எட்டிப் பிடிக்க முயல்வது நல்ல அறிகுறி இல்லைத் தானே?

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று NDP தலைவர் ஜாக் லேய்ரனுடைய சுகவீனம் ஒன்ராறியோ தேர்தலில் NDP யினுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். அவருக்கென அபிமானிகள் உள்ளனர். அவரொத்த மக்கள் அபிமானம் பெற்ற இன்னொருவரைக் காண்பது NDP கட்சியினுக்கு கடினமான ஒரு செயலாக அமையும். தனக்குப் பதிலாகத் தற்காலிக தலைவர் ஒருவரை அவர் நிர்ணயித்துள்ளார். மொன்றியலினைச் சேர்ந்த அந்த அம்மையார் பெயர் நிக்கோல் ரேர்மல் (Nycole Turmel) என்பது. ஆனால் இத்தேர்வினில் ஜாக் லேய்ரன் தவறு செய்து விட்டாரோ என எண்ண வைக்கிறது. சென்ற மே மாதம் நடைபெற்ற தேர்தலில் தான் அந்த அம்மையார் நாடாளுமன்ற உறுப்பினராகி யுள்ளார். ஜாக் லேய்ரனுடைய தேர்வினுக்கு குயூபெக்கிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தொகை முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால் அப்பெண்மணி பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு சிறிது காலம் முன்னர் வரை குயூபெக்குவா கட்சியினது உறுப்பினர் அட்டைக்காவும் உறுப்பினராக



இருந்துள்ளார். தேர்தலில் போட்டியிடுவதற் காகவே அவர் அக்கட்சியில் இருந்து விலகியுள்ள்ளார். தனது நண்பர்களுக்காகவே தான் அக்கட்சியில் உறுப்பினரானார் என அந்த அம்மையார் சொல்வது குழந்தைத்தனமான விளக்கமாக உள்ளது.

ஆனால் இது முற்றாகத் தெரிந்தே ஜாக் லேய்ரன் அவரை தற்காலிக தலைவராக நியமித்துள்ளார் என்பது ஜாக் லேய்ரனுக்கும் பிரிவினை வாதிகளுக்கும் இடையே உள்ள உறவு பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தவும் செய்கிறது. 'பொதுத்தேர்தல் சமயத்தில் குயூபெக் மக்கள் பிரிவினைக்கு ஆதரவாக 50%த்துடன் ஒரு வாக்கு அதிகமாகப் பெற்றால் பிரிந்து செல்லலாம்' என கூறி சிலுசிலுப்பினை ஏற்படுத்தியவர் ஜாக் லேய்ரன். உச்ச நீதிமன்றம் அதற்கு முன்னர் அளித்த தீர்ப்பினில்

தெளிவான பெரும்பான்மை இருந்தால் தான் பிரிந்து செல்லலாம் என்றது. ஜாக் லேய்ரன் அதற்கு மாறாகப் பேசி குயூபெக் மக்களின் ஆதரவினைப் பெற்றார். ஆகவே அவருக்கும் குயூபெக் பிரிவினைவாதி களுக்குமிடையான உறவு பற்றிய சந்தேகம் இந்த அம்மையாரின் தெரிவினால் மேலும் வலுப் பெறுகிறது. ஜாக் லேய்ரன் புற்று நோயினுக்கான சிகிச்சைக்கு ஆளாகி யுள்ளார். அவர் சுகதேகியாகி, செப்ரம்பர் 19ந்தேதி நாடாளுமன்றம் மீண்டும் கூடுகையில் தலைமைப் பொறுப்பேற்று நாடாளுமன்றம் செல்வதாயிருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் அவர் செல்லாது விட்டால் அம்மையாரைப் நாடாளு மன்றத்தில் பிச்சுப் புடுங்குவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதற்கான அறிகுறிகள் ஹார்பரின் அண்மைக்காலக் கூற்றுக்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

லிபரல் கட்சியின் வீழ்ச்சிக்கு ஆரம்பம் கொடுத்தவர் அன்றைய கட்சித் தலைவராக விருந்த மொன்றியால்காரர் ஸ்ரீபன் டியொன் அவர்கள். அவர் இப்போதும் நாடாளுமன்றத் தில் உள்ளார். நிக்கோல் ரேர்மல் அம்மையாரைப் போல குயூபெக்கிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட NDP உறுப்பினர்களில் இன்னும் எத்தனை பேர்களிடம் இத்தகைய இரண்டு கட்சிகளுக்குமான தொடர்பு உள்ளது எனக் கேட்டுள்ளார். அவரது வினாவில் நியாயம் உள்ளது போலத் தெரிய வில்லையா?

NDP கட்சியினர் அம்மையாருக்கு பக்க பலமாகவே உள்ளனர். அவரது கட்சி விசுவாசத்தினை எந்த ஒரு NDP காரரும் சந்தேகிக்கவில்லை. ஆகவே ஏனைய கட்சிகளின் எதிர்ப்பினை அம்மையார் தாக்குப் பிடிப்பார் என எண்ண வைக்கிறது. பொப் ரேயினுடைய அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களில் மற்றெல்லோரும் ஒதுங்கிக் கொள்ள எஞ்சிய இருவரும் இந்தத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என ஒதுங்கிவிட்டமையும் NDP யினுக்குப் பாதிப்பே. பீற்றர் கோர்மோஸ் மற்றும் ஹாவார்ட் ஹொம்ரன் ஆகிய இரண்டு மூத்த அரசியல் வாதிகளும் தமது தொகுதிகளில் தொடர்ந்து வெற்றியீட்டி வந்தவர்கள். இம்முறையும் போட்டியிட்டால் அவர்களை வீழ்த்துவது முடியாத காரியம். ஆனால் இருவருமே தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்து விட்டனர். ஹோவார்ட் ஹொம்ரமன் பொப் ரேயினைத் தொடர்ந்து கட்சியின் தலைமையை ஏற்று நடத்தியவர். பீற்றர் கோர்மேஸ் பொப் ரேயின் அமைச்சரவையில் நீண்டகாலம் நிலைக்காதவர். அவர்கள் இருவருக்கு மிடையே கொள்கை இனரீதியான வேறுபாடும் இருந்தது. ஆனால் Sun பத்திரிகையின் 3ம் பக்கத்தில் கோர்மோசின் படம் வந்த காரணம் காட்டி அவரை மந்திரிப் பதவி யிலிருந்து தூக்கி வீசி விட்டார் பொப்றே. அவர்கள் அதற்குப் பின் ஜென்ம விரோதிகள். இந்த இருவருக்கும் பதிலாகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் புதிய வரவுககள் ஆகவே அவர்களின் வெற்றி வாய்ப்பினை அறுதியிட்டுச் சொல்வதற்கில்லை.

NDP தலைவி ஆண்டிறியா ஹோவார்த் ஒரு பிரச்சினையில் மற்றயை இருகட்சிகளுடன் எதிரும் புதிருமாக நிற்கிறார் ஒன்ராறியோ மாநிலத்தின் மின்சக்தி உயயோகத்தில் ஏறக்குறைய அரைவாசி நியூக்கிளியர் சக்தி (Nuclear Power)யின் மூலமாகவே பெறப்படுகிறதாம். டார்லிங்ரன் நகரில் உள்ள நியூக்கிளியார் செயல் திட்டம் இதற்கு உதவுகிறது. இந்தத்திட்டம் நிறைவு பெற இன்னும் $26 பில்லியன் செலவாகும் என்பது ஆண்டிறியா ஹோவார்த்தின் கணிப்பு. லிபரல் கட்சி அரசாங்கம் இத்தனை பணம் செலவளிப்பதிலும் பார்க்க மலிவான ஒரு தீர்வினைக் கையாளலாம் என்கிறார் ஹோவார்த். மின்சக்தியை மக்கள் சேமிப்பதற்கு ஊக்கிவிப்பது மிகச் சிறந்த வழியாகும் என்பது அவரது வாதம். வீட்டு உரிமையாளர்கள் தமது இல்லங்களுக்குப் புதிதாக கதவுகள், ஜன்னல்கள் மாற்றினார்கள் என்றால் சுலபமாக தமது வருடாந்த மின்சக்திச் செலவான $2000த்தில் குறைந்தது $700 னைச் சேமிப்பார்கள் என்கிறார் ஹாவார்த். தனது கட்சி ஆட்சியைக் கைப்பற்றுமானால் டார்லிங்ரன் செயற்திட்டத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு $980 மில்லியனுக்கான செயல்திடட்டம் ஒன்றினை கொண்டு வருவதாகக் கூறியுள்ளார். ஒவ்வொரு குடியிருப்பாளரும் தனது இல்லத்தின் மின்சாரத் தடைக் காப்பீட்டு (Insulation) அபிவிருத்தி, புதிய ஜன்னல், கதவு போன்றவை செய்து சக்தியைச் சேமிப்பதற்கு உதவினால் அதற்கான செலவில் $5000 வரை அரசாங்கத்திடம் மீளப் பெற முடியும் என்கிறார். டார்லிங்ரன் செயல் திட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வந்தால் ஏறக்குறைய 70,000 மக்கள் வேலையை இழப்பார்கள் என்கிறார் லிபரல் கட்சியின் மின் சக்தி அமைச்சரான பிறாட் டியூகிலிட். கொன்சர்வேற்றிவ் கட்சியும் இதில் லிபரல் கட்சியினது செயற்பாட்டினையே ஆதரிக்கி றது. டார்லிங்ரன் செயற் திட்டத்தினை நிறுத்துவது முட்டாள் தனமான பிரேரணை எனவும் எப்பொழுதும் உற்பத்தியார் களுக்குத் தொடர்ச்சியாக மின் விநியோகம் தேவை.



**பொ. கனகசபாபதி**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


## MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

***WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:***

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மிகக்கொடிய வாதம்

## ஓடும் நீர் உறைவதில்லை 127

நடைமுறையில் வாதம் என்றவுடன் உடலியல் சார்ந்த ஒருவகை நோய் என்பது தான் உடனடியாக நமது நினைவுக்கு வரும். பக்கவாதம், பாரிசவாதம், சரணவாதம் எனப் பலவகையான வாதங்கள் உடலியல் சம்பந்தமானதாக அடையாளம் காணப்படுகின்றன. இவற்றில் சில மருத்துவ முறைகளால் குணப்படுத்தக் கூடியவையாகவும் ஒரு சில குணப்படுத்த முடியாதவையாகவும் அமைகின்றன. இந்த உடலியல் சம்பந்தமான வாதங்கள் ஒருவரது உடல்நிலையின் தன்மையைப் பொறுத்து வெவ்வேறு அளவிலான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இந்தக் தாக்கங்களின் அளவைப் பொறுத்து ஒருவரது நாளாந்த செயற்பாடுகளில் அவரது ஈடுபாடு எந்த அளவுக்கு இயல்பானதாக அமைகின்றது என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

உடலியல் சம்பந்தமான வாதங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் மருத்துவ ரீதியாக தெளிவுபடுத்தப்படுகின்றன. உடலின் நிறை, குருதியில் கொழுப்பின் அளவு, உடற்பயிற்சி, ஊட்டச்சத்தின் குறைவு எனப் பலகாரணிகள் தரப்படுகின்றன. வைத்திய பரிசோதனைகள் மூலம் முன்கூட்டியே இந்த வாதங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை அறிந்து அவற்றைத் தடை செய்வதற்கான ஆலோசனைகளும் வழிமுறைகளும் வழங்கப்படுகின்றன. நவீனமயப்படுத்தப்பட்ட வைத்திய ஆய்வு முறைகள், மரபணுப்பரிசோதனைகள் மூலம் இந்த நோய்கள் ஏற்படுமா, ஏற்படாதா என்று பரிந்துரை செய்யக்கூடியனவாயும் உள்ளன. எனவே உடலியல் சார்ந்த வாதங்கள் ஒருவரது ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட

**KG Master**-kgmaster@rogers.com

நடத்தையினாலும், நவீன வைத்திய உதவிகளாலும் கட்டுப்படுத்தக் கூடியவையாக உள்ளன. இந்த உடல் சார்ந்த வாதம் ஒருவருக்கு ஏற்பட்டாலும் அதன் உடல் ரீதியான தாக்கத்தைத் தவிர்த்து உள்ளத்தால் உயர்ந்து மகிழ்ச்சியாக வாழும் பலர் எம்மிடையில் இருக்கிறார்கள்.

உடலியல் சார்பற்ற வாதங்களும் உண்டு. அவை வாதம் என்ற மூன்று எழுத்துடன் முடிவடைவதாக இருக்கின்றன. இந்த மூன்று எழுத்துக்கும் முன்னால் உள்ளவற்றைப் பொறுத்தே அந்த வாதத்தின் தன்மை அறியப்படுகின்றது. இந்த உளவியல் சார்ந்த வாதங்களில் ஒன்று பிடிவாதம். இந்தப் பிடிவாதம் எனப்படுவது என்ன பொருளில் அமைகின்றது என்பது தடுமாற்றத்துக்குரியது. வாதம் எம்மைப் பிடித்து விட்டதா அல்லது 'பிடி'வாதத்தைக் கைப்பற்றிக் கொண்டதா என்பது தடுமாற்றத்துக்குரியது. இருப்பினும் பிடிவாதம் என்பது நமது குணாதிசயங்களில் ஒன்று என்பது வெளிப்படையானது. இந்தப் பிடிவாதகுணம் நல்லதா அல்லது கெட்டதா என்பது அந்த பிடிவாதம் எதைச் சார்ந்துள்ளது என்பதைக் கொண்டே தீர்மானிக்கப்படல் வேண்டும். நடைமுறையில் பிடிவாதம் என்பது ஒரு தவறான குணவியல்பு என்று கருதப்படுவதை நாம் அவதானிக்கலாம். ஒரு குழந்தையைப் பார்த்து சரியான பிடிவாதம் உள்ள குழந்தை என்று பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். பெரும் பாலான சந்தர்ப்பங்களில் இவ்வாறான கணிப்புக்கள் எதிர்மறையான பொருள் தருபவையாகவே பயன்படுத்தப்படுகின்றன. அதாவது ஒருவரது எதிர்மறையான குணவியல்பைக் குறிப்பனவாக அமைகின்றன.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

ஆனால் பிடிவாதம் என்பது எதைச் சார்ந்துள்ளது என்பதை அடிப்படையாக வைத்தே அது நேர்த்தியானதா அல்லது எதிர்மறையானதா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். ஒரு குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சிக்கட்டங்களில் இரண்டுமுதல் மூன்று வயது வரையான காலப்பகுதியில் அதி உச்சமான பிடிவாத தன்மையைக் காணக்கூடியதாக இருக்கும். இந்தக் காலப்பகுதியில் குழந்தைகளின் பிடிவாதத் தன்மை அவர்களது உடமைகள் சம்பந்தமாகவும் விருப்பங்கள் சம்பந்தமாகவும் அமையும். உதாரணமாகத் தனது விளையாட்டுப் பொருள் ஒன்றை இன்னொருவர் கேட்கும்போது அந்தக் குழந்தை தனது உடமையை விட்டுக் கொடுக்காது மறுக்கும். குழந்தையின் கவனத்தை நாம் எந்தத்திசையில் திருப்பினாலும் அந்தக் குழந்தை தனது உடமையைப் பகிர்ந்து கொள்ள மறுப்பதை நாம் காணலாம். அதே போன்றுதான் தனக்கு ஒன்று வேண்டும் என்று அடம்பிடிக்கும் குழந்தையும் தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வரைக்கும் விட்டுக் கொடுக்காமல் போராடிக் கொண்டிருக்கும்.

அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும், குழந்தையாக இருந்தாலும் சரி வளர்ந்தவர்களாக இருந்தாலும் சரி இந்தப் பிடிவாத குணத்தைக் கொண்டுள்ளோம். பிடிவாத குணம் இல்லாவிடின் நாம் ஒவ்வொருவரும் ஒரு நிலையில் இருந்து அடுத்த நிலைக்கும் எம்மை நகர்த்திச் செல்வதற்கு வாய்ப்பே இல்லாமற் போய்விடும். எனவே நமது வாழ்வின் வெவ்வேறுபட்ட நிலைகளுக்கு நாம் இந்தப் பிடிவாதத்தினால் தான் நகர்த்தப்படுகிறோம். இந்த நிலைகள் நேர்த்தியானவையாகவோ அல்லது எதிர்மறையானவையாகவோ அமைவதற்கு நமது பிடிவாதம் எதைச் சார்ந்துள்ளது என்பதால் வரையறுக்கப் படுவதை அவதானிக்கலாம்.

உலகில் சரித்திரநாயகர்களாகியவர்கள் அனைவரும் தாம் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றி கொள்வேன் என்ற உறுதிப்பாட்டுடன் ஓயாது உழைத்தவர்கள். ஒரு விடயத்தில், எடுத்துக்கொண்ட காரியத்தில் ஒரு உறுதிப்பாட்டுடன் செயற்படுபவர்கள் தான் வெற்றியாளர்கள். இங்கு இந்த உறுதிப்பாடு என்பது பிடிவாதம் எனப்பொருள் கொள்ள முடியுமா என்ற கேள்விக்கு இடமுண்டு. இங்கு ஒரு முக்கியவிடயத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. அதாவது ஒருவரது உறுதிப்பாடு எவ்வளவு தூரம் நிலையானது என்பதை வெளிப்படுத்துவதுதான் இந்தப்பிடிவாதம். ஒருவிடயத்தில் நாம் மிக உறுதியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் போது அதன் பெறுபேறுகளில் ஏற்படும் தாமதங்கள், தடைகள், மற்றவர்களது ஏளனங்கள், பழிச் சொற்கள் போன்றன ஒருவகையான பின்னடைவுக்கு வழிவகுப்பதாக அமையும்போது எந்த இடர்வரினும் எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன் என்ற உந்துணர்வு தான் பிடிவாதம். அதாவது உறுதிப்பாடு தளராமல் இருப்பதற்கு உந்துசக்தியாக அமைவது தான் இந்தப் பிடிவாதம். எனவே பிடிவாதம் என்பது சாதாரண பார்வையில் கருதப்படுவதைப் போல் ஒரு பக்கச்சார்பான எதிர்மறை உணர்வல்ல. எதற்காக பிடிவாதமாக உள்ளோம் என்பதைப் பொறுத்தே அதன் தன்மை அளவிடப்பட வேண்டும்.

இங்கு நாம் இதுவரையில் அறிந்துள்ள இரண்டுவகையான வாதங்களும், அதாவது உடலியல் சார்ந்த வாதமும் உளவியல் சார்ந்த பிடிவாதமும் மிகக் கொடிய வாதமாகக் கருதமுடியாது என்பதைப் புரிந்துள்ளோம். உடல் வாதங்கள் குணப்படுத்தக் கூடியவையாகவும் குணப்படுத்த முடியாத வாதங்களுடன் மகிழ்ச்சியாக வாழக்கூடிய வழிமுறைகள் இருப்பதையும் அறிந்துள்ளோம். உளவியல் சார்ந்த பிடிவாதம் ஒருவரை வெற்றியாளராக்குவதற்கு அடிப்படையாக அமையக்கூடியதாகவும் அமைவதால் அதுவும் ஒருகொடியவாதமாக இருக்க முடியாது. அடிப்படையாயின் மிகக் கொடியவாதம் எது?

இங்கு நான் குறிப்பிடும் 'மிகக்கொடிய வாதம்' உடலியல் சார்ந்த அல்ல உளவியல் சார்ந்த பிடிவாதம் அல்ல. ஒருமனிதனை இனங்கண்டு கொள்ள முடியாத அளவுக்கு மற்றவர்களைக் குழப்பும் ஒரு வாதம் தான் அது. அதுமட்டுமன்றி மனிதனா, மிருகமா, ஆணா அல்லது பெண்ணா, நேர்மையானவனா நேர்மையற்றவனா என்ற பல்வேறு சந்தேகங்களுக்கு இடமளிக்கும் வாதம் தான் அது. மனிதன் என்ற அடிப்படைப்பண்பில் இருந்து அடிக்கடி மாறும் இயல்புதான் இது. தன்னையும் நம்பாது பிறரையும் நம்பாது தனது சுயநலத்திற்காக எதையும் செய்வதற்கும் எதையும் ஏற்றுக்கொள்வதற்கும் இடமளிக்கும் இந்த வாதம் தான் ஒரு கொடியவாதம். தனது சுயநலத்திற்காகத் தன்னைச்சார்ந்தவர்களது நலனை முற்றாகப்புறக்கணித்து, தற்காலிக நலனுக்காகத் தன்னை அடமானம் வைக்கும் இந்த வாதம் மானிடத்துக்கான ஒரு சாபக்கேடு. இந்த அளவுக்குக் கொடூரமான அந்த வாதம் தான் 'சந்தர்ப்பவாதம்'.

சந்தர்ப்பவாதம் ஒரு சாபக்கேடு. மானிடத்தின் அதிகீழ்த்தரமான நடவடிக்கை. தன்னலத்துக்காகத் தன்னையே அடமானம் வைத்துத் தன் மானத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் கொடிய செயற்பாடு. உள்ளத்தின் உறுதிப்பாட்டை உருக் குலைத்து, சொந்த நலன்களுக்காக உற்றார், உறவினர் அனைவராலும் அவமதிப்புக்குள்ளாக்கப்படும் இந்தச் சந்தர்ப்பவாதம் ஆரம்ப காலத்தில் அதன் பாதகமான விளைவுகளை வெளிப்படுத்த மாட்டாது. ஆனால் காலப்போக்கில் இந்தச் சந்தர்ப்பவாதம் அதன் சொந்தக் காரனாகிய அந்தச் சந்தர்ப்பவாதியை உளவியல் ரீதியில் துண்டு துண்டாக்கித் துடிக்க வைத்துவிடும்.

வாழ்வியலில் மிகவும் இனிமையான உணர்வு என்னவெனில் நாம் எடுத்துக் கொண்ட கொள்கையை, உறவை, பொறுப்பை உயிருள்ளவரைக்கும் உறுதியோடு நகர்த்திச் செல்வதுதான். அற்பசொற்ப ஆசைகளுக்காக உயிருக்கு இணையாக முன்னெடுத்து வந்த எமது குறிக்கோள்களைத் தூக்கியெறிந்து வாழ்க்கையில் விரக்தியினால் தோல்வி கண்டவர்கள் அனைவரும் இந்தச் சந்தர்ப்ப வாதத்தின் அடிமைகளே. எனவே வெற்றியாளர்கள் அனைவரும் சந்தர்ப்ப வாதத்தின் எதிரிகள் மட்டுமல்ல, சந்தர்ப்பவாதிகளின் எதிரிகளும் எதிரிகள் கூட. இதனால்தான் தூய்மையான உள்ளத்துணர்வும் தன்னலமல்லாது பிறர்நலனுக்காக தம்மை வழிப்படுத்துவதும் இந்த உலகில் ஆறறிவிக்குச் சொந்தமான அனைவருக்கும் பொதுவானது.

ஆம் வாசகர்களே!

மானிடத்தின் அடிப்படை இயல்பு ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் வாழ்வதாகையால் மிகக் கொடியவாதமாகிய சந்தர்ப்பவாதத்தைத் தனித்தும் ஒருமித்தும் புறக்கணிப்போமாக.

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# ஒன்ராறியோ...

12 ஆம் பக்கத்தொடர்ச்சி

அதனை இந்தத் திட்டத்தால் தான் வழங்க முடியும் என்கிறது.



பொதுவாகவே நடுவண் அரசின் பிர-தமர் மாகாண தேர்தல்களில் தனது தலையினை நுளைப்பதில்லை. மாகாண அரசுகளுடன் சுமுகமான உறவினைப் பேணுவதற்கான செயல் முறை இது. ஆனால் ஹார்ப்பர் வித்தியாசமானவர். ஒன்ராறியோ மக்கள் ஒக்ரோபர் 6ந்தேதி அன்று நடைபெறும் தேர்தலில் ரொம் ஹுடாக்கினது கட்சியைத் தேர்ந்தெடுத்து கொன்சர்வேற்றிவ் கட்சி Hatrick அடிக்க உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்து ஒன்ராறியோ முதல்வர் டால்ரன் மக்குவின்ரியின் ரௌத்திரத்தினைச் சம்பாதித்துள்ளார். மக்குவின்ரியின் கோபம் சற்று எல்லையை மீறிவிட்டது போலத் தெரிகிறது. அவரது உரையில் பிரிவினை வாதம் தெரிகிறது. ஹார்ப்பரின் அரசாங்கம் மேற்குப் பிராந்தியத்தின் அரசு எனக் குற்றம் சாட்டியுள்ளார். கொஞ்சம் நிதானமாகப் பார்த்தால் நிலமை புரியும். மேற்கில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட கொன்சர்வேற்றிவ் உறுப்பினர் 72 பேர்கள் ஆனால் ஒன்ராறியோவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோர் தொகையோ 73. லிபரல் கட்சி ஆட்சி பீடத்தில் இருந்தபோது தொடர்ச்சியாக மல்றோனி, கிறெட்சியன் மற்றும் மார்ட்டின் என அத்தனை பேரும் குயூபெக்கினைச் சார்ந்தவர்களாக இருந்தமை மக்குவின்ரியின் கண்கள் காணத்தவறி விட்டனவா? ஹார்ப்பர் முன்பு ஒரு சமயமும் இப்படியான ஒரு கூற்றினால் மக்குவின்ரியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டவர். அப்போதைய தேர்தலில் மக்குவின்ரிக்கும் கொன்சர் வேற்றிவ் கட்சி சார்பில் நின்ற ஜோன் ரோறிக்குமிடையே போட்டி. ஹார்ப்பர் ஒரு கூட்டத்தில் ஒன்ராறியோவின் வருங்காலப் பிரதமர் என ஜோன் ரோறியை அறிமுகப் படுத்தினார். வந்ததே மக்குவின்ரிக்கு கோபமென்றால் அத்தனை கோபம். மிக்க கீழ்தரமான வார்த்தைகளால் அவரைப் பூசித்தார். இதை அறிந்த ஹார்ப்பர் அவர்கள் மிகவும் நகைச்சுவையாக இதனிலும் பார்க்க் கீழ்த்தரமான வார்த்தைகளை எனது மனைவி என்மீது உபயோகித்துள்ளார் என்றார். எத்தனை சாமர்த்தியம்!!

# விளையாட்டு...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரக்யான் ஓஜா விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் முரளிதரன் 800 டெஸ்ட் விக்கெட்டுகள் உலகச் சாதனை புரிந்தார் அத்துடன் ஓய்வும் பெற்றார். 1000 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தும் முதல் மனிதனாக இருக்கும் ஆசை என்னிடம் இருந்தது, இந்திய அணிக்கு எதிராக 8 விக்கெட்டுகளை எடுத்து 800 விக்கெட்டுகள் மைல்கல்லை எட்டிய பிறகு ஓய்வு பெற்றேன், இருந்தாலும் ஆயிரம் விக்கெட்டுகள் வரை டெஸ்ட் ஆடியிருக்கலாமோ என்ற சபலம் எனக்கு இருந்தது. அதாவது 1000 விக்கெட்டுகளை கைப்பற்றுவது சாத்தியமா அல்லது 800 விக்கெட்டுகளுடன் ஓய்வு பெறுவது சிறந்ததா என்றெல்லாம் எனது மனம் மாறியது என்று விஸ்டன் கிரிக்கட்டர் இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். இலங்கை அணி ஆண்டொன்றுக்கு 8 டெஸ்ட் போட்டிகளை மட்டுமே விளையாடுகிறது. எனவே நான் 1000 விக்கெட்டுகளைக் கைப்பற்ற இப்போது நான் விக்கெட்டுகளை வீழ்த்தும் சராசரியை வைத்துப் பார்க்கும்போது எனது 43 வது வயதில் தான் 1000 விக்கெட்டுகள் சாத்தியம் என்று தெரிந்தது. அது வரையில் அணியில் என்னை வைத்திருங்கள் என்று நிர்பந்திப்பது கொஞ்சம் அதிகபட்சம் தான். அதன் பிறகு எனது உடம்பு கூறியதைக் கேட்டு ஓய்வு அறிவிக்க முடிவெடுத்தேன். அடுத்த ஆண்டு ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கட் மட்டுமல்லாது அனைத்து வகை கிரிக்கட்டிலிருந்தும் தான் ஓய்வு பெறப்போவதாக முரளிதரன் தெரிவித்தார்.

## திலஷ்ான் அதிரடி சதத்தால் இலங்கை அணி அபார வெற்றி

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான "டுவென்டி 20" போட்டியில், இலங்கை அணி 35 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இலங்கையின் திலஷ்ான், அதிரடியாக சதம் கடந்து அசத்தினார். இலங்கை சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, இரண்டு போட்டிகள் கொண்ட "டுவென்டி 20" தொடரில் பங்கேற்றுள்ளது. முதல் போட்டி நேற்று பல்லேகெலேயில் நடந்தது. "டொஸ்" வென்ற அவுஸ்திரேலிய கப்டன் காமிரான் ஒயிட், களத்தடுப்பு தெரிவு செய்தார். இலங்கை அணிக்கு துவக்கத்தில் சண்டிமால், ஜெயவர்தனா தலா 11ரன்கள் எடுத்தனர். சங்ககார 30ரன்னுக்கு அவுட்டானார். மறுமுனையில் அதிரடியில் மிரட்டிய கப்டன் திலஷ்ான், ஹாஸ்டிங்ஸ் ஓவரில் 4 பவுண்டரிகள் அடித்தார். தொடர்ந்து அசத்திய இவர், வாட்சன், ஜான்சன் ஓவர்களில் தலா 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்து, "டுவென்டி 20" அரங்கில் முதல் சதம் கடந்தார். இலங்கை அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 198 ரன்கள் எடுத்தது. அவுஸ்திரேலிய அணி 20 ஓவரில், 8 விக்கெட்டுக்கு 163 ரன்கள் எடுத்து, 35 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதையடுத்து, "டுவென்டி 20" தொடரில் இலங்கை அணி 1-0 என முன்னிலை பெற்றது. மஹேல அதிரடி - அவுஸ்திரேலியாவை வென்றது இலங்கை இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான B20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது போட்டி இன்று கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியை வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி களம் இறங்கிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்களை பெற்றது. இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்தன 86 ஓட்டங்களை பெற்றார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் வெட்சன் 57 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் மெண்டிஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை கைப்பற்றியமை விசேட அம்சமாகும்.

# சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்

மகளிர் தாம் கொண்ட காதல் எதனுடனும் ஒப்பிட முடியாதது அவ்வளவிற்கு ஆழமும் நீளமும் உயரமும் உடையதெனக் கூறும் பண்பு எல்லா மொழி, இன மக்களுக்கும் பொருத்தமான ஒன்று. அது தமிழருக்கு மட்டுந்தான் சொந்தமானதல்ல. காதல் என்பது உணர்ச்சியோடு தொடர்பானது. தனது உணர்வலைகளை வெளிக்காட்டும் தன்மை எல்லோருக்கும் உண்டு. காதலிப்பதும் காதலித்தவனை திருமணம் செய்து குடும்பமாக வாழ்வதும் இவ்வுலகில் மனிதன் தோன்றிய காலந்தொட்டு தொடர்ந்து நிலவி வருகின்ற ஒன்று.

காதல் ஒரு நோய் என புலவர்கள் சித்தரித்துள்ளனர். அவர்களின் கூற்றிலும் அந்த உண்மை இல்லாமல் இல்லை. தடுமாற்றம் ஏற்படுவதற்குப் பல காரணிகளைக் கூறலாம். மனதில் ஏற்படும் உழைச்சல் அல்லது மாற்றம் தடுமாற்றத்திற்கான அடிப்படைக் காரணியாகின்றது. உடலில் எங்காவது நோய் தொற்றிக்கொண்டால் அதனால் ஒரு தடுமாற்றம் ஏற்படுகின்றது. செய்யும் வேலை நிறைவேற்ற முடியாவிட்டால் தடுமாற்றம், எதற்காவது தீர்வுகாணவில்லை எனின் தடுமாற்றம். தடுமாற்றம் என்பது பல நிலைகளில் வரலாம். ஆனால் காதலால் வரும் தடுமாற்றமும் அதன் அனுபவமும் வேறுபட்டது. அது பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், பாரம்பரியம் என வித்தியாசம் பார்க்காது அனைவரையும் தொடரக்கூடிய ஒரு நோய். அது காதல் நோய். இது கட்டிளமைப்பருவத்தோடும் இளமைப் பருவத்தோடும் தொடர்புடையது.

- த. சிவபாலு-

பாலுணர்வு மேலோங்க ஆணும் பெண்ணும் உந்தப்பட்டு அதனால் எதிர்ப்பாலாரோடு உறவாட விருப்புக் கொள்ளும் நிலையைக் காதல் எனக் கொள்ளலாம். எதிர்ப்பால் கவர்ச்சி என்பது பாலுணர்வின் உந்து சக்தியாக அமைகின்றது. சங்க காலந்தொட்டு இன்று வரை காதல் காட்சிகள் பல்வேறு தன்மைகளைக் கொண்டனவாக புலவர்களால் சித்தரிக்கப்பட்டுள்ளன. சங்கப் பாடல்களில் ஒன்றான குறுந்தொகைப் பாடல்களில் காதல் காட்சிகளைப் புலவர்கள் சித்தரிக்கும் விதம் தனித்தன்மை வாய்ந்தது. அன்பின் முதிர்சியாகக் காட்டப்பட்டுள்ள காதல்பாடல்கள் அகத்திணையின் பாற்படும் என வகுத்துள்ளனர்.



தனியொருவரின் பெயர் சுட்டாது பொதுவாகத் தலைவன், தலைவி, தோழி எனக் குறித்து நிற்பவை அகத்திணையின் பாற்படும். காதலை வெளிப்படுத்தும் பாடல்கள், காதலிக்கும் காதலனுக்கும் அதாவது தலைமகனுக்கும் தலை மகளுக்கும் தூது செல்லும் பாடல்கள் தலைவன் கூற்று தலைவிகூற்று தாயின் கூற்று, தோழியின் கூற்று எனப் பல்வேறு பாத்திரங்களூடாக காதலைச் சிறப்பித்துக் காட்டும் காட்சிகளை அடிப்படையாகக் கொண்டவை குறுந்தொகைப் பாடல்கள்.

தலைமகளைத் தனிமையான குளிர்மை நிறைந்த நறுமணம் கமழும் பூங்காவனத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து அதன்வழி தலைவி அங்கே வந்து அவனுக்காகக் காத்து நிற்க அவளை அணுகி அவளை அடைவதற்கு முற்படுகின்றான் தலைவன். பொதுவாக ஆண்கள்தான் காரியத்தில் முந்திக் கொள்வது வழக்கம். அதனைச் சங்கப் புலவர்களும் விட்டுவைக்கவில்லை. தலைவியை அணைத்து கலவிக்கு விளைகின்றான் தலைமகன். அவளோ நாணமேலீட்டால் அவனை விட்டு விலகிப்போகின்றாள். அவனதுபிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்கின்றாள் அந்த நிலையில் தலைவன் தலைவியின் நாணத்தை நீக்குதற்பொருட்டு மிக இங்கிதமாகக் காதல் வார்த்தைகளைப் பேசி அவளை மயங்கித் தனது விருப்புக்கு இசைய வைக்க முனைகின்றான். பின்வரும் பாடல் அந்தக் காட்சியைச் சித்தரிக்கின்றது.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ?
பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயல்
செறிஎயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ, நீ அறியும் பூவே? (குறிஞ்சி 2)

நீ அறியாயோ பூப்போன்ற மென்மையானவளே? என்னவளே நீ சின்னவளே எனப் பாடப்பட்ட இன்றைய சினிமாப் பாடலின் கருத்துத் தொனிக்கின்றது தலைவனின் கூற்றில். மயிலைப் போன்ற அழகிய பழபழப்பான மேனியை உடையவளே, பெண்களின் கூந்தலிலும் பார்க்க அழகானது ஏதாவது உண்டா? எனது கூந்தல் அவ்வளவு அழகானது. உனது மேனி மயிலைப் போன்ற சாயலுடையது என தலைவனின் வாயிலாக உணர்ச்சியைத் தூண்டும் காட்சியாக அமைகின்றது இப்பாடலின் இயற்கைக் காட்சி. காதலின் உச்சம் காமம். தலைவன் தனது காதல் நோயைத் தணிக்க தலைவியை இசைவிக்கப் படும்பாட்டைச் சித்தரிக்கின்றது இந்தப்பாடல். தலைவியை உள்ளங்குளிரவைத்து தன்வயப்படுத்துகின்றான் தலைவன்.

# நினைவாற்றல் - MEMORY - 15

அன்பான வாசகர்களே!



மனித உடலானது உலகத்தில் உள்ள அற்புதமான இயந்திரம். அதனுள்ளே மூளை உட்பட எண்ணற்ற பல சிறிய இயந்திரங்கள் உள்ளன. இவற்றில் சில ஒரே நேரத்தில் இயங்குகின்றன. இவை 24 மணித்தியாலங்கள் இயங்குகின்றன. இவை இயங்குவதற்கு சக்தி தேவை. இந்த சக்தி சரியான அளவில் கிடைப்பதற்கு ஆரோக்கியமான உணவு தேவை. நீர், மாப்பொருள், (காபோவைதரேற்று), புரதம், கொழுப்பு என்பவை ஒரு ஆரோக்கியமான உணவில் உள்ள முக்கியமான ஊட்டச்சத்துக் கூறுகள். ஒரு மனித உடலில் மூன்றில் இரண்டு பங்கு நீரால் ஆனது. உடலில் நடைபெறும் எல்லாத் தொழிற்பாடுகளிலும் நீர் பங்கு கொள்கின்றது. ஊட்டச்சத்துக்களைக் காவிச்செல்லுதல், கழிவுப்பொருட்களை வெளியேற்ற உதவுதல், சமிபாடு, சீரான இரத்த ஓட்டம், விட்டமின், தாதுப் பொருட்களைக் கரையச்செய்தல், உடலின் வெப்பத்தைச் சீராகப் பேணுதல் எனப் பல்வகைத் தொழிற்பாடுகளில் நீர் பங்கு கொள்கின்றது. உடல் பருமனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நீர், பச்சைத் தேநீர் (Green Tea) பருகி வருவது நல்லது. உடல் பருமன் கட்டுப்பாட்டில் இருக்கும் பொழுது உடல் ஆரோக்கியமாகவும், நினைவாற்றல் வலு சீராகவும் இருக்கும். காபோவைதரேற் உடலிற்கு சக்தியைக் கொடுப்பது. இது பழம், காய்கறி, விதைகள், பால் போன்றவற்றில் உள்ளது. மாப்பொருள் அல்லது காபோவைதரேற் இரண்டு வகைப்படும். எளிமையான காபோவைதரேற் (Simple Carbohydrates), சிக்கலான காபோவைதரேற் (Complex Carbohydrate) என இரண்டு வகைப்படுத்தலாம். எளிமையான காபோவைதரேற் அதிகமாக இருக்கும் உணவு வகையாக பழங்களைக் கருதலாம். பழங்களில் உள்ள சீனியை புருட்கோஸ் (Fruitcose or Fruitsugar) எனக் கருதப்படும். சுக்கிரோஸ் (Sucrose or Table Sugar), லக்ரோஸ் (Lactose or Milk Sugar) எனப் பலவகையான சீனிவகைகள் உள்ளன. சிக்கலான காபோவைதரேற் நார்த்தன்மை (Fibre), காய்கறிகள், முழுத்தானியம் போன்றவற்றில் உள்ள சீனிவகை ஆகும். வெள்ளைப்பாண் போன்ற உணவில் அதிக சீனித்தன்மை இருக்கும். புரதம் மூளையில் பல இரசாயனப் பதார்த்தங்கள் உருவாக உதவும். கொழுப்புச் சத்து பற்றி நாம் ஏற்கெனவே ஆராய்ந்திருக்கின்றோம்.

ஒரு அப்பிளை வெட்டிச் சிறிது நேரம் வைக்கும்பொழுது துருப்பிடிப்பது போலாக நிறம் மாறுவதைக் காணலாம். இதேபோல் எமது உடல் சூழலில் உள்ள பொருட்களால் 'ஒக்சிடென்ற்ஸ்' (Oxidents) ஏற்படுகின்றன. இவை நமது உணவு, காற்று, நீர் எல்லாவற்றிலும் உள்ளன. எமது உடலிலும் இவை பக்க விளைவுப் பொருட்களாகத் தோன்றி விடுகின்றன. இவற்றினால் எமது உடலில் உள்ள கலன்கள் தாக்கப்பட்டுப் பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்வாறான தாக்கத்தால் ஒரு அழுத்தம் ஏற்படுகின்றது. இந்த அழுத்தம் காரணமாக எமது உடலில் உள்ள கலன்களின் தொழிற்பாடுகளையும், அவற்றின் பரிமாணங்களையும் மாற்றி விடுகின்றது. மேலும் உடற்கலன்களில் உள்ள மரபுப் பதார்த்தங்களையும் குறைத்துவிடும். மூளையில் உள்ள கலன்களுக்கும் இதே நிலைதான் ஏற்படுகின்றது. மரபுப் பதார்த்தங்கள் குறைந்துபோக வயது காரணமாக வரும் பல நோய்கள் ஏற்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளைச் சமாளிக்க எமது உணவுடன் விட்டமின் சி(C), விட்டமின் ஈ(E) போன்றவை கிடைத்தல் வேண்டும். இந்தப் பிரச்சினையை அதாவது ஏற்படும் அழுத்தத்தை எதிர்க்கும் உணவுப் பொருட்களின் திறமையை அளவிட 'ஒக்சிசன் ரடிக்கல் அப்சோபென்சி கப்பாசிற்றி (Oxygen radical absorbency capacity or ORAC) எனப்படும் ஒரு அளவீட்டை உருவாக்கியுள்ளார்கள். 'த மெமோரி பைபிள்' என்ற நூலாசிரியர் கரி



- அகணி -

authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




# நினைவாற்றல்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

சிமோல் அவர்களால் பல்வேறு உணவுப்பொருட்களின் ஓரக் ஸ்கோர் (ORAC Score) பற்றி வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் மிகவும் பயனுள்ளவையாக உள்ளன. அவற்றில் சிலவற்றை நாமும் அறிந்து கொள்வோம். புளுபெரிஸ் 3.5 அவுன்சு அளவில் 2400 ஓரக் ஸ்கோர் உள்ளது. வெங்காயத்தில் 3.5 அவுன்சு அளவில் 450 ஓரக் ஸ்கோர் உள்ளது. இவ்வாறான உணவுப்பொருட்களின் ஓரக் ஸ்கோர் பற்றி அறிந்து ஒப்பீட்டு ரீதியில் உணவுப்பொருட்களை தெரிவுசெய்வது பொருத்தமான செயற்பாடாக இருக்கும். நாம் உண்ணும் பழங்களினதும், காய்கறிகளினதும் அளவை இரண்டு மடங்காக அதிகரிப்பதன் மூலம் அன்ரிஒக்சிடன்ற் வலுவை (Antioxidant Power) 25 வீதத்தால் கூட்டமுடியும் எனக் கூறப்படுகின்றது. கலோரியின் அளவைக் கூட்டாது அன்ரிஒக்சிடன்ற் வலுவைக் கூட்டுவதற்குரிய குறுக்கு வழி அதிக பச்சைத் தேநீரைப் (Green tea) பருகுவதேயாகும். தக்காளியில் ஐசோப்பேன் (lycopene) எனப்படும் ஒரு அன்ரிஒக்சிடன்ற் உள்ளது. இவ்வகையில் தக்காளி பயனுள்ளதாகின்றது.

மூளையில் உள்ள கலன்களுக்கும், ஏனைய உடலின் பாகங்களில் உள்ள கலன்களுக்கும் இடையில் ஒரு வேறுபாடு உண்டு. மூளையில் உள்ள கலன்கள் ஏனைய கலன்களைப் போன்று கொழுப்பு, புரதம் ஆகியற்றில் இருந்து தேவையான குளுக்கோசைப் பெற்றுக் கொள்ள முடியாதவை. இதனால் மூளைக்கு குளுக்கோசு தேவைப்படுகின்றது. ஒருவரின் உடலில் உள்ள இரத்தத்தில் குளுக்கோசு குறைவாக இருக்குமானால் உற்சாகம் இழந்து சோம்பலாக இருப்பார். அவருக்கு சக்தி அளிக்கும் உணவு அல்லது பழச்சாறு கொடுத்ததும் உற்சாகம் பெற்று விடுவார். நீரிழிவு நோயும் நினைவாற்றலைப் பாதிக்கும் தன்மை கொண்டது. அதிக கிளி-செமிக் இன்டெக்ஸ் (GI or Glycemic index) கொண்ட காபோவைதரேற்றுக்களை உட்கொள்வதால் நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியம் கூடுகின்றது. பாண், உருளைக்கிழங்கு, சில வகையான சோறு சமிபாடு அடைந்து விரைவில் குளுக்கோசுத் தன்மையைக் கூட்டிவிடும். புதிய ஆய்வுகளின் மூலம் இரத்தத்தில் உள்ள குளுக்கோசிற்கும், நினைவாற்றலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகக் கருதப்படுகின்றது. எமது இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு சீராக இருக்க வேண்டும். கூடிக் குறைந்து கொண்டிருப்பது நல்லதல்ல. மூளையின் ஆரோக்கியத்திற்கும், நினைவாற்றல் வலுவைக் கூட்டவும் நாம் உண்ணும் உணவும் முக்கியமான காரணி என்பதால் சில அடிப்படையான விடயங்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டோம். பொருத்தமான உணவு வகைகளைப்பற்றியும் அவ்வப்போது ஆராய்ந்து உள்ளோம்.



இரத்தப்பரிசோதனையில் விட்டமின் சி, ஈ என்பன குறைந்து காணப்படுபவர் களின் நினைவாற்றல் தன்மையும் குறைந்து காணப்படுவது வழக்கம். விட்டமின்களை ஒழுங்காக உட்கொண்டு வருபவர்கள் அதிக நினைவாற்றல் கொண்டு இருப்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்து கின்றன. விட்டமின் குளிசைகளை விட உணவு மூலமாகத் தேவையான விட்டமின்களைப் பெறுவதே சிறந்தது எனவும் ஆய்வுகள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. போதிய விட்டமின்கள் உடலில் சேரும்போது அல்சீமேர்ஸ் போன்ற நோய்கள் ஏற்படாது என்பதும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

'டாக் சொக்கலேட் (Dark Chocolate)" இருதயம், புற்றுநோய் என்பவற்றை அணுகாது பாதுகாக்கின்றது. அத்துடன் நாளொன்றுக்கு 20 முதல் 150 கிராம் வரையிலான 'டாக் சொக்கலேட்' உண்ணும் நடவடிக்கை கற்கும் திறனையும், நினைவாற்றலையும் கூட்டுகின்றுது. அதிக இரத்த ஓட்டம் ஏற்பட்டு கூடுதலான ஒக்சிசன் மூளைக்கு வருவதனால் விரைவாகச் சிந்திக்கும் தன்மை பெறுவதே இதற்கான காரணமாகும். அமெரிக்க விஞ்ஞானக் கல்லூரி டாக் சொக்கலேட்டினை நவீன உயிர் காக்கும் உணவாக வர்ணித்துள்ளது. மூச்சுப்பயிற்சி கற்பனைத் திறனையும், படைப்புத்திறனையும் அதிகரிக்கின்றது. உடற்பயிற்சியும் சிந்தனைத் திறனைக் கூட்டுகின்றது.

உடலில் அலுமினியம் சேர்வது கூடாது. அலுமினியப் பாத்திரங்கள், அலுமினியம் உள்ள உணவுப் பதார்த்தங்கள், அலுமினியம் அகற்றப்படாத குடிநீர் மூலமாக அலுமினியம் உடலுக்கு வந்துவிடும். மாதுளம்பழம் முதுமையிலும் நினைவாற்றல் சீராக இருக்க உதவும். மேலும் நினைவாற்றல் குறைபாடுகள் வராது தடுக்கவும் செய்கின்றது. திராட்சைப் பழச்சாறு நினைவாற்றல் வலுவினை கூட்டவல்லது. புதிய ஆய்வுகளில் ஒருவர் நாளொன்றுக்கு இரண்டு முட்டை சாப்பிடுவது ஆபத்தில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது ஒருவர் உட்கொள்ளும் ஏனைய உணவுகளைப் பொறுத்தும் இருக்கலாம். நினவாற்றலுக்கு உகந்த உணவாகத்தான் முட்டையைக் கருதலாம். ஆனால் முட்டை அதிகம் சாப்பிடுவது நல்லதல்ல என்பதையும் நாம் அறிவோம். மேலும் பல தகவல்களுடன் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். தொடரும்.....

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks

SECOND CAREER
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses, Day care & Transportation அனைத்தும் இலவசம்

இலவச ஆலோசனைகளுக்கு
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

YARL WINDOW BLINDS & DRAPERY





WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER WOOD/FORMWOOD BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM

YOGA - MEDITATION CLASSESS
யோகா, தியான வகுப்பு
Scarborough இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
416.273.2200



# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

தனி நபர்களின் கடன் சரிதத்தை கனடாவில் இக்யுபாக்ஸ், டிரான்ஸ் யூனியன் போன்ற நிறுவனங்கள் பராமரிக்கின்றன. இந்த கடன் சரிதம் எவ்வளவு நல்ல நிலையில் உள்ளது என்பதை ஒரு (மதிப்பு) எண்ணில் குறிப்பிடுவார்கள். பொதுவாக இது 300 இலிருந்து 900 க்குள் இருக்கும். 700ம் அதற்கு மேலும் இருந்தால் மிக நல்ல கடன் சரிதம் என்று சொல்லலாம். 650 இலிருந்து 700 பரவாயில்லை. 600 இலிருந்து 650 மோசமில்லை. வீட்டுக்கடன் போன்றவை குறைந்த வட்டியில் இந்த எண்ணிலும் கிடைக்கலாம். எண்கூடக் கூடத் தான் உயர்வு. ஆனால் இந்த எண் ஒன்றை மட்டுமே வைத்து எந்த நிறுவனமும் கடன் தருவதில்லை. வேறு பலவற்றையும் பார்க்கிறார்கள். குறிப்பாக தொடர்ந்து வரக்கூடிய வருவாயைப் பார்க்கிறார்கள். அது எவ்வளவு தொகை? அந்தத் தொகை எவ்வளவு உறுதியானது. நிச்சயமானது என்பதும் கூட முக்கியமானது.

தனிநபர்களுக்கு இப்படி என்றால் நாடுகளுக்கும் அப்படி மதிப்பீடு செய்யும் நிலை உள்ளது. அவற்றுள் முக்கியமான நிறுவனம் ஸ்டாண்டாட் & பூர் (Standard & Poor) சுருக்கமாக S & P என்பார்கள்.

இந்த S & P அமெரிக்காவின் பெறுமதியை AAA யிலிருந்து AA+ ஆக சமீபத்தில் குறைத்தது. ஒரு நாடு அதிகபட்சம் பெறக்கூடிய மதிப்பு (எண்) AAA தான் ஆகும். உலக வல்லரசான அமெரிக்காவின் நிதி நிலையை இந்த நிறுவனம் இவ்வாறு குறைத்தது. உலகு எங்கிலும் பங்குச் சந்தையில் ஆழிப் பேரலை அல்லது சுனாமியைத் தோற்றுவித்திருக்கின்றது. பங்குச் சந்தையில் உலகு எங்கிலும் தொடர்ந்து விலைகள் விழுந்து கொண்டிருக்கின்றன. ஒரு கட்டத்தில் இது திரும்ப மேல் எழ ஆரம்பிக்கும். இது இயல்பான நடைமுறை தான் என்றாலும் 2008 க்குப் பிறகு மீண்டும் இப்போது பங்குச் சந்தையில் பணத்தைத் தொலைத்த நிலை பலருக்கும் காணப்படுகின்றது.



கனடாவின் பெறுமதி என்ன என்று தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆர்வமாக இருக்கும். இல்லையா? கனடாவின் பெறுமதி மிக அதிகபட்சப் பெறுமதியான AAA தான்.

ஆக நம் நாட்டின் நிலை அமெரிக்க நாட்டின் நிதி நிலையை விட நன்றாக உள்ளதாகவே இதற்கு அர்த்தம். ஆனால் அந்நியச் செலவாணிச் சந்தையில் (Foreign Exchange Market) அமெரிக்கா பெறுமதி AAA லிருந்து AA+ ஆகக் குறைக்கப்பட்ட பின் நடந்தது என்ன தெரியுமா?

அமெரிக்க நாணயம் வலுப்பெற்றது. அப்படியானால் கனடிய நாணயம் சற்றே வலு இழந்தது என்று கூட அர்த்தம் கொள்ளலாம். வேடிக்கை இல்லையா? உலகத்தில் பிரச்சினை என்று வரும் போதெல்லாம் இன்றைக்கும் மக்கள் அமெரிக்க டொலரையே நம்புவதாகத் தெரிகின்றது. கனடிய டொலரோ பெற்றோலிய எண்ணையின் விலையைப் பொறுத்தே பெரும்பாலும் சமீப காலங்களில் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்திருக்கின்றது. இந்த ஆழிப் பேரலையில் பெற்றோலிய எண்ணையின் விலையிலும் சரிவு காணப்பட்டது. அந்தச் சரிவு கனடிய நாணயத்தைப் பார்த்திருக்கின்றது.

கனடிய நிதி மந்திரி ஜிம் பிளாக்கர்டி அமெரிக்காவில் ஏற்படும் தாக்கங்களால், கனடியப் பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்தாலும், பாதிப்படையக் கூடும் என்று தெரிவித்திருக்கின்றார். என்ன மாதிரியான பாதிப்புக்கள்? எப்போது ஏற்படும்? என்பன போன்ற கேள்விகளுக்கு இப்போது பதில் சொல்வது கடினம்.

ஆனால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வது எளிது. நிச்சயம் அற்ற பொருளாதார நிலை தொடர்ந்து காணப்படுவதால் கடன்களைக் குறைத்துக் கொள்ளுங்கள். கடன் வாங்கி செய்யும் முதலீடுகளை நன்றாக ஆராய்ந்த பின்னரே செய்யுங்கள் அவசர காலத் தேவைக்கு என்று சற்றே பணத்தைச் சேமிப்பில் வைத்துக்கொள்ளுங்கள். குறைந்த பட்சம் மூன்றுமாத வீட்டுச் செலவுக்கான பணமாவது எடுக்கக்கூடிய சேமிப்பில் இருக்க வேண்டும்.

உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற ஆலோசனை பெற இக்கட்டுரை ஆசிரியரின் தொலைபேசி எண்: 416.473.6100 மின் அஞ்சல்: perrii@dreamsandmoney.com, இணைய தள முகவரிகள்: www.dreamsand-money.com, www.perrii.com



**பெரி. முத்துராமன்**


# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தாரின் சேவைகள்

***1989***

## *WORLD MAHA HINDU ORGANIZATION OF CANADA*

***www.mahahindu.org***

All kind of community, religious and cultural services are available in Tamil, Hindi, Punjabi and English in Scarbrough, Toronot, Brampton and Mississauga areas.

புதிதாகக்கனடாவுக்கு குடியேறியவர்களுக்கும் இருக்க இருப்பிட வசதியற்றவர்களுக்கும் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இலவச அத்தியாவசிய உபகரணங்களும் வழங்கப்படும்.

Those who are having problem in getting social assistance, ODSP or any other benefits, are welcome to contact us for immediate service.

வேலை செய்யமுடியாதவர்களுக்கு ஆயுட்கால நிரந்தர உதவிப்பணம் பெற்றுக்கொடுப்பதுடன் அரசசார்பற்ற ஸ்தாபனங்களினால் கொடுக்கப்படும் உதவிகளும் எடுத்துக்கொடுக்கப்படும்.

Volunteers are needed in Ectobicoke and Scarbrough areas. Those who are working as full time volunteers will be eligible for various benefits.

வாகன சம்மந்தமான பிரச்சனைகள் நேருமிடத்து நீதிமன்றம் போகாமலே அவற்றில் இருந்து விடுவித்துக்கொள்வது சம்மந்தமான சட்ட ஆலோசகர்கள் ஒடுங்குசெய்து கொடுக்கப்படும்

தொடர்புகட்கு: ***416 992 7882***
4 Vange Cre. Etobicoke, ON, M9V 3N7

W.M.H.O A annual meeting will take place at 2107 Codlin Crescent on the 1st of October, 2011. The time will confirmed according to programs of others meetings.Those who are coming to meeting to be informed one weeks before the date of the meeting because we have to make some arrangement to for all kind of accommodations.
Call Mr. Shahji at 416 992 7882

# “இனி உங்களுக்காகவே திரைக்கதை எழுதுவார்கள்”

## நேர்காணல்: சரண்யா பொன்வண்ணன்

இன்றைய தமிழ் சினிமாவில் மாறுபட்ட அம்மா கதாபாத்திரம் என்றால், அதற்கான ஒரே நடிகை சரண்யாதான். அனைத்து இயக்குநர்களின் தேர்வும் அவர்தான். அவரை விட்டால், அவரைப் போன்ற ஒரு கச்சிதமான அம்மாவாகத் தோன்ற வேறு ஆள் கிடையாது என்கிறார்கள் இயக்குநர்கள். ‘ராம்’, ‘தவமாய் தவமிருந்து’, ‘எம் மகன்’, ‘களவாணி’, ‘தென்மேற்கு பருவக்காற்று’ ஆகிய படங்களில் அவர் வெளிப்படுத்திய நடிப்பு, தமிழ் சினிமாவில் அம்மா கதாபாத்திரத்துக்கான விதிமுறைகளை திருத்தி எழுதியுள்ளது. ‘தவமாய் தவமிருந்து’ படத்தில் சேரனின் தாயாகவும் ராஜ்கிரணின் மனைவியாகவும் நடித்திருந்தார். நிஜத்தில் சேரனைவிட வயது குறைவாக இருந்தும், தேர்ந்த நடிகரான ராஜ்கிரணே மிரளும்படி ஒரு சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தினார்.

இதனால்தான், “இந்த வருடம் சிறந்த நடிகைக்கான இந்திய அரசின் தேசிய திரைப்பட விருது சரண்யாவுக்கு வழங்கப்பட்டுள்ளது” மிகப் பொருத்தமானது என அனைத்து தரப்பினராலும் பாராட்டப்பட்டது. இந்த விருதுக்கு ஒரு சிறப்பு உள்ளது வழக்கமாக கதாநாயகியாக நடிப்பவர்களுக்கே, சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்படும். அந்த வழக்கம் உடைக்கப்பட்டு, சரண்யாவுக்கு விருது கொடுக்கப்பட்டிருப்பது அவரது நடிப்புக்கும், சினிமா மீதான அவரது காதலுக்கும் கிடைத்துள்ள கௌரவம். மிகச் சரியான நேரத்தில் அவருக்கு மிகச் சரியான இந்த



**சந்திப்பு சிவதானு**

அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

விளம்பரத்துக்காக சரண்யாவை பேட்டி காண தொடர்புகொண்டோம். “வாருங்கள்” என்றார். தமிழ் சினிமா உலகின் மையப்பகுதி என அழைக்கப்படும் கோடம்பக்கத்தில், தேசிய விருது பெற்ற நடிகையின் வீடு என்பதற்கான எந்த ஆர்ப்பாட்டமும் இன்றி, எளிமையாகவும் அமைதியாகவும் இருக்கிறது சரண்யா பொன்வண்ணன் இல்லம். காலிங்பெல்லைத் தட்டினால், கதவைத் திறந்து வரவேற்பது சரண்யா பொன்வண்ணனேதான். வியர்வையும் வெறித்த பார்வையுமாக வாழ்வில் உழன்ற ஒரு கிராமத்துத் தாயின் முகமாக படங்களில் வெளிப்படும் சரண்யா, நேரில் சாந்தமும் புன்னகையுமாக இருக்கிறார். வீட்டின் உள்ளே பொன்வண்ணன் வரைந்த ஓவியங்கள், கணவர் குழந்தைகளுடன் சரண்யா நிற்கும் படங்கள், விருது பெற்ற ஒளிப்படங்கள் வரவேற்பறை சுவரை அலங்கரிக்கின்றன. அடக்கமாகவும் தெளிவாகவும் பேசுகிறார் சரண்யா.

முதலில் தேசிய விருது பெற்றதற்கான எங்கள் வாழ்த்துகள்.

“நன்றி.”

தேசிய விருது பற்றி கேள்விப்பட்டதும் எப்படியிருந்தது மனநிலை?

“மீண்டும் சினிமாவில் நடிக்கத் தொடங்கிய பிறகு அம்மா வேடங்களில்தான் அதிகமாக நடித்தேன். என் தோழிகள், ‘ஏன் அம்மா வேடத்திலேயே தொடர்ந்து நடிக்கிறாய்’ என்றுகூட கேட்டார்கள். ‘ஏன் அம்மாவாக நடிக்கக் கூடாதா’ என்று அவர்களிடம் கேட்டேன். அந்த கதாபாத்திரத்துக்குத்தான் இப்போது எனக்கு தேசிய விருது கிடைத்திருக்கிறது. என் வாழ்க்கையில், இது எனக்கு மிகப் பெரிய வெற்றி என்று நினைக்கிறேன். விருதுகள் பற்றிய நினைப்பெல்லாம் முன்பு எப்போதும் எனக்கு இருந்ததில்லை. ஆனால், ‘தென்மேற்குப் பருவக்காற்று’ பற்றி பத்திரிகைகளில் வந்த விமர்சனங்கள் பெரும்பாலானவற்றில், ‘சரண்யாவின் நடிப்புக்கு தேசிய விருது கிடைக்கும்’ என்றே எழுதியிருந்தார்கள். அதைப் படித்ததும் விருது மீது ஆசை வந்துவிட்டது. இப்போது என்னிடம் பேசும் பலரும், ‘தகுதியான ஆளுக்குத்தான் கிடைச்சிருக்கு’ என்று பாராட்டுகிறார்கள். நன்றாக நடித்தாலும் சினிமாவில் பாராட்டவே மாட்டார்கள். ஆனால், இப்போது விருது கிடைத்ததும், என்னிடம் எத்தனை பேர் பேசினார்கள் என்று கணக்கு வைக்கக்கூட முடியவில்லை. சந்தோசமாக இருந்தது. இத்தனை ஆண்டுகள் நடிப்பில் காட்டிய அக்கறைக்கும் உழைப்புக்குமான அங்கீகாரமாக இந்த விருதை நினைக்கிறேன்.

கொஞ்சம் பயமும் வந்திருக்கிறது. ஆனால், ஒரு வட்டத்துக்குள் இருக்க நினைக்கவில்லை. இதுவரையில் எப்படி நடித்தேனோ, அப்படித்தான் இனிமேலும் நடிக்க முயற்சிப்பேன். ‘இந்தப் படத்தில் நடிக்கமாட்டேன் அந்தக் கதையில் நடிக்கமாட்டேன்’ என்று பிடிவாதங்கள் கிடையாது. ஒரு கதையை யோசிக்கும் போதே, எனக்குப் பொருத்தமான கதாபாத்திரத்தைப் பற்றியும் இயக்குநர்கள் சிந்தித்து விடுகிறார்கள். எனக்குக் கிடைக்கும் பாராட்டில் அவர்களுக்கும் பங்கு இருக்கிறது.”

தேசிய விருது பெற்றுத்தந்த ‘தென்மேற்குப் பருவக்காற்று’ படத்தில் நடித்த அனுபவம் எப்படி இருந்தது?

“நல்ல கோடையில் படப்பிடிப்பு நடந்தது. வயலில் செருப்பில்லாமல் ஏரு பூட்டி உழும் காட்சியில் நடித்தேன். மண் கட்டிகள் காலில் குத்தின. அப்போதுதான் கிராமத்தில் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன்.”

உங்கள் இயக்குநர்கள் பாராட்டினார்களா?

“கடந்த சில வருடங்களாகவே நீங்கள் வெளிப்படுத்திய நடிப்புக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் இது’ என்று சொன்னார் வசந்தபாலன். ‘இனிமேல் உங்களுக்காக திரைக்கதை எழுதுவார்கள் பாருங்கள்’ என்றார் அமீர். ‘இவ்வளவு நாள் இந்த நடிப்பை எங்கே வைத்திருந்தீர்கள்’ என்றார் பெரிய இயக்குநர் ஒருவர்.”

உங்களை அறிமுகப்படுத்திய மணிரத்னமும், முதலில் இணைந்து நடித்த நாயகன் கமல்ஹாசனும் வாழ்த்துத் தெரிவித்தார்களா?

“இல்லை. நான்தான் அவர்களுடன் பேசலாம் என்றிருக்கிறேன்.”

உங்கள் கணவர் பொன்வண்ணன் என்ன சொன்னார்?

“தேசிய விருது பெறுவேன் என்று அவர் மிகுந்த நம்பிக்கையில் இருந்தார். எப்போதும் அது பற்றி சொல்லிக் கொண்டிருப்பார். அவர் நினைத்தது நடந்திருக்கிறது. ரொம்பவும் சந்தோசமாக உணர்கிறார்.”

உங்களுடைய குணச்சித்திர நடிப்புக்கு முன்னோடிகள் யார்?

“நடிகைகள் கண்ணாம்பா, சாவித்திரி ஆகியோரது நடிப்பின் ரசிகை நான். ரெங்காராவ் நடிப்பும் பிடிக்கும்.”

உங்கள் அம்மாவைப் பற்றிச் சொல்லுங்கள்?

“என் அம்மா பெயர், சரோஜினி அன்பானவர். ஆனால், ஆதிக்கக் குணம் கொண்டவர். அவர் சொன்னதை யாரும் தட்டாமல் செய்யவேண்டும் என்று நினைப்பார். தையல் வேலை தெரியும், பொது அறிவில் திறமைசாலி. இப்போது அவர் இல்லை. ஒரு மகளாக அவருடன் கூடவே வாழ்ந்த ஞாபகங்களை மறக்க முடியாது. என் மகள்களுக்கு ஒரு நல்ல அம்மாவாக

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000


AVANI
AT METROGATE
TRIDEL®
BUILT FOR LIFE
Coming Soon
to Kennedy & 401
Register now at
tridel.com or call
416.293.5535
*Prices and specifications are subject to change without notice. Illustrations are artist's concept only. Tridel®, Tridel Built for Life®,
Tridel Built Green, Built for Life® are registered trademarks of Tridel and used under license. ©Tridel 2011. All rights reserved.
E.&O.E. July 2011
TRIDEL
BUILT GREEN
tridel.com


அது ஒருபோதும் இவ்வளவு
பளிச்செனத் தெரியாது.
மார்பகப் புற்றுநோயைப் பார்ப்பதோ உணருவதோ இயலாத காரியமாகக்கூடும். எப்போதையும்விட இன்று அதிக பெண்கள் இந்த வியாதியிலிருந்து பிழைத்துக்கொள்கிறார்கள். வழக்கமாக முலை ஊடுகதிர்ப் படச் சோதனையை (மமோகிராம்) செய்துவருவது நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கும் சிறந்த சிகிச்சையைத் தேர்ந்தெடுப்பதற்கும் வழிநடத்தலாம் என்பதால் முலைப் பரிசோதனையை உங்கள் உடல்நல வழக்கத்தின் ஒரு பாகமாக ஆக்கிக்கொள்ளுங்கள். உங்களால் காண முடியாததை புற்றுநோய்ப் பரிசோதனையால் காணமுடியும்.
அதனால்த்தான் ஒன்டாரியோ இன்னுமதிக பெண்களுக்கு புற்றுநோய் பரிசோதனையை கிடைக்கச் செய்திருக்கிறது. இச்சோதனையை செய்வதற்கு உங்களுக்கு சரியான நேரம் எதுவென்பதை ontario.ca/screenforlife இல் கண்டறியுங்கள்.
Cancer Care Ontario
Canadian Cancer Society
Canadian Breast Cancer Foundation ONTARIO
ontario.ca/screenforlife • 1-866-410-5853 • TTY 1-800-387-5559
ஒன்டாரியோ அரசினால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

# திரைவிமர்சனம் - போட்டா போட்டி



பிலிம்நியூஸ் கிருஸ்ணன்

எப்பவோ வந்திருக்க வேண்டிய படம். இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்த, தமிழக வீரர் சடகோபன் ரமேஷ் நாயகனாக நடிக்கிறார் என்பதால், அப்போது செய்திகளிலும் அதிகம் பேசப்பட்டது. வரும் ஆனால் வராது என வெளியீடு தள்ளிக்கொண்டே போய் பரபரப்பு எல்லாம் ஓய்ந்து, கிட்டத்தட்ட அனைவரும் மறந்துவிட்ட நிலையில், சத்தமில்லாமல் இப்போது வந்திருக்கிறது. 'லகான்' பாதிப்பில், கிரிக்கெட் போட்டி என்கிற ஆதார விஷயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, அதில் முழுக்க முழுக்க நகைச்சுவையைக் கலந்து கொடுத்திருக்கிறார்கள். மதுரை, தேனிக்குப் பக்கத்தில் இருக்கும் உப்பார் பட்டி கிராமம். இந்த கிராமத்தில் கொடை வாணன், கொலைவாணன் என்று இருவர், பங்காளிகள். இதில் கொலைவாணன் கொஞ்சல் தீவிரமான ஆள், கொடைவாணன் நையாண்டி பேர்வழி. தங்களுக்கு படிப்பு வரவில்லை என்பதற்காக ஊர் பள்ளிக் கூடத்துக்கே பூட்டுபோட்ட பெருமை வாய்ந்தவர்கள் இவர்கள். பங்காளிகள் என்றாலே ஒருவருக்கு ஒருவர் ஆகாது என்ற நியதி படி, எதற்கெடுத்தாலும் இருவருக்குள்ளும் சண்டை. எந்த விஷயம் என்றாலும் முட்டிகொள்ளும் இவர்கள், கல்யாண விஷயத்திலும் முட்டிக் கொள்கிறார்கள். ஏகப்பட்ட சொத்துக்களுக்கு வாரிசாக இருக்கும் கதாநாயகி ஹரிணிக்கு, கொடைவாணனும் கொலைவாணனும் முறை மாமன்கள். ஹரிணியை கைப்பிடிப்பதில் இருவருக்குள்ளும் முட்டிக்கொள்கிறது. இருவரும் முறைமாமன்கள் என்பதால் யாருக்கு பெண் கொடுப்பது என்று ஹரிணி பெற்றோரால் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது. எனவே, பிரச்சினை ஊர் பெரியவர்கள் பஞ்சாயத்துக்கு வருகிறது. வழக்கம் போல் ஊர் பெரியவர்கள், ஏதாவது போட்டி வைத்து அதில் வெற்றி பெறுபவர் களுக்கு பெண்ணைக் கொடுக்கலாம் என்று யோசனை சொல்கிறார்கள். அப்போது ஒரு பொடிப்பையன், "எத்தனை நாளைக்குத்தான் ரேக்ளா ரேஸையும் மாடு பிடிப்பதையும் வைப்பிங்க. கிரிக்கெட் போட்டி வைத்து அதுல வெற்றி பெறுபவனுக்கு பெண்ணை கொடுங்கப்பா" என்று சொல்ல, அதற்கு ஹரிணியும் சம்மதம் தெரிவிக்கிறார்.

கிரிக்கெட்டுக்கும் கால் பந்துக்கும் வித்தியாசம் தெரியாத இருவரும் கிரிக்கெட் போட்டிக்கு தயாராகிறார்கள். ஒரு குழுவினர் நிஜ கிரிக்கெட் வீரரான 'சடகோபன் ரமேஷை' கிராமத்திற்கு கடத்திக்கொண்டு வந்து தங்களுக்கு பயிற்சி கொடுக்கச் சொல்கின்றனர். இன்னொரு குழுவுக்கு மலைச்சாமி பயிற்சியாளர். இவர்கள் எப்படி கிரிக்கெட் கற்றுகொண்டு, விளையாட்டு போட்டியில் வெற்றி பெறுகிறார்கள், ஹரிணி யாரை திருமணம் செய்துகொண்டார் என்பதை கிரிக்கெட்டுடன், முழுநீள நகைச்சுவையை கலந்து கொடுத்திருப்பது தான் மீதி கதை.

படத்தின் உண்மையான நாயகன் கொடைவாணனின் அல்லக்கை அவதாரம் பாத்திரத்தில் நடித்திருக்கும் 'அவதார்' கணேஷ்தான். வசன உச்சரிப்பும் அலப்பறையும் என படம் முழுக்க இவர் அட்டகாசமாக அதிகம். "இப்படியே பேசிகிட்டு இருந்தா பொழுது விடிஞ்சுரும்" என்று கதாநாயகன் சொல்ல, "பேசாட்டின்னாலும் பொழுது விடிஞ்சுரும் வாத்தியாரே" என்கிறார். இப்படி படம் முழுக்க இவருடைய லந்துகள் அதிகம்.

இவருக்கு அடுத்து மனதை அள்ளிக் கொள்பவர் கொடைவாணனாக வரும் ஆர்.சிவம். ராசுக்குட்டி பாக்யராஜ் மாதிரியான பாத்திரம். விஜய் ரசிகராக அறிமுகமாகும் போது கொஞ்சம் கடுப்பு வந்தாலும் போகப் போக ரசிக்க வைக்கிறார். கன்னங் கரேல் கூலிங்கிளாஸ், கலர் கலரான சட்டைகள், பளபளக்கும் ரோஸ் கலர் வேஷ்டிகள் சகிதம் மனிதர் புல்லட்டில் கிளம்பினால் ஏரியாவே துவம்சம் ஆகிறது. "அண்ணே உங்க மாமா பொண்ணை கடத்திட்டு போயி முடிச்சுருங்கண்ணே..." என்கிற அல்லக் கையிடம், "அடப்பாவி கொலை பண்ண சொல்றியா" என்று புரிஞ்சுக்கிற அளவுக்கு நல்லவராக இருக்கிறார். "அந்த பொண்ணை கட்டிப் புடிச்சுருங்கண்ணே" என்றால், "ம்ஹூம் எனக்கு பயத்துல கக்கூஸ் வந்திரும்" என்று பம்முகிறார். அசாத்திய உடல் மொழி. கடைசியில் காதலியைத் தாரை வார்க்கும் தியாகியாகிறார்.

கிரிக்கெட் சம்பந்தமான படம் என்பதால் தப்பிக்கிறார் சடகோபன் ரமேஷ். நடிப்பில் பரவாயில்லை. ஆனால், இன்னொரு பயிற்சியாளரான மயில்சாமி, பெரிய கிரிக்கெட் பயிற்சியாளர் மாதிரி அடிக்கிற கூத்துகள் இன்னும் கொஞ்ச காலத்திற்கு நகைச்சுவை தொலைக்காட்சிகள் வந்துகொண்டே இருக்கும். "பி... ஏ... எல்... எல்... பால்" என்று அவர் சொல்லிக் கொடுக்க, கிராமத்து ஆசாமிகள் பயபக்தியோடு ஒப்பிப்பது சுவாரஸ்யம்.

சமிகஷா, ஜெயாசீல் இருவரையும் சேர்ந்து செய்த கலவையாக இருக்கிறார் நாயகி ஹரிணி. பாவாடை, சட்டையில் அலையும் கிராமத்துப் பெண்ணுக்கு பொருத்தமான, குழந்தைத்தனமான முகம். ஹரிணி கிடைப்பாங்கன்னா, கொலைவாணனும் கொடைவாணனும் மட்டுமல்ல, யாரு வேணும்னாலும் மல்லுக்கட்டுவாங்க. அவ்வளவு, ஆர்ப்பாட்டமில்லாத அழகு. கண்களாலே பேசுகிறார். இரண்டு முட்டாள் முரடன்களும் தனக்காக அடித்துக்கொண்டு நிற்கும்போது, எவரைக் கண்டும் அஞ்சாமல், ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் சுட்டிப்பெண்ணாக இருக்கிறார். அருள்தேவின் இசையில் இரண்டு பாடல்களை மட்டும் கேட்கலாம். 'இதுவரை இதுவரை' பாட்டும், பயிற்சி எடுக்கும் பாட்டும் பரவாயில்லை. அவரும் ஒரு பாட்டுக்கு சம்பந்தமே இல்லாமல் வந்து இங்கில்ஷ் ஸ்டைலில் நீச்சலுடைப் பெண்களோடு ஆடிவிட்டுப் போகிறார். கோபி அமர்நாத்தின் ஒளிப்பதிவு, ஆரம்பத்தில் தொடங்கி இறுதிக் காட்சிவரை ஓவியமாக இருக்கிறது. கிராமத்தை கண்ணுக்குக் குளிர்ச்சியாக படம் பிடித்திருக்கிறார். அதிலும், 'இதுவரை' பாட்டு படமாக்கி இருக்கும் விதம் கொள்ளை அழகு. கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: யுவராஜ் என்கிற புதியவர். ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு பாத்திரமும் ரசிகர்களை சிரிக்க வைக்கவேண்டும் என்று முடிவு செய்துகொண்டுதான், திரைக்கதை எழுத உட்கார்ந்திருப்பார் போல. படம் முழுக்க நம்மை யோசிக்க விடாமல் தொடர்ச்சியாக சிரிக்க வைத்துக்கொண்டே இருப்பது இயக்குனரின் பலம். அதனுடன் மலைகளும் மரங்களும் எவ்வளவு முக்கியம் என்கிற சுழழியல் விழிப்புணர்வையும் பார்வையாளர்கள் தலைக்குள் ஏற்றி விடுகிறார். ஒரு பாடலுக்கு

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

**WANTED: JUNK OR UNWANTED CARS**

*We will buy your Van, Truck, Suv & Cars working or not working. We pay cash and pick it up / tow it for free.*



**தேவை**

உங்களிடம் உபயோகமற்ற வாகனங்கள் உள்ளனவா? அவை தகுந்த விலை கொடுத்து வாங்கப்படும்.

*Please Call - Kumar*

647.213.0099 / 647.703.1955



Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

# GTA Square இன்

# கோடையில் ஓர் வசந்தம் நிகழ்வுகள்

GTA Square உள்ளரங்க அங்காடி வருடாவருடம் நடத்திவரும் 'கோடையில் ஓர் வசந்தம்' (A Spring in Summer) இருநாள் நிகழ்வு, இம்முறையும் வழமைபோல சிறப்பாக நடந்தேறியது. ஆகஸ்ட் மாதத்தில் 6 & 7 ஆம் நாட்களில் மதியம் தொடங்கி இரவு 10 மணிவரை மிகவும் கோலகலமாக நடந்தேறியது. முதல் நாள் நிகழ்வில் Mega Tuners இன் இசைநிகழ்சியும், இரண்டாம் நாள் நிகழ்வில் Fashion Show ஐயும் சிறப்பாகக் குறிப்பிடலாம். Face Painting, Colouring Contest, Cake Making, Yoga பயிற்சி, கணபதி ரவீந்திரனின் நகைச்சுவை, தனிப்பட்டவர்களின் நடனம், ஆடல், பாடல்..... என பல நிகழ்வுகள் மக்களை கவர்ந்ததோடல்லாமல் அங்காடியில் இருந்த வியாபார நிலையங்களிற்கு அதிகூடிய வியாபாரம் நடந்ததனை காணக்கூடியதாக இருந்தது.













**5215 Finch Ave. E, Finch & Middlefield**
**Scarborough, ON M1S 0C2**
**Tel.: 416.292.4400**

228

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

அற நனைந்தவனுக்கு குளிரென்ன கூதலென்ன என்பார்கள்.
இந்த வருடம் வெயிலெறிக்கும் நேரத்தில் மழை. மழை பெயும் நேரத்தில் குளிர்.
காற்றடிக்கும் நேரத்தில் புயல்.
அதுமட்டுமல்லாமல் சுனாமி, சூறாவழி என காலமாற்றமே தலைகீழாக நிக்கிறது.

முருகேசர் ஆங்கிலச் செய்திகளையும் தமிழ்ச் செய்திகளையும் படிக்கும்வரை உலகரும் ரி.வி றேடியோ (தமிழ்) பத்திரிகைகளைப் பார்த்து முருகேசர் உலகச் செய்திகளைப்பற்றிக் கதைக்கும்பொழுது தானும் தெரிந்தமாதிரி ஏதாவது சரியோ பிழையோ கதைக்கவேணும். இல்லாவிட்டால் ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் உங்களுக்கு உது தெரியாதோ என்று நளினமாகக்கேட்பார்கள் என்ற பயம்.

முருகேசர் சீனியில்லாத பால்விடாத வெறும் தேனீரையும் பட்டர் ஜாம் பூசாத பாணைச் சாப்பிட்டுவிட்டு கதைக்கத் தொடங்கினார்.






உலகு தன்வினை தன்னைச்சுடும் எண்டதுபோல ….
உலகில் பல பகுதிகளை பகலிரவின்றி தனது ஆட்சியை (அஜாரக முறையில்) ஆண்டவர்கள் தான் ஆங்கிலேயர். அதாவது இங்கிலீசுக்காரர் வெள்ளையர் நடக்கும் வீதிகளில் கறுப்பு இனத்தவர் நடக்கக்கூடாது. ரெயில் பஸ்களில் சரிசமமாக இருக்கக்கூடாது எனத்தொடங்கி பல்லாயிரக்கணக்கான சட்ட விதிகளை இயற்றி அடி உதை சித்திரவதை கொலையென தம்மால் முடிந்தளவு செய்தவர்கள்.



(டயானாவின் இறப்பு அதாவது பிரான்ஸில் நடந்த விபத்தில்கூட எலிசபேத மகாராணி குடும்பத்திற்கும் தொடர்பு இருக்கு என பத்திரிகைகள் வானொலி தொலைக்காட்சிகள் கூறிருகின்றன)




அதுதானே கறுப்பின ஆளைச்சுட்டதெண்டு லண்டனிலை கலவரம் துவங்கி கண்டநின்ட இடமெல்லாம் கடையுடைப்பு கார்எரிப்பு கொலை கொள்ளை… 'வெள்ளையனே வெளியேறென்ரார் மகாத்மா காந்தி"

இண்டைக்கு வெள்ளையரே வெளியிலை வராதளவுக்கு ஊரடங்குச்சட்டம் சந்து பொந்தெல்லாம் பொலிஸ் என லண்டன் நிலவரம்பற்றி லட்சணமாய் சொல்லிவைத்தா ஆட்டிலறி அன்னம்மா. வரலட்சுமி விரதம் பலகாரங்களைக் கொண்டுவந்து (நிரந்தர விசிற்ரேஸ்) ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட்ளோர் செல்லம்மாவுக்கும் கொடுத்தா ராசம்மாக்கா




உலகண்ணை முந்தி கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் கப்பலில் திக்குத்திசைதெரியாது பல நாட்களின் பின் கஸ்டத்தின் பின் கரையொதுங்கிக் கண்டுபிடித்தது தான் அமெரிக்கா.

ஆனால் தமிழ் அகதிகள் இன்று கப்பலில் வந்து கரையொதுங்க விடாது அமெரிக்கா கனடா அவுஸ்திரேலியா நாடுகள் நண்டு கணவாய் மீன் பிடிப்பதைவிட்டு நடுக்கடலில் நங்கூரமிட்டுக் காத்திருக்கின்றனர் என்று சொல்லிச்சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



ஆட்டிலறி அன்னம்மா திரும்பிப்பார்த்தபடி
முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றி யானுமிட்ட தீ
மூள்க மூள்கவே.






ஞாபகம்..வருகிறதா?
ஒகஸ்ற்: 16. ராமகிருஸ்னர் பரமகம்சர் (நினைவு தினம்)
18: நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் (நினைவு தினம் 1945)
31. இளவரசி டயானா ( நினைவு தினம் 1997)


# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஜோதிடம்





## பண்டித் மகேந்திரன் சுவாமிகள்

ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்





மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள் அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும் பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்

100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

**Tel: 647-919-5846 / 647-718-9555**
**5210 Finch Ave. East, Unit # 1, Scarborough**
**(Inside of Golden Bakery)**
**Beside the Meenadchi temple ON, M1S 4S4**

# BASEMENT RENT

**MORNINGSIDE & STAINS**
பிரத்தியேக வாசலுடன் கூடிய 2 Berdroom bsmt apt. வாடகைக்கு உண்டு. அமைதியான சிறு குடும்பம் மற்றும் வதிவாளர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.272.5165

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to TTC, school, mall. Avail. Anytime.
Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.285.0849

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, parking, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.504.0272

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. September 01, 2011.
647.835.0268 / 905.294.2674

**MARKHAM & HIGHGLEN**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. September 01, 2011.
905.472.0915 / 416.554.6553

**BIRCHMOUNT & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to to TTC, mall, subway, school. Family or students preferred. Avail. September 01, 2011.
416.701.9942 / 647.883.2257

**MARKHAM & ELSON**
Newly done 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.816.9912

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, Tim hortons. Avail. September 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.757.5179

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. September 15, 2011.
905.471.2987 / 416.666.3971

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, mall . Avail. October 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.248.6319

**MORNINGSIDE & OLDFINCH**
1 Bedroom bright spacious bsmt for rent. Sep. entrance, Highspeed internet, VIP cable, parking, laundry. Close to TTC, school. Avail. September 01, 2011
416.896.7425 / 416.724.1063

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. Ladies or couple only.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**KENNEDY & HWY 401**
1 Bedroom bsmt + den for rent. Close to all facilities. Rent $1150.
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Rent $1400.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**MCCOWAN & ELLESMERE SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom bsmt + den for rent. Close to all facilities. Rent $1200.
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Rent $1450.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt இல் 1 bedroom வாடகைக்கு உண்டு. Close to TTC, nofrills, walmart, tamil stores, school. Avail. Ladies preferred. Avail. September 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.554.6557

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance Ladies preferred. Avail. September 01, 2011.Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.418.5479

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.995.2319

**MORNINGSIDE & SHEPPARD ROUGH RIVER & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.220.5967

**VICTORIAPARK & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, hwy 401, DVP, mall, bank. Avail. immediately.
No pets & No smoking
தொடர்புகளுக்கு: 416.816.3114

**MARKHAM & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
905.201.6619 / 647.709.2316

**BELLAMY & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.509.0937

**KINGSTON & GUILWOOD / LAWRENCE**
2 Bedroom + den bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, high school, university. Avail. immediately. No smoking & No pets. Working couples & Family or 3 students preferred.
தொடர்புகளுக்கு: 416.816.5293

**WARDEN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. October 01, 2011.
416.494.0850 / 416.315.5648

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.439.1507 / 647.774.5667

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 905.201.6572

**NIGHTSTAR & FINCH**
2 Bedroom brand new fully renovated bsmt for rent. Close to TTC, school. Rent $750 with bills. Avail. immediately.
416.901.0674 / 647.831.3242.
(Call after 5pm)

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, cable. Close to RT, scarborough town center.
Rent negotiable. $750
தொடர்புகளுக்கு: 416.431.5172

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
416.903.2437 / 647.986.1437

**MORNINGSIDE & MORNING VIEW TRAIL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, walmart, bank, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.706.7832

**MIDLAND & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bakery. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.947.8698

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, utilities. Close to TTC, Malvern mall, school. Avail. September 01, 10. தொடர்புகளுக்கு: 647.214.1085
Monday - Friday - 4:30pm - 9:30pm
Weekends: 10:00 - 9:30 pm

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.473.2988 / 647.990.4584

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.937.0220

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk - out bsmt for rent. Parking. Close to TTC (2 min. Walk), 5 min. walk to Finch. All amenities close-by. Avail. September 03, 2011.
சிறுகுடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.492.9816

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
2 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, fullwashroom, laundry, sep. entrance. Avail. immediately. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, hospital. Avail. September 01, 2011. Very strictly No smoking & No Alcohol.
Rent $700+ 40%utilities.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately. அத்துடன் Gas Stove ஒன்றும் விற்பனைக்கு உண்டு.
416.579.7255 / 416.431.6428

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, own laundry, shopping,TTC, schools, temples, cable, hydro included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.449.7440

**MARKHAM & BUR OAK**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, go station, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.8692

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.871.6149

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
416.569.7307 / 416.289.8728

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.704.7659

**DENISON & MIDDLEFIED**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.562.5113

**MIDLAND & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, RT, mall, school.
416.266.4789 leave message
416.980.5697 8:00am - 4:00pm

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**BIRCHMOUNT & ST.CLAIR**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, kitchen, one full washroom & living room. Close to TTC and other facilities.
No smoking & No pets
Please Call: 416. 882.4532

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**COPPARD & 14TH AVE**
1 Bedroom for rent. Close to all facilities. Parking. Avail. September 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.771.1442

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom for rent. Washroom, parking, laundry. Close to TTC, shopping. Avail. immediately.
647.547.5119 / 647.339.9095

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**MILITARYTRAIL & ELLESMERE**
மேல்தளத்தில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
905.201.9166 / 647.522.9166

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom apt for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.605.5475

**MIDDLEFIELD & DENISON**
மேல்தளத்தில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Daily meals avail. Close to TTC, YRT, cable, internet, parking including. Avail. immediately.
905.201.9901 / 416.648.1987

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

# BASEMENT RENT

**NEILSON & FINCH**
**MARKHAM & MCNICOLL**
1 Bedroom huge walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, mall. Avail. September 01, 2011. Couple or single person preferred.
தொடர்புகளுக்கு: 416.298.7081
416.417.9541 / 647.241.0944

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking,. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. 647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**BIRCHMOUNT & SHEPPARD**
Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.804.8435

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TT, mall. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

## GTA UNITS FOR LEASE

2 Main floor adjacent units facing the entrance. High traffic area with plenty of parking space. Suitable for stores / shops / offices.
தொடர்புகளுக்கு: Perrii: 416.473.6100

## APARTMENT FOR RENT

**MCCOWAN & EGLINTON**
2 படுக்கை அறைகளை கொண்ட Apt. ஒன்று வாடகைக்கு உள்ளது. Avail. September 01, 2011.
416.792.2545 / 647.857.9773

## CONDO. FOR RENT

**WARDEN & FINCH**
**2050 Bridletown Cir.**
3 Bedroom condo. for rent. 1½ washroom, cable, parking, security, water, gas, washer, dryer included. Current bill extra. Close to TTC, malls, banks.
தொடர்புகளுக்கு: 416.274.9726

## CONDO. FOR LEASE

**KENNEDY & HWY 401**
Brand new 2 Bedroom condo. for lease. 2 Washroom. Avail. immediately.
**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease. Close to all facilities. Asking price $1450.
தொடர்புகளுக்கு: 416.315.9397

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

# HOUSE FOR RENT

**WARDEN & FINCH**
3 அறைகள் கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு உள்ளது. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். தேவையெனின் தளபாடங்களுடன் வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம். முதியவர்கள் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது. Avail. September 01, 2011
தொடர்புகளுக்கு: 416.335.9779

**MARKHAM & BRIMORTON**
3 Bedroom main floor house + 3 bedroom bsmt for rent. Parking, laundry. தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். Close to TTC, stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.289.9744

**MEADOWVALE & MORNINGSIDE**
2 Bedroom house for rent. Close to all facilities. Parking. Avail. September 01, 2011. 1 Bedroom also available.
தொடர்புகளுக்கு: 416.300.7595

**KENNEDY & EGLINTON**
Three bedroom house with all facilities.

Very good for small family with children.

Very convenient location with schools, banks, shopping, doctors.. also parking and garden.

Avail. immediately.

Please call: 416.285.4695

## CONDO. FOR SALE

**KENNEDY & HWY 401**
1 Bedroom + den Condo. for sale. Close to all facilities. Rent $269,900.
2 Bedroom condo. for sale. Close to all facilities. Rent $289,000.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**MCCOWAN & 401**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den Condo. for sale. Close to all facilities. Rent $249,900.
2 Bedroom condo. for sale. Close to all facilities. Rent $319,000.
தொடர்புகளுக்கு: 647.829.9456

## மணமகள் தேவை

42 வயது 5' 10" உயரமுடைய அழகிய கனேடிய குடியுரிமையுடைய நிரந்தர தொழில் செய்யும் குடிப்பழக்கமற்ற மணமகனுக்கு நற்குணங்களையுடைய 30 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதுடைய மணமகள் வேண்டும். விவாகரத்துடையோரும் ஏற்கப்படுவர். சோதிடத்தில் ஆர்வம் இல்லை.
தொடர்புகளுக்கு: 416.514.1661

## மணமகன் தேவை

கனடாவில் Accountant ஆக பணியாற்றும் 1980 ஆம் ஆண்டு பிறந்த இந்து மதத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். கனடாவில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.823.2319

## மணமகன் தேவை

இலங்கையை வசிப்பிடமாகவும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றமுடைய மணமகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள்.
403.966.7278 / 416.710.2686

மேலும் பக்கங்கள் 24, 26

# JOB JOB JOB

**MISSISSAUGA AREA ONLY**
Sales representative wanted. Part-time job. Speaking Tamil & English.
தொடர்புகளுக்கு: 647.710.3104

## Delivery driver wanted
## Downtown

**416.497.7660 / 647.771.6237**

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.430.8238

**JAPANESE FOOD**
**QUEEN & WOODBINE**
Looking for kitchen helper & delivery driver.
தொடர்புகளுக்கு: **416.918.9936**

Kitchen, cabinet, bsmt renovation, deck, car port, painting, city approval plan for car port, carpentry works, flooring.
தொடர்புகளுக்கு: 416.802.6067

Hardwood $3.99, Laminate $1.49 pluse installation.
தொடர்புகளுக்கு: 416.830.3932

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுட செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## அம்மன் மூவிங் & டெலிவெறிஸ்

Best Price in town.
குப்பை அகற்றுதல்
தொடர்புகளுக்கு: 416.999.9409

## MINI VAN SERVICE

Toronto Airport சேவை, கோயில்கள் மற்றும் உங்கள் வாகனத் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
Raj: 416.858.4310 / 416.724.9427

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் றோட்டில் சேக்கிரட் காா்ட் கொலிச்சிக்கும் அரசடிக்கும் இடையில் சுற்றிவர மதில் உள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.438.4852

## COMMERCIAL UNIT FOR SALE IN GTA SQUARE

Window exposure, 2nd floor finished unit. Available for multiple salon, retails, rental office. Optical office. Asking price $139,900.
தொடர்புகளுக்கு: 416.315.9397

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259



S.F. Xavier (ஆசிரியர்)

# மாணவர் பகுதி

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

**Answers** **TUTORIAL 283**

## Tutorial 284 Answers

(1) A place parallel to the yz plane has directions a = (0, 1, 0) and b = (0, 0, 1). This plane through the point (6, 4, 2), a vector equation is r = (6, 4, 2) + s (0, 1, 0) + t (0, 0, 1).

(b) A plane contains the x - axis and the point A (-1, -4, -7). Two points on the x - axis are 0 (0, 0 , 0) and B (1, 0, 0) two directions are AO =(1, 4, 7) and OB = (1, 0, 0). An equations. r = s(1, 0, 0) + t (1, 4, 7).

(2) A plane contains the intersecting lines x - 2/1 - y/2 = z + 3/3 and x - 2/-3 = y/4 = 2 + 3/2. The common point is (2, 0, -3) and two direction vectors are a = (1, 2, 3)& b = (-3, 4, 2). Normal to the plane is n = a x b = (-10, -11, 10)<= = (10, 11, -10). The scalar equation is 10x + 11y - 10z + D = 0, since it passes thro point (2, 0, -3). 20 + 30 + d = 0

D = -50. $Eq^n$ is 10x + 11y - 10z - 50 = 0.

(3) (a) 6 4 8 00 = $2^5.3^4.5^2$ Here we form three term sequences where there are 6 choices for the 1st term (0, 1, 2, 3, 4, 5) and for each of these 5 choices for the 2nd term and 3 for 3rd Term. Hence there are 6.5.3 = 90 integer divisers.

(b) For even divisers, the 1st term of our sequence must be one of 1, 2, 3, 4 or 5, 5 choices, hence there are 5.5.3 = 75 even diviser of 64800.

(4) Let the length be 2x and the heightly. We know $x^2$ + y2 = 100.

y = $\pm\sqrt{100 - x^2}$ Negative area = 2xy. $=2x\sqrt{100 - x^2}$



A = $2X\sqrt{100 - X^2}$ da/dx = $2\sqrt{100 - x^2}$ + 2y,

1/2 $(100 - x^2)^{½}$ ∴ -2x)

For max or min da/dx = 0 $2\sqrt{100 - x^2} - 2x^2/\sqrt{100 - x^2} = 0$

2 (100 - $x^2$ - $2x^2$ = 0 100 = $2x^2$

$x^2$ = 50 x = $5\sqrt{2}$

The largest area occurs when x = $5\sqrt{2}$.

And the area is = $10\sqrt{2}.\sqrt{100 - 50} = 10\sqrt{2}.\sqrt{50}$ = 100sq. units.

(5) P = 5000(1.07)T to find population in 3 years

Let = t = 3 p = 5000 (1.07)3 = 6125 will be population.= 6125 in 3 years.

## Tutorial 285 Questions

(1) To make concert, mix 4 shovels of stone, 2 shovels of sand and 1 should of cement. Find the number of shovels of stone required to make 350 shovels of concert? (for Grade 6 - 8)

(2) A lady buys six dozen apples at $1.32 a dozen and sells each apple for 20¢. Find her profit? (For Grade 6)

(3) Divide f(x) = $x^4 - 5x^2 + 4$ by d(x) = $x^2 - 3x + 2$. (For Grade 11)

(4) (a) Show that (x - y) is a factor $x^4 - y^4$. (b) Factor $x^4 - 81$. (For Grade 11)

(5) Factor $x^5 + y^5$ (For Grade 11 & 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

**Contact: 647.340.9490 / 647.831.0363**

**RESTAURANT FOR SALE**

**MARKHAM & STOUVILLE**

நல்லநிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் கனேடிய Breakfast உணவகம் ஒன்று விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: **416.737.9167**

பாடும் மீன்களின் பொழுது 2011

மீன்பாடும் தேனாட்டாரின் ஒன்றுகூடல்

காலம் : ஆகஸ்ட் 20 சனிக்கிழமை

காலை : 10.00 மணி - மாலை 8.00 வரை

இடம் : **Rowantree Mill Park Lot 1 (Islington & Finch )**

சிறுவர்கள் பெரியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளுடன் பல விநோத நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் பாடும் மீன்கள்

416 709 8844 / 416 419 6742 / 416 272 8913

நாய் ஒரு Bus stop இல் நின்றது. Bus வரும் நேரங்களை பார்த்தது. கந்தன் வியந்தான்!

இன்னும் சில நேரத்தில் ஒரு Bus வந்தது. நாய் அதன் இலக்கத்தை பார்த்து விட்டு மீண்டும் Stop க்கு வந்தது. கந்தன் இன்னும் அதிசயம் கொண்டான். பின்னர் இன்னும் ஒரு Bus வந்தது. அதன் இலக்கத்தை பார்த்துவிட்டு நாய் Bus இல் ஏறியது.

கந்தன் நாயை பின்தொடர்ந்தான். கொஞ்ச நேரம் Busல் இருந்த பின்னர் நாய் ஒரு Stop இல் இறங்கியது. கொஞ்ச நேரம் நடந்து, ஒரு வீட்டிற்கு வந்தது. அது இரண்டு காலில் எழும்பி அழைப்பு மணியை அடித்தது. கந்தன் பார்த்துக் கொண்டிருந்தான். வீட்டிற்கு வெளியே பெரிய மனிதன் ஒருவன் வந்து நாயை திட்ட தொடங்கினான்.

கந்தன் மிக வியந்து அவனை தடுத்தான், ‘ஏன் அந்த நாயை பேசுகிறீங்கள்?! அது மிகவும் அற்புதமான நாய்! என்றான்.
மற்றவர், ‘அற்புதமா?! இந்த முட்டாள் நாய், இந்தக்கிழமை இரண்டாம் முறை தன்னுடைய சாவியை மறந்து விட்டது!’ என்றான்.

சில நாட்களிற்கு பின்னர் அந்த ஆளின் மகள் மல்லிகை, நாயுடன் ஒரு Talent Show வுக்கு சென்றாள். ‘என்னுடைய நாய்க்கு பேசத்தெரியும்! என்றாள் மல்லிகை. ‘அப்படியா? சரி...’ என்று நடுவர் கூறினார்.

‘றோவர்’ (Rover), வீட்டிற்கு மேல் என்ன இருக்கிறது? என்று கேட்டாள் மல்லிகை. ‘றூவ்’ (Roof) என்றது றோவர்.
சரி, ‘அரத்தாள்’ (Sandpaper) என்ன மாதிரி இருக்கும்? ‘றவ்’ (Rough) என்று நாய் பதில் சொன்னது.
‘மரத்திற்கு வெளியே என்ன இருக்கும்?’ என்றாள் மல்லிகை. ‘ஃபார்க்’ (Bark) என்றது றோவர்.
மிகத் திறமான Baseball வீரர் யார்? என்றாள். ‘றூத்’ (Ruth Babe Bath) என்றது நாய்.

‘என்ன இது மல்லிகை, நாய் றூவ், றவ், ஃபார்க், றுத் (Roof, rough, bark ruth) என்று தான் குரைக்கும் என்றார் நடுவர்.

மல்லிகை வெளியே வந்தாள். றோவர் அவளை பார்த்து, ‘என்ன, நான் வேறு ஒருவரின் பெயர் சொல்லியிருக்க வேண்டுமா? எனக் கேட்டது.



**ஞா. ஆரணி**

அகவை 13

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# புத்திசாலி நாய்

ஒரு நாள் கண்ணன் தன் அலுவலக யன்னலில் 'உதவி வேண்டும்' என்ற ஓர் அறிவித்தலை வைத்தான். அதில் 'வேலையாட்கள் தேவை, அவர்கள் கணினியை பாவிப்பவர்களாகவும், கடிதம் எழுத தெரிந்தவர்களாகவும், இருமொழி அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். நாங்கள் ஒரு Equal Opportunity Employer' என்று எழுதியிருந்தது. சில நேரத்திற்கு பின்னர், இதை ஒரு நாய் கண்டது. அது உள்ளே சென்றது. அதை கண்ணன் கண்டான். அந்த நாய் கண்ணனை பார்த்து அறிவித்தலை சுட்டிக் காட்டியது. அதை விளங்கிய கண்ணன், 'நாங்கள் உன்னை வேலைக்கு எடுக்க முன் நீ கணினியை பாவிப்பாய் என்று நிரூபிக்க வேண்டும்', என்றான்.

இதைக் கேட்ட நாய் கணினிக்கு முன் அமர்ந்து, Spreadsheet ஒன்றை செய்து Print பண்ணி கண்ணனிடம் காட்டியது. இதைக் கண்ட கண்ணன் மிகவும் வியந்தான். ஆனால் மீண்டும், 'நான் உன்னை வேலைக்கு எடுப்பதற்கு முன் நீ ஒரு கடிதத்தை எழுதுவாய் என்று காட்ட வேண்டும்' என்றான்.




நாய், Typewriter முன் அமர்ந்து ஒரு தரமான கடிதத்தை எழுதி கண்ணனிடம் காட்டியது. இதைப் பார்த்த கண்ணன் மிக மிக அதிர்ச்சி கொண்டான். நாய், அறிவித்தலில் இருந்த 'நாங்கள் ஒரு Equal Opportunity Employer', என்ற வசனத்தை சுட்டிக் காட்டியது. கண்ணன் 'அது சரி தான். ஆனால், நீ இரு மொழி அறிவு உள்ளவன் (Bilingual) என்று காட்டினால் தான் நான் உன்னை வேலைக்கு எடுக்கலாம்' என்றான். இதைக் கேட்ட நாய் கண்ணனை பார்த்து, ஒருமுறை 'மியாவ்' என்று கத்தியது. கண்ணனால் தன்னுடைய காதுகளை நம்ப முடியவில்லை. அதிசயத்தால் வந்த மௌனம் கலைய அவன் நாயை வேலைக்கு சேர்த்தான்.

சில நாட்களிற்கு பிறகு அந்த நாய் வாயில் ஒரு கடித உறையை கவ்விக் கொண்டு, ஒரு மளிகை கடையினுள் (Grocery store) நுழைந்தது. கடையின் முதலாளி ஆன கந்தன் நாயைக் கண்டான். நாயும் அவரை கண்டு கடித உறையை கந்தனிடம் கொடுத்தது. அதனுள் கொஞ்ச பணமும் ஒரு கடிதமும் இருந்தன. கடிதத்தில் எனக்கு 3 Tin நாய் உணவும், 2 எலும்புகளும் வேண்டும். இதற்கான பணம் இந்த கடித உறையில் இருக்கிறது என்று எழுதியிருந்தது.

கந்தனும், இவற்றையெல்லாம் ஒரு பையினுள் வைத்து நாய்க்கு கொடுத்தான். நாய் அதை கவ்விக் கொண்டு கடையின் வெளியே சென்றது. ஆர்வம் கொண்ட கந்தன் நாய்க்கு பின்னால் சென்றான். சில நேரத்திற்கு பின்னர்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

**SCARBOROUGH**
**MORNINGSIDE & ELLESMERE**
*4 Bedroom detached house. Very clean. 4 Parkings. Close to U OF T, Centennial College, schools, banks, shopping, doctors, HWY 401 & all facilities. Avail. 1st week of september.*

**Contact: 416.356.8958**

**STOUFFVILE**
**9TH LINE & REEVES WAY**
*Brand new. never lived 3 bedroom house for rent. Close to walmart, Canadian tire, HWY 48, & all facilities. Avail. 1st week of september.*

***TUTORING (WEB DEVELOPMENT)***
***By Experienced Graduate Tutor***
Math 6 - 11, Physics - 11
Data Management - 12
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTMA, ASP, PHP & Mysql. Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

***TUTORING***
**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

**COMPUTER REPAIR**
- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

மேலும் பக்கங்கள் 24, 25

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

***ROOM FOR RENT***
***WARDEN & FINCH***
சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய இரு அறைகள் தளபாடங்களுடன் (Fully furnished) வாடகைக்கு உண்டு. மாணவர் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்: 416.509.6780

***COTTAGE FOR RENT***
***HWY 400 & HWY 12***
***2*** படுக்கை அறைகள், சமையலறை, Living room சகல வசதிகளுடனும் உள்ள Cottage ஒன்று வாடகைக்கு உள்ளது. ***Close to beach, Midland church. More attractions. Weekdays or Weekends.***
தொடர்புகளுக்கு: ***416.818.5493***

***TROUT WATER FAMILY CAMPING***
Cottage & Tent, Ponds for fishing and boating, Golf Car rentals, Bike rentals, Clean Showers, Flush Toilets, Cabins for rental, Day or Weekends, Storage Facilities, Playground for Volleyball, Soccer, Football.



***Contact : 416.727.6525 / 705.357.1754***

# தூத்துக்குடி மாவட்டம் முற்காலத் தமிழர் நாகரிகம்

ஒரு காலத்தில் முத்துக் குளிப்பிற்கு புகழ்பெற்ற நகரம், தூத்துக்குடி. இப்போதும் அதற்கான காலங்களில் முத்துக் குளிக்கிறார்கள். தூத்துக்குடியின் இன்னொரு சிறப்பு, இந்நகரின் பெரிய பாரம்பரிய தொழிலான உப்புத் தயாரிப்பு. இந்தியாவில் வேறு எங்கும் தூத்துக்குடி வெண் உப்புக்கு இணையான உப்பு இல்லை என்கிறார்கள். அந்த வகையில் இந்தியாவுக்கே உப்பிடும் ஊர் உள்ளளவும் நினைக்க வேண்டிய ஊர். தூத்துக்குடி ஒரு துறைமுக நகரமும்கூட. சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் துறைமுகங்களில் இந்தியாவின் இரண்டாவது பெரிய துறைமுகம் தூத்துக்குடிதான். தற்போது, இவற்றுடன் பல நவீன தொழிற்சாலைகளும் வந்துவிட்டன. முதலில், திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் இருந்தது, தூத்துக்குடி. தொழில்களும் மக்கள் தொகையும் பெருக, நிர்வாக வசதிக்காக, திருநெல்வேலியையும் தூத்துக்குடியையும் தலைநகரமாகக் கொண்டு திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஆதிச்சநல்லூர், திருச்செந்தூர், மணப்பாடு, உவரி, வாஞ்சி மணியாச்சி, திருக்கோளூர், திருப்புளியங்குடி, ஸ்ரீவைகுண்டம், பாஞ்சாலங்குறிச்சி, குலசேகரப்பட்டிணம், கொற்கை துறைமுகம், ஒட்டப்பிடாரம் வ. உ. சி. இல்லம், கட்டபொம்மன் நினைவு மண்டபம், பாரதியார் இல்லம், கயத்தாறு, எட்டையபுரம் என பெரியதும் சிறியதுமான சுற்றுலா தலங்கள் பல உள்ளன. இவற்றில் திருச்செந்தூர், உவரி, மணப்பாடு, குலசேகரப்பட்டிணம் ஆகிய ஊர்களை நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோம். மற்ற ஊர்களை ஒவ்வொன்றாக இப்பொழுது பார்ப்போம்.

**- வழிப்போக்கன் -**



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 95

முதலில், ஆதிச்சநல்லூர்...

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில், இருபத்தி நான்கு கி.மீ. தென்கிழக்கில், தாமிரபரணி ஆற்றின் வல திசையில் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் மேல் திசையில் இருக்கிறது ஆதிச்சநல்லூர். அழகிய சிற்றூர். கறுப்பு, சிவப்பு மண்மேடுகள் களிமண் மணலாய் வியாபித்திருக்கும் பரந்த நிலப்பகுதி சமச்சீரான வெப்பம் அரிதாகத்தான் மழை பெய்கிறது. எனவே, தாமிரபரணி ஆற்று நீர்ப்பாசனத்தை நம்பித்தான் விவசாயம் செய்யப்படுகிறது. தாவரங்கள் உயிர்த்தெழுந்ததும் கானமயில்களின் உற்சாக நடனம் தவறாமல் காணக்கிடைக்கும். இங்கு இரண்டு நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் அகழாய்வில் சமீபத்தில் கிடைத்துள்ள அரிய சான்றுகள், மிகவும் முற்கால தமிழ் நாகரிகம் ஆதிச்சநல்லூர் தான் என்பதை உறுதி செய்கின்றன.

விஞ்ஞான அணுகுமுறையுடனும் மிகுந்த கவனத்துடனும் ஆதிச்சநல்லூரில் செய்யப்பட்டுள்ள அகழாய்வில் 600 சதுர கி.மீ. பரப்பில் மட்டும் 160க்கும் மேலான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் எலும்புக்கூடுகள், உடையாத நல்ல முறையில் உள்ள மட்பாண்டங்கள், பலவகையான கிண்ணங்கள், உருண்டை வடிவான பானைகள், குடுவைகள், உருளை வடிவப் பாத்திரங்கள், பெரிய ஜாடிகள், மிகுதியான அளவில் மாவரைக்கும் கல், கழுத்தணிகள், கடகம், காப்புகள், வளையல்கள், மோதிரம், மகுடங்கள் போன்றவையும் கிடைத்துள்ளன. "இங்கு கிடைக்கும் தடையங்களை முன் வைத்து நம் முன்னோர்களின் கலாசாரத்தையும் சமூக பொருளாதார கட்டமைப்பையும் அறிந்துகொள்ள வாய்ப்புகள் கிடைக்கும்" என்கிறார் இந்த அகழாய்வை மேற்கொண்ட தொல்லியல் துறை கண்காணிப்பாளர் சத்தியமூர்த்தி.

"ஆதிச்சநல்லூர் குறித்த ஆய்வுகள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே தொடங்கப்பட்டாலும் அவை சீராக முன்னெடுக்கப்படவில்லை என்பதும், ஆதிச்சநல்லூர் திட்டமிட்டே மறைக்கப்பட்டது என்பதும் உண்மை. வரலாறு எப்போதுமே சமகால வரலாற்று எழுத்தின் தேவைக்கு ஏற்பத்தான் ஆய்வு செய்யப்படுகிறது. டாக்டர் சத்தியமூர்த்திதான் ஆதிச்சநல்லூரில் மேலும் விரிவான ஆய்வுகளைத் தொடங்கி இன்றைய கவனம் அதன் மீது உருவாக வழிவகுத்தவர்" என்கிறார், சமீபத்தில் ஆதிச்சநல்லூர் சென்று திரும்பிய எழுத்தாளர் ஜெயமோகன்.

உலகில் மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டு தொடரும் மனித வரலாற்றை அறிவதற்கு, உலகம் முழுக்க அறிஞர்கள் பெரிதும் தொல்லியல் துறையைத் தான் சார்ந்திருக்கிறார்கள். இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள மனித வரலாறு, மனிதன் தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் இருந்துதான் தொடங்குகிறது. மனிதன் தோன்றியது முதல், இலக்கியங்கள் படைக்கப்பட்டது வரையிலான இடைப்பட்ட கால கட்டத்தில் அவனது நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள, அவன் விட்டுச் சென்றுள்ள தொல்பொருள்கள் தான் இன்று நமக்கு முக்கிய ஆவணங்கள். அத்தகைய தொல்பொருட்கள் உலகின் பல்வேறு இடங்களில் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிதான் அகழாய்வு.

"தமிழ்நாடு, வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் பிறப்பிடம் என்பதும் தமிழகம் தொன்மையான நாகரிகத்தினை உடைய ஒரு பிரதேசம் என்பதும் பல்வேறு வகைப்பட்ட ஆய்வுகள் மூலம் ஏற்கெனவே நிரூபணமாகியுள்ளது. என்றாலும், இப்போது ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள தடயங்கள் கிட்டத்தட்ட கி.மு. 1000 வரைக்கும் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம். அதாவது 3000 வருடங்களுக்கு முந்தையவை. இது தமிழர்களின் மிகவும் முற்கால நாகரிகம் என்பதுடன் மனிதன் வாழ்ந்த உலகின் தொன்மையான இடங்களில் தமிழகமும் ஒன்று என்பதை உலகத்துக்குச் சொல்ல மீண்டும் நமக்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதுதான் இப்போது ஆதிச்சநல்லூர் அகழாய்வை முக்கியத்துவம் உடைய தாக்குகிறது" என்கிறார் சத்தியமூர்த்தி. "ஆதிச்சநல்லூர் கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு ஆர்வமூட்டும் கதை. பதினேழாம் நூற்றாண்டு இஸ்லாமியப் படையெடுப்புகளின் போது நகைகளையும் காசுகளையும் புதைத்து வைக்கும் வழக்கம் உருவானது. பின்னர், பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் புதையல் எடுப்பது ஒரு மனநோய் அளவுக்கு தமிழ்ச் சமூகத்தை பீடித்தது. இவ்வாறு கண்ட இடங்களில் தோண்டிக் கொண்டிருந்த காலத்தில் மேய்ச்சல் மக்கள் இந்தக் குன்றில் இருந்து சில தங்க நகைத் துண்டுகளை தோண்டி எடுத்தனர். பின்னர், இங்கே தேடுதல்வேட்டை ஆவேசமாக நடந்தது. புதையல்களை பறிமுதல் செய்வதில் ஜரூராக இருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்துக்கு இது சென்றது. அவர்களிடமிருந்து புதைபொருள் ஆய்வாளர்கள் களத்துக்கு வந்தார்கள். 1876இல் பிரிட்டிஷ் ஆய்வாளரான அலக்ஸாண்டர் ரெயா இங்கே விரிவான தொல்லியலாய்வுகளை நடத்தினார். தென்னிந்தியாவில் இத்தனை பிரம்மாண்டமான தொல்பொருட்குவியல் எங்குமே கிடைத்தது இல்லை" என்கிறார் எழுத்தாளர் ஜெயமோகன்.

ஆனால், "முதலில் ஜெர்மானியர்கள்தான் ஆதிச்சநல்லூரில் வந்து ஆய்வுகள் செய்திருக்கிறார்கள். இனங்களின் வேர்களைக் கண்டறிவதுதான் அவர்களின் அக்கறை. அவர்கள் 25 - 30 எலும்புக் கூடுகளை எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால், அறிக்கை எதுவும் தரவில்லை. எனவே, அவர்களது ஆய்வு முடிவுகள் என்ன என்பது நமக்குத் தெரியாமலே போய்விட்டது. அப்புறம், ஆங்கிலேயர்கள் இந்தியப் பண்பாட்டின் தொன்மையை அறிவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். எனவே, இந்தியா முழுவதும் அவர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக தொன்மை எச்சங்கள் பல்வேறு நிலைகளில் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக, தமிழகத்தின் சென்னை பல்லாவரத்தில் 1863ஆம் ஆண்டு நிலப்பொதியியல் அலுவலரான இராபர்ட் புரூஸ் புட் என்னும் அறிஞர் பழங்கற்கால கோடரி ஒன்றைக் கண்டு பிடித்தார். மேலும், அத்திரம்பாக்கத்தில் உடைந்த புதை வடிவ மனிதக் கால் எலும்பு ஒன்றையும் கண்டுபிடித்தார். இராபர்ட் புரூஸ்தான்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


## தென்றல் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

### சிறந்த மூன்று கதைகளுக்குக் கீழ்கண்டவாறு பரிசுகள் உண்டு.

• முதல் பரிசு: $250 • இரண்டாம் பரிசு: $150 • மூன்றாம் பரிசு: $100

நகைச்சுவை, சமூகம், அலுவலகம், அறிவியல் என்று அதைப் பற்றியும் சிறுகதைகள் அமையலாம். சிந்தக்க அல்லது சிரிக்க வைக்கலாம். நல்ல தமிழில் விறுவிறுப்பாக எழுதப்பட வேண்டும். நட்பு, மனிதநேயம், கருணை, உழைப்பு, தியாகம், கொல்லாமை போன்ற உயர் பண்புகளைச் சித்தரிப்பவையாக இருக்க வேண்டும்.

படைப்புகள் எங்களிடம் வந்து சேரக் கடைசி நாள்: 30 செப்டம்பர் 2011

டிசெம்பர் 2011 தென்றல் இதழில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

முழுமையான தகவல்களுக்கு பார்க்க வேண்டிய சுட்டி:
http://tamilonline.com/thendral/announcement.aspx

தென்றல் ஆசிரியர் குழு

# உலக முடிவு 2012இல்?

## கடந்த இதழ் தொடர்ச்சி...

மேல் உலகங்கள் ஏழு, கீழ் உலகங்கள் ஏழு என்று எல்லாமாக பதினான்கு உலகத்தொகுதிகள் எமது பூலோகத்துக்கு அயல் உலகங்களாக உள்ளன. இவற்றையே 'புவனம் பதினான்கையும் பூத்தவளே' என்று அபிராமி அந்தாதியும் 'நின் கிங்கிணி ஓசை பதினான்குலகமும் கேட்டதுவே' என்று கந்தரலங்காரமும் கூறுகின்றன. இந்தப் பதினான்கு உலகத் தொகுதிகளையே. இவற்றுள் எமது அண்டவியல் விஞ்ஞான அண்டத்தொகுதி யாகும். இதன் படங்களைப் பார்த்தால் ஒரு பாய்ச்சுருள் போல் இருக்கும். இதையே பாய்ச்சுருளான அண்டத்தொகுதி என்று பாகவத புராணம் கூறுகின்றது.

இந்தப் பதினான்கு உலகங்களுக்கும் அப்பால் இன்னமும் பல அண்டத் தொகுதிகள் உள்ளன. இவற்றில் ஆறு பேரண்டங்களை உள்ளடக்கிய அண்டத் தொகுதியைப் பிரமாண்டம் என்று கூறுவர். மானுட சிந்தனைக்கும் கற்பனைக்கும் எட்டக்கூடிய அதிகூடிய அண்டப்பரிமாணம் இதுதான்.

இந்த ஆறு அண்டத்தொகுதிகளுக்கும் அப்பாலும் எட்டு திக்குகளிலும், மற்றும் மேல் கீழாகவும் திசை ஒவ்வொன்றுக்கும் பத்து பத்தாகவும் நூறு அண்டத்தொகுதிகள் உள்ளன. இவை எல்லாவற்றுக்கும் உச்சியில் பத்திரகாளி புவனமும், வீரபத்திரபுவனமும் உள்ளன. ஆக மொத்தமாக நூற்றெட்டு புவனங்கள்




ஒன்றாக நிவிருத்தி கலாபுவனங்களாக உள்ளன. நாம் நூற்றெட்டு நாமங்கள் சொல்லி வழிபடுவது எமது அயல் புவனங்களான இந்த நூற்றெட்டு புவனங்களுக்கும் அப்பாலும் பிரதிட்டாகலை புவனங்கள் என்று ஐம்பத்தாறு அண்டத் தொகுதிகள் உள்ளன.

முன்னர் சொன்ன நூற்றெட்டு புவனங்களுடன் இந்த ஐம்பத்தாறு புவனங்களுமாக உள்ள நூற்று அறுபத்து நான்கு புவனங்களும், அவற்றைப் படைத்துக் காத்து அழிக்கும் திரிமூர்த்தி களாகிய பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்களும் பல்லாயிரம் கோடி வருடங்களினூடாக இவற்றுக்கு அப்பாற்பட்டுள்ள வித்தியா தத்துவ புவனங்களில் வதியும் ஸ்ரீகண்ட ருத்திரரிடம் ஒடுங்குவது அவாந்தரப் பிரளயம் ஆகும். இங்கு கூறப்படுகின்ற பிரம்ம, விஷ்ணு, உருத்திரர்கள் இவ்வுலகங்களில் உள்ள மற்றைய உயிர்களைப்போல முக்குண தோஷங்களுக் குட்பட்டவர்களே. இவர்களை குணிப் பிரம்மா, குணி விஷ்ணு, குணி உருத்திரன் என்று சைவம் கூறுகின்றது. இவர்கள் பிறப்பு இறப்புகளுக்கு அப்பாற்பட்ட இறையின் பரபிரம்மா, மகாவிஷ்ணு, பரசிவன் ஆகிய தோற்றங்களில் இருந்து வேறுபட்டு நிற்பவர்கள். எப்பொழுதும் பர மற்றும் மகா என்னும் சிறப்புப் பதங்கள் ஒப்புயர்வற்ற ஒன்றேயான பிறப்பு இறப்பு அற்ற ஒரே இறையைக் குறிக்கும் பதங்களாம்.

குருவடி பணிந்து
**மருத்துவ கலாநிதி**
**இ. லம்போதரன்**
www.knowingourroots.com

**4. மத்திம பிரளயம்** - ஸ்ரீகண்ட ருத்திரரும் அவர் உள்ளிட்ட ஏனைய உயிர்களும் வதியும் குணதத்துவ புவனம் உள்ளிட்ட இருபத்தேழு வித்தியா கலை புவனங்களும் பல்லாயிரக்கணக்கான கோடி வருடங்களினூடாக சுத்த வித்தியா தத்துவ புவனங்களில் வதியும் அனந்தேசுவரர்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்



ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்


இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா,
லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை
நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி,
உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம்,
திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை,
வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள்,
எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம்,
பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம்
அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004
5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )
Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# பழங்களின் பலாபலன்கள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### நெல்லிக்கனி



நாம் சுகவாழ்வு வாழ்வதற்கு இன்றியமையாத பழவகையில் நெல்லிக்கனியும் ஒன்றாகும். இதில் இருவகை உண்டு. இங்கு பெறக்கூடியதும் பயன் தரக்கூடியது தோப்பு நெல்லிக்காய் ஆகும். அடுத்து அருள் நெல்லிக்காய் ஆகும். இது இங்கு கிடைப்பது அரிது. சுவையிலும் கடும்புளிப்புடையது. ஆனால் தோப்புநெல்லிக்காய் அப்படியல்ல. சுவையில் துவர்ப்பு, கசப்புடன் கூடிய இனிப்புச் சுவையை உடையது. எவரும் விரும்பி உண்ணக்கூடியது. உடல் பிணி சிலவற்றை தணிக்கக்கூடியது. குளிர்ச்சியை உண்டாக்கவல்லது. சிறுநீரை இலகுவில் பெருக்கக் கூடியது. இதில் மருத்துவக்குணம் பல உண்டு. சித்த வைத்தியர்கள் சூரணம், லேகியம் தயாரிக்கும்போது இக்கனியை பாவிப்பதுண்டு. உ+ம் திரபலா சூரணம், லேகியம் ஆகும். திரபலா என்பது மூன்று பொருட்கள் அடங்கும். (நெல்லி, கடுக்காய், தான்றிக்காய்) கணை (ஒரு வகை சூட்டுத்தன்மை) வியாதி சில சமயம் சிறுவர்களுக்கு ஏற்படுவதுண்டு. இந்நிலையில் இக்கனிரசம் சாலச்சிறந்தது. குடல் பகுதியில் ஏற்படும் அமிலத்தன்மையை படிவடையச் செய்யும் திறன் உள்ளது. இக்கனியில் இரும்பு, பொஸ்பரஸ் கல்சியம், உப்புவகை, புரதம், ஓரளவு கொழுப்பு போன்றவற்றை உள் அடக்கியுள்ளது. இவை அனைத்தும் காணப்பட்டாலும் உயிர்ச்சத்தில் "C" தரம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைப் பொதுவாக உடல் ஆரோக்கிய 'சிரஞ்சீவி' எனக்கூறலாம்.

கண் எரிவு, தேக உஸ்ணநிலை, கணை, வயிற்று எரிவு போன்றவற்றைத் தணிக்க வைக்கும் திறம்படைத்தது. இக்கனியை சாப்பாட்டிற்குப் பின் தவறாது ஓரளவு எடுத்துப் பாவித்து வந்தால் முதுமை அடைந்தாலும் இளமைத்தோற்றத்தையும், அழகையும் கொடுக்கும். மது பாவிப்பவர்கள் இக்கனியை எடுத்துவந்தால் மதுவை வெறுக்கும் தன்மையை ஏற்படுத்தவல்லது. உமிழ்நீரை சொரிந்தவண்ணம் இருக்க வழிவகுக்கும். இதில் தயாரிக்கப்படும் தைலம் குளிர்ச்சியை உண்டாக்கக்கூடியது. கண் எரிவு, தலையில் வரட்சித்தன்மை, தேகவெப்பு யாவற்றையும் நீக்கும் தன்மையுடையது. நெல்லிக்காயின் விதையும் சில வியாதிகளை குணப்படுத்தும். இதனை உலர்த்தி தூள் (பவுடர்) ஆக்கிவைத்து தேவைப்படும் போது பாவிக்க முடியும். இத்தூள் (பவுடர்) நீரிழிவு ரோகத்திற்கு உத்தமமாகும். காலை, மாலை இருவேளை ஒரு தே.கரண்டி எடுத்து நீருடன் உட்கொள்ள வேண்டும். இது இனிப்புத்தன்மையை கட்டுப்படுத்தும். இந்நோய் அற்றவர்களும் பாவித்து வந்தால் இப்பிணிவராது. காப்பாற்ற முடியும். இச்சாற்றைப்பாவித்து வந்தால் குடல்புண் அற்றுப்போகும்.

தலைமயிர் நரை நீங்குவதற்கு விதை நீக்கிய நெல்லிக்காயை எடுத்து தேசிப்புளிமரத்தின் இலையையும் சேர்த்து நன்கு பசையாக அரைத்து தலையில் இட்டு சிலநிமிடங்களின் பின் முழுகி நீராடிவரக் குணம் கிடைக்கும். வயிற்றுப் பூச்சி, புழு இருந்தால், நெல்லிரசத்துடன் எலும்மிச்சங்காய் சாற்றினை கலந்து அருந்தி வந்தால் மலம்கழிக்கும் போது யாவும் வெளியேறிவிடும். நெல்லிகாய் ரசத்துடன் + தேன் கூட்டிப்பாவித்தால் கண்ரோகம் குணமடையும். பல் ஈறுகளில் வீக்கம், நோ காணப்படின் காயை எடுத்து நன்கு நசித்து அப்பகுதியில் நாளாந்தம் தேய்த்துவர குணம் கிடைக்கும்.

இரத்த அழுத்தம் உள்ளோர் இக்கனி கொண்டு தயாரித்த லேகியத்தை முறைப்படி பாவித்து வந்தால் யாவும் நீங்கி விடும். நெல்லிரசம் மிக நன்மை பயக்கும் திரவமாகும். தோலகட்டி நெல்லிரசம் நம்நாட்டில் பிரபல்யமாக விற்பனையாவதை நாம் நன்கு அறிவோம்.

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909



## ஆறாம் ஆண்டு நினைவு தினம்

### திருமதி சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்




உடன் பிறப்பே நீ பிரிந்து
ஆண்டுகள் ஆறாயினும் - இன்னும்
ஆறவில்லை எந் துயரம்
உறவுகள் உற்றோர்க் கெல்லாம்
விருந்துகள் விருப்புடன் செய்து
அரும்பெரும் ஆலோசனைகள்
அன்புடன் கூறி என்றும்
பண்புடன் நடந்தே நாளும்
கண்ணிய வாழ்வு வாழ்ந்தாய்
மின்னாமல் முழங்காமல்
சொல்லாமல் கொள்ளாமல்
எமைவிட்டு நீ பிரிந்த - உன்
சோகமென்னும் போகவில்லை
உன்னருமைக் கணவருடன்
உடன் பிறப்பு நாமெல்லாம்
உனை நினைத்து வாடுகிறோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

*- கணவரும் உடன்பிறப்புக்களும்.*

## தழும்புகள் வந்தாலும் உறவுகளைப் போற்றுவோம்

கண்டதும் மலர்ந்து சிரித்துப்பேசும் உறவுகள்
விண்ணில் பறக்கும் எண்ணங்களில் ஆடினாலும்
நேரில் கண்டு பேசி மகிழ்வுடன் உண்டுகளித்து
பாரில் காணா விருந்து எனப்போற்றிபிரியாவிடை பெறும்
உறவுகளில் இன்பம் உண்டாம்



அழகும் இளமையும், மனிததரமும்போற்றி
பழகும் பாங்கில் அளவோடு பேசி
சுயமரியாதைகாத்து ஒட்டியும் ஒட்டாமலும்
இயலும் வரை ஒட்டிஉறவாடிப்பழகும் சீரான
உறவுகளில் இன்பம் உண்டாம்

பறக்கும் உறவுகள் பரபரத்துப்பரபரத்து
கனடாவின் காலநிலைகளாக சீரற்று
கனக்கும்மனதுடனும் பாராமுகத்துடனும்
இடையிடையே பழகினாலும்

ஆபத்துவேளைகளில் உதவிடும்
அழகிய உறவுகளில் இன்பம் உண்டாம்

காலங்கள் ஓட ஓட எண்ணங்கள் புதிதுபுதிதாக
பாலங்களாக அமையும் உறவுகளின் விழுமியங்களை
அனுபவித்து உணரும் பக்குவம் வாய்ந்த
பனுவல்கள் போற்றிடும் உண்மை உறவுகள்
மனதில் காய்தல் உவத்தலின்றி உறவாடும்
கனதி இல்லா உறவுகளில் என்றும் உண்டாம் இன்பம்.

**- ரஞ்சி கதிர் -**
ranji24.kathir@gmail.com

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3
பகுதி 23

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

இன்பனையும் நாகராசனையும் ஆழமாகப் பார்த்தபடியே,

'மிஸ்டர் இனியன், அது அவ்வளவு சுலபமானதல்ல, இவ்விடயம் பற்றிய சில விபரங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டும். அவ்விபரங்களின் படியேதான் அடுத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பது எங்களுக்கான கட்டளை. இது எமது நாடு சம்பந்தான விடயமல்ல, முழு உலகிற்குமான விடயம் என்பதால் தயவு செய்து எங்களுடன் ஒத்துழையுங்கள்.' என்றவர், 'விபரங்களை வில்லியம் சான் உங்களுக்குக் கூறுவார்' என்றவர், ஓரடி பின்னாக நகா,

வில்லியம் சான் ஓரடி முன்னால் வந்தார்.

**◊ சி.வி. நாதன் ◊**

'மிஸ்டர் இனியன், எங்களுக்குக்குக் கிடைத்த நம்பிக்கையான தகவல்களின்படி, உங்கள் வீட்டிற்கு இரண்டு 'வேற்றுக் கிரக மனிதர்கள்' வந்திருக்கின்றார்கள் என்று சந்தேகப்படுகின்றோம். அதனால் உங்களது வீட்டைத் தனிமைப்படுத்தி, வீட்டில் உள்ள பொருட்களிலும், வீட்டில் நின்ற அத்தனை ஆட்களிலும் புதிய அந்நியக் கிருமிகள் தொற்றிக் கொண்டனவா என்று பரிசோதிக்க வேண்டியுள்ளது. இது மிகவும் அவசியமான செயற்பாடு என்பதால் எங்களது முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். இந்த நடவடிக்கையானது உங்களை அசௌகரியப்படுத்தும் என்பதை அறிவோம். அதற்காக தயை கூருங்கள்' என்றார் அமைதியான, ஆனால் அதிகாரத் தொனியில்.

திரும்பி இன்பனையும் நாகராசனையும் பார்த்தார்கள். 'ம், சரியாக மனிதர்கள் போலவே இருக்கின்றார்கள். ஒருவேளை எங்களைப் போல் உருமாறக் கூடிய வல்லமை கொண்டவர்களாக இருப்பார்களோ' வில்லியம் சான் தனக்குள் கூறிக் கொண்டார்.

அடுத்து, வெண்அங்கிக்காரர்கள், இனியனிடமும் நாகராசனிடமும் வந்தார்கள். வெண்ணிறக் கோலின் கரியமுனை அவர்களின் மேல் ஓடவிடப்பட, சிவப்பு ஒளி பச்சையாக மாறிப் பீப், பீப் என்ற ஒலிவர, மொனிட்டரில் பச்சைக் கோடுகளின் மேலாக சிவப்பு மஞ்சள் புள்ளிகள் ஓடின.

இனியனும் நாகராசனும் பொலித்தீன் பை போன்ற ஒன்றினால் கிட்டத்தட்ட முற்றாகவே மூடப்பட்டார்கள். சுவாசிப்பதற்கான வசதிகள் அதில் இருந்தன. இருவரும் முரண்டுபிடியாமல் பேசாமல் நின்றார்கள். ஆனால் அடிக்கடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, அவர்களின் கண்கள் பேசிக் கொண்டன.

அதே நேரம் இன்னொரு பெரிய பொலித்தீன் குழாய் போன்ற ஒன்றினைக் கொண்டுவந்து இனியனின் முன்னால் அதன் வாயினைப் பிடிக்க, அக்குழாய் இனியனை இழுத்துக் கொண்டது. அக்குழாயின் ஊடே இனியன் இழுபட்டுக் கொண்டு, வீட்டுக்கு வெளியே நின்ற வாகனம் ஒன்றினுள் போவது, கண்ணாடித் தன்மையான அக்குழாயின் ஊடாகத் தெரிந்தது. அவ்விதமே நாகராசனும், வீட்டில் இருந்த அத்தனை பேரும் வாகனத்துள் சேர்க்கப்பட, கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களில் வாகனம் புறப்பட்டு விட்டது.

வீட்டின் அத்தனை பொருட்களும் பொலித்தீன்களினால் மூடப்பட்டு, முத்திரையிடப்பட்டன. வீடும் பூட்டப்பட்டு, சுற்றிவர மஞ்சள் பேப்பரினால் கட்டப்பட்டது. நான்கு பக்கமும் 'தடுக்கபட்ட பிரதேசம்', 'உத்தரவின்றி உட் செல்வது தண்டனைக் குரிய குற்றம்' என்ற வாசகங்கள் பெரியதாக எழுதி வைக்கப்பட்டன. அரை மணித்தியாலங்களுக்குள் அவசர அசவரமாக ஆனால் முழுமையாக நடைபெற்று முடிந்துவிட்டது.

எல்லாம் முடிந்து அப்பிரதேசமே வெறுமையாகக் கிடந்தபோது, எங்கிருந்தோ இரு ஊடகவியலாளர்களின் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவ்விடத்திற்குப் படு வேகமாக வந்தன, சூனியப் பிரதேசத்தைப் பார்பதற்கு வந்தவை போல்.

- இன்னமும் வரும்...

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**

**www.vlambaram.com**



# நுகர்வோர் உளவியல் *(Consumer Psychology)*

மனித நடத்தைகள் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய விஞ்ஞானமாக விளங்கும் உளவியல் இன்று சகல துறைகளிலும் ஆழவேரூன்றியுள்ளது. நாம் செய்யும் அனைத்தும் உளவியல் சார்ந்தவை. நாம் சிந்திக்கும் அனைத்துமே உளவியல் சார்ந்தவை. எமது பிரச்சினைகள் கூட உளவியல் அன்றி எழுவதில்லை. இது பற்றியெல்லாம் மிக ஆழமாக சிந்திப்பவர் களே உளவியலாளர்கள். ஆக்கபூர்வமான சிந்தனைக்கு உளவியலைப் பயன்படுத்தும் முறையே இன்றுள்ளது. உளவியல் தொடர்பானது கல்வி, அபிவிருத்தி, மருத்துவம், உளவளம், இராணுவத்துறை, பொறியியல், வரலாறு, சமூகம், மனோவசியம், நரம்பியல் போன்ற 47 வகையான துறைகளில் இணைவுற்றுள்ளது. இதனை அமெரிக்க உளவியல் சங்கம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது. இதில் ஒரு துறையே நுகர்வோர் உளவியல். (Convenience Psychology) என்பதாகும். விஞ்ஞானரீதியான பிரச்சினைகள், கோட்பாடு, ஆராய்வு, தரவுகள், முடிவுகள், வெளியீடுகள் என்றவாறாக இதன் பயன்பாடு மிகவும் முழுமை பெற்றுள்ளது.

நுகர்வோர்களது மனோநிலையை உணர்ந்து சந்தைப்படுத்துவதில் பல தொழில் நிறுவனங்கள் முயன்று வருகின்றன. நுகர்வோர் என்று கூறும்போது அவர்கள் பொருட்களை வாங்கச் செல்வார்கள். இந்த நுகர்வோர்களை விளம்பரங்கள் மிகவும் கவர்பவை. அத்துடன் பொருட்கள் அடைக்கப்பட்டுள்ள விதமும் அவர்களை கவருகின்றன. பொதுவாக பல்வேறு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு அழகுப்பெண்கள், (Model) விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். எந்தப் பொருட்களையும் விற்பனை செய்வதற்கு முதல் இவர்களையே நிறுவனங்கள் தெரிவு செய்கின்றன. ஒரு அழகுப் பெண்ணின் கைகளில் உள்ள பொருட்களையோ அல்லது பெண்களையோ நுகர்வோர் ரசிக்கின்றனர் என்பதில் கூட ஆய்வுகள் உள்ளன. இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற லக்ஸ், றெக்சோனா சோப்புக்களையும், சிக்னல் போன்ற பற்பசை பொருட்களையும், மற்றும் உணவு உற்பத்திப் பொருட்களையும் சிந்திப்போமா யின் பிரசித்தி பெற்ற நடிகைகள் பயன்படுத்தப்படுகின்றனர். வசன அமைப்புக்களை சற்று கூர்ந்து கவனியுங்கள். என் “பட்டுப்போன்ற மேனியின் பிரகாசத்திற்கு முக்கிய காரணம் லக்ஸ் சோப் தான்” இது போன்ற தெரிந்தெடுத்த கவர்ச்சியான வசனங்கள் இருக்கும். இதனைப் பார்க்கும் நுகர்வோர் கற்பனையில் மிதப்பர். தங்களை இந்த அழகுராணிகளுடன் ஒப்பிட்டு நோக்குவர். இப்படி நூற்றுக்கணக்கான பொருட்கள் ஒருவித உளவியல் மயக்கத்தால் தான் விற்பனை செய்யப்படுகின்றன. படங்கள் வசனங்கள் மிகவும் துல்லியமாக்கப்படு கின்றன. தற்போது கிரிக்கெட்வீரர்கள் முக்கிய படங்களில் காட்சி தருகின்றனர். இங்கு கோல்ப் விளையாட்டு ஐஸ்ஹொக்கி விளையாட்டு வீரர்கள் முக்கியம் பெறுவர். ஐரோப்பிய நாடுகளில் உதைபந்தாட்டவீரர்கள் முக்கியம் பெறுவர். உலகம் முழுவதும் நுகர்வோர்களே இவ் உளவியல் உணர்வுகளை நாடிபிடித்து பார்க்கும் முகவர் நிறுவனங்கள் பல உள. மாறிக்கொண்டிருக்கின்ற சமூக உணர்வுகள் என விளம்பரத்தில் காண முடிகின்றது. நவீன தொழில் நுட்பமும் மிக முக்கியமாக இணைந்துள்ளது.

உளவியலுக்கு ஏற்ப விளம்பரம் செய்யப்படுவது ஒரு கலைவடிவமாக இன்று மாறியுள்ளது. விளம்பரம் (Advertisement) என்பது ‘Advertero’ என்ற லத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது. மக்கள் கவனத்தினை திருப்புவது என்றே பொருள் கொள்ள முடிகின்றது. உலகில் 30 கோடி பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் Readers Digest போன்ற சஞ்சிகைள் விளம்பர அமைப்பில் மிகுந்த செல்வாக்கு பெற்றவை. முதலில் ஆங்கிலமொழி சஞ்சிகைகளில் இது வெளிவந்தாலும் இன்று உலகின் அதிகமான மொழிகளில் அழகு வடிவங்களாக வெளிவருகின்றனவாகவும், விற்பனை செய்வதற்கு விளம்பரம் தவிர வேறு வழியில்லை என்பதால் வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி, வலையாக்கம் போன்றவை பயன்படுகின்றன. அனைத்திலும் பத்திரிகை மிகுந்த செல்வாக்கு கொண்டுள்ளது.

1977 இல் Schrank என்பவர் ‘மக்களின் தேவைகளை பிரதிபலிப்பனவே விளம்பரங்கள்’ என்று விளக்கம் அளித்தார். அது எமக்கு நம்பிக்கை தருகிறது. அதன் செய்திகளை நாம் அவதானிக்கிறோம் என்று நுகர்வோர் சிந்தித்து வருகின்றனர். பொதுவாக Best, Flavour, Glamour, Fantastic போன்ற தெரிந்தெடுத்த ஆங்கில வார்த்தைகளை பயன்படுத்தி விளம்பரங்கள் கவர்கின்றன. உலகில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதில் பாவிக்கப்படும் சொல்லாட்சிகளை தெரிவு செய்வதற்கே ஆய்வுகள் உள்ளன. போட்டிகள் நடத்தப்படுகின்றன. பெருமளவு செலவில் விளம்பரங்களை தயாரிக்க நிறுவனங்கள் உள்ளன. இவர்கள் பின்னணி அமைப்பு, வசன அமைப்பு, உருவ அமைப்பு என்பவற்றில் மிகுந்த கவனம் செலுத்துவர். பல மில்லியன்கள் டொலர்களை வருமானம் பெறும் நிறுவனங்கள் சில மில்லியன் டொலர்களையாவது விளம்பரத்தில் செலவிடுகின்றன. முக்கிய இடங்களில் போஸ்டர், பனர் (Banner) பிறேம் (Frame) மூலம் நிரந்தரமாக முக்கிய சந்திகளில் பல விளம்பரங்களை காண முடியும். பார்வை மட்டத்தில் இவை கவருகின்றன. இவ்வாறு எல்லாமே நுகர்வோர் உளவியலை பயன்படுத்தியே உருவாகின்றன.

இதுவே மிகவும் சிறந்தது. இதுபோல் வேறு எதுவும் இல்லை. ‘வாழ்நாள் முழுவதும் உதவுவது’ போன்ற பல உறுதிமொழிகளை அளிக்கும் இவ்விளம்பரங்கள் பற்றி 1984 இல் Hoyston and Childers ஆகியோர் ஆய்வு செய்தனர். இவர்களது கருத்துப்படி குறைந்த சொற்களில் நிறைந்த கருத்து களையும் படங்களையுமே நுகர்வோர் விரும்புவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. கார் உற்பத்தி, சிகரட் உற்பத்தி சப்பாத்து வகைகள் அனைத்தும் முழுஅளவில் படங்களை கொண்டிருப்பவை. காரணம் நுகர்வோர் சொற்களை விட பொருட்களை பாவித்தே ஆசை கொள்வர். பொதுவாக நுகர்வோர் பொருட்களை வாங்கும்போது என்ன காரணிகளை வைத்து தெரிவு செய்கின்றனர் என்னும் ஆய்வு செய்யப் பட்டது. சமூக கலாசார அடிப்படையில் வேறுபாடுகள் இருந்தாலும் முழுஅளவிலான உளவியல் செயல்பாடு ஒருவிதமாகவே உள்ளது. 1967இல் இதுபற்றி Steiner என்ற அறிஞர் ஆய்வு செய்துள்ளார். பொதுவாக இன்று ‘sale’ Off போன்ற எழுத்துக்களே முக்கியம் பெறுகின்றன. “ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்” (Buy one get one free) .இன்றுள்ள முக்கிய சொல்லாட்சி. எப்படி எனினும் நுகர்வோர் அறிவுள்ள, உளக் கிளர்ச்சியுள்ள, ஊக்கம் நிறைந்தவர்கள். இவர்களை முற்றுமுழுதாக ஏமாற்ற முடிவ தில்லை. எனினும் இதில் போட்டி போட்டுக் கொண்டு பல நிறுவனங்கள் புதிது புதிதாக கண்டுபிடிக்கின்றன.

பொதுவாக 6 நிலைகளில் நுகர்வோர் செயல்படுகின்றனர். முதலில் குறிப்பிட்ட




பொருள் சந்தையில் உள்ளதா என்பதனை அறிதல் (Awareness) அடுத்து குறிப்பிட்ட பொருள்பற்றிய தகவல் (Knowledge) குறிப்பிட்ட பொருளில் உள்ள விரும்பு (Liking) குறிப்பிட்ட பொருளை தெரிவு செய்தல் (Prefer) குறிப்பிட்ட பொருளில் உள்ள நம்பிக்கை (Conviction), பொருளை வாங்குதல் (Purchase), எப்பொருட்களை வாங்குவதாயினும் முதலில் குறிப்பிட்ட கழிவு விற்பனை காலம் மிகவும் முக்கியமானது. இதனையே பல நிறுவனங்கள் செய்கின்றன. இதனால் Bankruptcy sale, moving sale, madness slae, midnight sale, manager’s sale, closing sale என்றெல்லாம் பல உத்தி முறைகளை பயன்படுத்துகின்றனர். அனைத்தும் நுகர்வோர் உளவியலை படம்பிடித்துக் கொண்டே செய்கின்றனர். அதி நுட்பமான முறையில் இதுபற்றி ஆய்வு செய்து பல நிறுவனங்கள் பொருள் சம்பாதிக்கின்றன.

இன்று Catalogue எனப்படும் விளம்பர தகவல்களை தயாரித்து முன்னரேயே வீடுகளுக்கு அனுப்புகின்றனர். இதில் பொருட்கள், விலைகள் மிகவும் தெளிவாக இருக்கும். முன்னைய விலை தற்போதைய விலை மிகவும் முக்கியம். முன்னைய விலை வெட்டப்பட்டிருக்கும் பொருட்களின் உற்பத்திவிலைகளை எவரும் தெரிந்து கொள்ளமாட்டார்கள். விலைகளை ஒப்பீடு செய்து மட்டும் திருப்தி கொள்வர். இந்தவகையில் விலைகள் யாவும் தெரிவு செய்யப்படுகின்றன. பொதுவாக விலைகள் மனதினை கவர்பவை. உதாரணமாக ஒரு பொருள் $4.99 என்று இருக்குமேயொழிய 5.00 டொலர் என இருக்காது. காரணம் எம்மை உளவியல் திருப்திக்கே இவை கொண்டு செல்வன.

எமது மத்தியில் விளம்பரங்கள் மிகவும் உன்னத நிலையடைந்துள்ளன. பல கையேடுகளும், பத்திரிகைகளும், சஞ்சிகை களும் மிகவும் உயர்ந்த பணியை செய்கின்றன. எனினும், கனடிய நிறுனங்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. உயர்ந்த பெறுமதியுடையவை. அவை பாரிய அளவில் படங்களை பயன்படுத்துகின்றன. ஒவ்வொரு படமும் கதை கூறுவன. (Each picture tells a story) என்பதுடன் ஒரு படம் ஆயிரம் சொற்களை விட பெறுமதியானது. ‘A Picture is worth a thousand words’ என்ற உண்மையை உணர்ந்துகின்றன.

நுகர்வோர் உளவியல் என்பதனை நோக்கும்போது கதைபேசும் சித்திரங்கள், கருத்தினை கவரும் கருவூலங்கள். சிந்திக்க தூண்டும் மூலகங்களாக விளம்பரங்கள் விளங்கி நுகர்வோரின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துகின்றன. விளம்பரமின்றி விற்பனை செய்ய முடியாத அளவுக்கு பொருட்கள் உற்பத்தியாகும் இச்சந்தர்ப் பத்தில் உளவியல் பற்றிய ஆராய்ச்சிகளும் கூடி வருகின்றது. சமூகத்தின் மாறுதல்களை கண்டுபிடிக்கும் உளவியலாளர்கள் இதில் பல உதவிகளை செய்கின்றனர். காலம், நேரம், தேவை என்பவற்றினை பாரிய நிறுவனங்கள் தெரிந்து கொண்டுள்ளன. இதற்கு ஏற்ப விளம்பரங்கள் உருவா கின்றன. நல்ல விலைகளில் விற்றுவிட்டதாக நிறுவனங்கள் என்ன விலையில் பொருட்களை வாங்கி விட்டதாக நுகர்வோர் திருப்தி கொள்கின்றனர். இந்த வகையில் இரண்டு பகுதியிலும் மகிழ்ச்சி ஏற்படுகிறது, ஏற்படவே செய்கிறது.



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

# அன்பு வாசகம்

மன்பதையில் வாய்த்த மனிதப் பிறவிநிதம்
அன்பறங்கள் செய்துய்ய வாம்.

இப்புவியின்கண்ணே எமக்குக் கிடைக்கப் பெற்ற இந்த மனிதப் பிறவியானது நாம் நாளாந்தம் அன்பை வளர்த்து அறங்களைச் செய்து இறைவனடி சேர்ந்து உய்வதற்கேயாம்.

அன்பொன்றே ஆணவத்தை ஆற்றி உயிருக்குத்
துன்பம் துடைக்கும் துணை.

உயிரோடு இயல்பாகவே இணைந்துள்ள மும்மலங்களுள் மிகவும் முனைப்புள்ள ஆணவ மலத்தை வழிப்படுத்தி, அதனால் உயிருக்கு வரக்கூடிய துன்பத்தைப் போக்கத் துணைசெய்வது அன்பு ஒன்றேயாம்.

அன்பே இருமைக்கும் ஆதாரம் ஆதலினால்
அன்பே பிறவிக் கனி.

இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டுமன்றி மறுபிறவிகளில் வரக்கூடிய வாழ்க்கைக்கும் ஆதாரமாக இருப்பது அன்பேயாகும். அதனால் அது உயிருக்கு அணியாக உள்ளது. (அணி - அழகு, அலங்காரம். இருமை - இம்மையும் மறுமையும். மறுமை தேவலோக வாழ்க்கையையும் குறிக்கும்.)

அன்பே சிவமென் றறைந்தார் திருமூலர்
முன்பே அதுவே மொழி.

அன்பே சிவமென்று திருமூலநாயனார் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பதாகவே அடித்துச் சொல்லியுள்ளார். அந்த மந்திரமே நாம் உணர்ந்து பின்பற்றத் தக்க உண்மையான மொழியாகும். (அறைதல் - அழுத்தி அல்லது உரக்கச் செல்லுதல்.)

தமிழுக்கும் அன்பு பொருளாவ தாலே
தமிழும் சிவமும் சமன்.

தமிழ் என்ற சொல்லுக்கும் அன்பு என்ற பொருள் உண்டு. அவ்வகையில் தமிழும் அன்பே சிவமாகிய சிவமும் ஒன்றேயாம்.

அன்பே வடிவான ஆதி முதலருளை
அன்பாற் பெறலாம் அறி.

அன்பே உருவாகிய ஆதிமுதல்வராகிய சிவபெருமானின் திருவருளை அவர்மீது அன்புசெலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிவீராக.

பெற்றே பெரும்பதவி பேசரிய வாசகனார்
உற்ற வரலா றுணர்.

அவ்விதம் அன்பினாலே சிவபெருமானின் திருவருளைப் பெற்றுச் சொல்லுதற்கு முடியாத பெருமைக்குரிய திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் முத்தி அடைந்தார். அவரது வரலாற்றைப் படித்து இவ்வுண்மையை உணர்வீராக. (பெரும் பதவி - முத்திப்பேறு.)

ஆன்றபே ரன்புக் கடைக்குந்தாழ் ஒன்றில்லைச்
சான்று திருவா சகம்.

சிறந்த பேரன்புப் பெருக்கைக் கட்டுப்படுத்தவல்ல கருவி எதுவும் கிடையாது என்று திருவள்ளுவநாயனார் கூறிய கூற்றுக்குச் சான்றாகத் திருவாசகம் விளங்குகின்றது. (அடைக்குந்தாழ் - தாழ்ப்பாள். சான்று - உதாரணம்.)

திருவா சகக்கடலில் மூழ்கித் திளைக்கின்
உருகுமாம் அன்பால் உளம்.

திருவாசகம் என்னும் கடலிலே மூழ்கி அதன் பொருளிலே ஊறிக் கலந்தவருக்கு அன்புப் பெருக்கத்தால் உள்ளம் உருகி நிற்கும்.

தொழச்செய்யும் தொல்வினைகள் தோற்றுவிழச் செய்யும்
அழச்செய்யும் வாசகத்தின் அன்பு.

திருவாசகத்தில் திளைப்பவர் உள்ளத்திலே பெருகித் துலங்கும் அன்பானது எல்லாம் வல்ல சிவபெருமானைத் தொழச் செய்யும். அவ்விதம் தொழுவதன் பயனாக அவர்களின் பழைய வினைகள் செயலற்று வீழ்ந்துபடும். அதனை உணர்ந்தவர் சிவபெருமானின் கருணையையும் திருவாசகத்தின் சிறப்பையும் நினைந்துருகி அழுவர்.



கவிஞர் வி. கந்தவனம்

---

## நூல் வெளியீடும் நிதி சேகரிப்பு நிகழ்வும்

### *"Lips no longer sealed"*

Lips no longer sealed, by Shayanika Suresh, is an attempt to give voices to the suppressed in the form of book with short stories and feature articles. The book release will take place as part of a fundraising event. This event will include a variety of performances as a means of raising awareness to the magnitude of violence and oppression and thus giving light to the book's message of peace.

காலம்: ஆகஸ்ட் 20ம் திகதி
நேரம்: மாலை 5:30 – 9:00 மணி
இடம்: ரொறன்ரோப் பல்கலைக்கழகம் -
இசுகாபரோ வளாகம் - அறை இல. SY 110

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனுக்காக 'போர்க் குழந்தைகள் கனடா' (War Child Canada) கனேடிய தொண்டர் நிறுவனத்திற்கான நிதிச்சேகரிப்பு. கலந்து சிறப்பித்து ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தொடர்புகட்கு : சயனிகா சுரேஸ்: 647 893 2258, சுரேஸ்: 416 732 8021

---




# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


---


# வெளிவந்துவிட்டது!



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**
*5215 Finch Ave. E, #201*


---

## நுணாவில்-கனேடியன் அபிவிருத்திச்சங்கம்

'கனடாவாழ் நுணாவில் மக்களின் கோடைகால ஒன்றுகூடல் எதிர்வரும் ஆவணி மாதம் **(August)** 21ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 7.00 மணி வரை நடைபெறவுள்ளது. அனைத்து நுணாவில் மக்களின் வருகையை அன்போடு எதிர்பார்க்கின்றோம்.'

**இடம்: *Thomson Memorial Park – Area B – Brimly/Lawrence***

மேலதிக தொடர்புகளுக்கு: கதிர்:- (416) 399-7250
அருள் :- (416) 709 2783 ராஜன்:- (647) 203-0363

---

# பொருளின் ஆதாரம்

பங்குச் சந்தையில் மேலும் ஒரு நெருக்கடி ஆகஸ்ட் 08, 2011 இல் ஏற்பட்டுள்ளது. உலக பொருளாதாரத்தின் நிலைமையே இதற்கு காரணமாகலாம். ஒரு நாட்டின் பொருளாதார நெருக்கடி உலகையே உலுக்கிற அளவிற்கு உலகம் சிறுத்துவிட்டது. எதிர்கால நிகழ்வுகள் இவ்வாறே இருக்கும் என்பது கண்கூடு.

**2010 இன் உலகில் பணக்காரநாடுகளின் வரிசை...**

| | |
|---|---|
| Luxumburg | Norway |
| Qatar | Switzerland |
| Denmark | Australia |
| UAE (United Arab Emirate) | Sweden |

மேலுள்ள தகவல் (IMF இன் 2010 ஆம் ஆண்டின் தரவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவையே). 2010 இல் கனடா 11வது நாடாக இருந்தது.

மார்ச் 31, 2011 வரையிலான காலகட்டத்தில்
(a) வன்கூவரில் 1 மில்லியனிற்கு மேலான விலையில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 22 ஆகும்.
(b) ரொறொன்ரோவில் 1.5 மில்லியன் பெறுமதிக்கு மேலான விலையில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 150 ஆகும்.

---


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# எந்தக்கணத்திலும் மனம் நாடுவது!
# எந்தப்பொழுதிலும் மனங்கள் விரும்புவது!






தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

Niru Niru
நிரு
பிராண்ட்

# குவாண்ரம் பிறந்த கதை

# நுண்ணுலகியல் 16

இதுவரையில் குவாண்ரம் பிறந்த கதையில் அணு பற்றிய கருத்து விஞ்ஞானிகளிடம் வந்தததைப் பார்த்தோம். ஆரம்ப காலத்தில் அணுவினை ஒரு முழுமையான திண்மக் கோளமாகவே விஞ்ஞானிகள் கருதினார்கள். தொடரும் பாதையில் ஒரு சிறு விலகல், தேவை கருதி, குவாண்ரத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அலைகள் பற்றிய எமது தெளிவுகளையும் வளப்படுத்த வேண்டியிருப்பதால் அவை பற்றியும் தெரிந்து கொள்வோம்.

அலைகளின் இயல்புகளும் மின்காந்த அலைகளின் வகைகளும்

அலைகள், மின்காந்தவலைகள் என்பன இப்போது எங்களுக்குப் பழக்கமானவை. பல விபரங்களைத் தெரிந்து கொண்டோம். குவாண்ரம் பிறந்த கதையில் இவை முக்கிய இடத்தினைப் பெற்றிருப்பதால் அவற்றினைத் தொகுத்துப் பார்ப்போம்.

அலைகள் பொதுவாக இரண்டு வகையினதாக இருக்கின்றன. ஒன்று குற்றலை அல்லது குறுக்கலை எனப்படுகின்றது. மற்றயது நெட்டலை அல்லது நீள்பக்க அலை எனப்படுகின்றது. இரண்டு வகையாக இருந்தாலும் அவற்றின் பொதுவான இயல்புகள் ஒன்றே. இரண்டுமே அதிர்வுகளினூடகத்தான் முன் செல்கின்றன.



அலை செல்லும் திசையின் வழியே அதிர்வுகள் நடந்தால் அது நீள்பக்க அலை எனப்படுகிறது. நாங்கள் கேட்கும் ஒலியானது இந்த மாதிரியாகத்தாக் காற்றின் ஊடாக எமது காதுகளை வந்தடைகின்றது. இங்கே வளியின் துணிக்கைகள் முன்னும் பின்னுமாக அதிர, ஒலிச் சக்தியானது வளியில் முன்னோக்கிச் செல்கிறது. வளி அதாவது காற்று இல்லாதுவிட்டால், வெறுமையாக இடம் இருந்தால்
ஒலியானது செல்ல முடியாது. இடையில் ஏதாவது பொருட்கள் இருந்தால் அவற்றின் ஊடாக ஒலி செல்லக் கூடியதாக இருக்கும். அலை செல்லும் திசைக்குக் குறுக்காக அதிர்வுகள் நிகழ்ந்தால் இது குறுக்கலை எனப்படுகின்றது. குளத்திலே, குளத்தின் நடுவில் ஒரு கல்லைப் போடுங்கள். அப்போது ஒரு அலை குளத்தின் கரையை நோக்கிப் போவதைப் பார்ப்பீர்கள். இங்கே அவ்வலை போகிற திசைக்குச் செங்குத்தாக, தண்ணீர் மேலும் கீழுமாக அசைவதைக் பார்க்கலாம். இது போன்ற அலைகளைத் தான் குறுக்கலை என்கிறார்கள்.

எல்லா அலைகளுமே கண்களுக்குத் தெரியும் எனக் கூறமுடியாது. கண்களுக்குத் தெரியாமலும் செல்கின்ற அலைகள் உண்டு. மின்காந்த அலைகள் அவ்வகைக் குறுக்கலைகளுக்கு எடுத்துக் காட்டாகும். மின் அதிர்வும், காந்த அதிர்வும் என இருவகையான அதிர்வுகள் (அல்லது தண்ணீர் குளத்தில் மேலும் கீழுமாக அசைந்தது போல்) அவ்வலைகளில் இருக்கும். இங்கே அலை செல்லும் திசைக்குச் செங்குத்தாவும் தங்களுக்குள்ளும் செங்குத்தாகவும் காந்த அதிர்வுகளும் மின்னதிர்வுகளும் நிகழ்வதை நீங்கள் அறிவீர்கள்.

இனி அலைகளுடன் சேர்ந்திருக்கும் அலைநீளம், அதிர்வெண், அலையின் கதி என்பவை பற்றிப் பார்ப்போம். குற்றலையோ அல்லது நெட்டலையோ எதுவாயினும் இவை மூன்று கணியங்களும் இருக்கும். இவற்றினை விளங்கிக் கொள்வதற்கு வசதி யாக ஒலியலைகளை, நீள்பக்க அலை களைக் கருதுவோம்.

ஒலியலையானது வளித் துணிக்கைகளின் நெருக்கல்களாலும், ஐதாக்கல்களினாலும் செல்கின்றது என்பது எங்களுக்குத் தெரியும். இப்படியாகச் செல்கையில், அடுத்தடுத்து வரும் இரண்டு நெருக்கல்களுக்கு அல்லது ஐதாக்கல்களுக்கு இடைப்பட்ட தூரத்தினை அலைநீளம் என்பார்கள். நீளமல்லவா, அதனை அளக்கும் அலகாக நீளத்தின் அலகு இருக்கும். அதாவது அலை நீளத்தினை மீற்றரில் அளப்பார்கள்.

இனி ஒரு செக்கனில் எத்தனை நெருக்கல்கள் உண்டாகுமோ அல்லது எத்தனை ஐதாக்கல்கள் உண்டாகுமோ அதனை அதிர்வெண் என்கிறார்கள். இந்த அதிர்வெண்ணை செக்கனுக்கு எத்தனை சக்கரங்கள் என்ற வகையில் கூறுகின்றார்கள் இந்த, செக்கனுக்கு எத்தனை சக்கரங்கள் என்பதை ஹேட்ஸ் (Hz) என ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

அதிர்வெண்ணினதும், அலைநீளத்தினதும் பெருக்குத் தொகையானது ஒரு செக்கனில் அலை செல்லுகின்ற தூரமாக இருக்க, அதனை அவ்வலையின் கதி எனக் குறிப்பிடுகின்றார்கள். இத்தொடர்பினைக் கணித வடிவில் பின்வருமாறு கொடுப்பார்கள்.

கதி = அலைநீளம் அதிர்வெண்

என அலைநீளத்தினையும், F என அதிர்வெண்ணையும் V எனக் கதியையும் அடையாளமிட்டுக் கொள்வோமே ஆயின் தொடர்பினைப் பின்வருமாறு காட்டலாம், எழுதிக் கொள்ளலாம்.

V = F

அலையியக்கத்தினைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கிய சமன்பாடு. இதனைக் கொண்டு அலைகள் பற்றிய பல ஒப்பீடுகளைக் கூறலாம். அலைகள் பற்றிய படிப்பு இல்லை என்றாலும் இச்சமன்பாட்டின் அடிப்படையில் ஒரு விபரத்தை, எமக்குத் தேவையானதை மட்டும் கூறுகின்றேன்.

என்னடா இது! ஏதோ சமன்பாடுகள் என

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 94

நினைக்கிறீர்களா! உங்களுக்கு மட்டும்தான் இது. அலைகளைப் பற்றியும் அவற்றின் நடத்தைகளைப் பற்றியும் தெளிவு பெறுவதற்காகவே இந்தச் சமன்பாட்டினை உங்கள் கவனத்திற்குத் தந்தேன். சின்னச் சமன்பாடுதானே ஆனால் அலைகளைப் பொறுத்தவரையில் முக்கியமானது.

அடுத்த தடவையில் இச்சமன்பாட்டுடன் சில மேலதிக விபரங்களைப் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



# மூதறிஞர் சிவத்தம்பி



பேராசிரியர் சிவத்தம்பியினுடனான
தொடர்பை உறவை உரையாடல்களை
ஒரு கவிதையிலோ ஒரு கட்டுரையிலோ
ஒருசில பேட்டிகளிலோ அடக்கிவிட முடியாது.
ஆயினும் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அறிஞர்கள் ஊடகவியலாளர்கள் இயன்றவரை
இதயம் உருக வெளிக்கொண்டு வருகிறார்கள்.
எல்லோரும் பிறப்பதற்கென்று ஓர் இடம் உண்டு
அதுபோல் சிவத்தம்பி பிறந்ததுவும் யாழ்குடாநாட்டு
வடமராட்சிக் கரவெட்டிக் கல்விவள ஊரில்தான்.
அவர் தனது தேடலால் ஆளுமையால் புலமையால்
இந்த உலகத்தையே தனது அறிவில்
இறுதிவரை வைத்திருந்தார். பத்தொன்பதாம்
நூற்றாண்டில் ஆறுமுகநாவலரும் இருபதாம்
நூற்றாண்டில் சுவாமி விபுலானந்தரும்
இருபது இருபத்தொரு நூற்றாண்டுகளில்
கார்த்திகேசு சிவத்தம்பியும் தமிழ்நாட்டுப்
புலமையாளர்களாலேயே உயர்வாகப்
போற்றப் பட்டவர்கள். ஈழத்துக்கும் பெருமை
சேர்த்தவர்கள். வி.க.உயர்விருது தமிழ்நாட்டு
அரசால் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட
அறிஞர் பெருமான் கார்த்திகேசு சிவத்தம்பி.
செம்மொழி ஆய்வரங்கின் தலைமையை ஏற்று
நடாத்திய அறிவின் உச்சம் கொண்டவர்.
உலகத்தின் பல பல்கலைக் கழகங்களிலும்
தமிழ்நாடு கேரளா பாண்டிச்சேரி முதலிய
பல்கலைக் கழகங்களிலும் ஆய்வாளராகப்
பணியாற்றியவர். தமிழ்நாட்டு உலகத்தமிழாராய்ச்சி
நிலையத்தின் தலைமை ஆராய்வாளராகப்
பணியாற்றியவர். தாயகத்தில் இறுதிவரை வாழ்ந்தவர்.
கடமை கண்ணியம் கட்டுப்பாடு மனிதநேயம்
என்பவற்றிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்.
சமூகவியலா பொருளாதாரமா இலக்கியமா
வரலாறா நாடகமா நாட்டியமா திரைப்படமா
விமர்சனமா எந்தத் துறையாயினும்
எடுத்த உடனே விளக்கம் கூறும்
பல்துறைப் புலமையாளர். எழுபதுக்கு
மேற்பட்ட நூல்கள் இருநூறுக்கு மேற்பட்ட
கட்டுரைகள் இன்னும் பதிப்புக்கு வராத
எழுத்துரு ஆக்கங்கள் ஒளி ஒலி நாடாக்கள்
ஏராளமாகவே பல்கலைக் கழகங்களின்
பேணுகையில் இருக்கின்றன. வாழ்வியல்
இயங்குநிலை யதார்த்த மார்க்சிசத்தில்
புலமையின் ஆழத்தைத் தேடியவர்.
எழுபத்தொன்பதாவது வயதில் மறைந்துவிட்ட
பேரறிஞர் சிவத்தம்பி அவர்கள் விதைதுச்
சென்ற விதைகள் அறிவு விருட்சங்களாகி
உலகுக்கு வளத்தையும் கொடுப்பதுவே
அவரின் ஆன்மாவுக்கான காணிக்கையாகும்.



முத்துராஜா, M.A.

# பெயர் பல தாங்கி உயர்வளிக்கும் மயில் ஏறும் நல்லூர் அயில் வேலவன்



## நல்லூர் கந்தனின் மகோற்சவத்தை ஒட்டிய சிறப்புக் கட்டுரை

கலியுகத்தின் கண்கண்ட கடவுளாகக் காட்சி தரும் கந்தப்பெருமான் கலியுக வரதன் எனப்படுகின்றான். குறிஞ்சிநிலக் கடவுள் ஆனதால் குறிஞ்சிநிலக் கிழவன் - தலைவன், எனவும் மலைக்கிழவன் எனவும் அழைக்கப்படுகின்றான். ஆறு குழந்தைகளும் அன்னையால் ஒன்றிணைக்கப்பட்டதனாலும் வாசனை உடையவன் ஆனதாலும் கந்தன் எனப்படுகின்றான். அக்கினியின் கரத்தால் ஏந்தப்பட்டமையினால் அக்கினிப்பூ எனவும், கங்கையில் வளர்ந்தமையால் காங்கேயன் எனவும், சரவணப் பொய்கையில் தோன்றிமையினால் சரவணன், சரவணபவன் எனவும், கார்த்திகைப்பெண்களால் பால் ஊட்டி வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனவும், கடப்பமாலை அணிபவன் ஆனதால் கடம்பன் எனவும், விசாக நட்சத்திரத்திற்குரியவன் ஆனதால் விசாகன் எனவும், ஆறுமுகங்கள் உடையவன் ஆனதால் அறுமுகன் எனவும், அடியார் உள்ளத்தில் குடியிருப்பவன் ஆனதால் குகன் எனவும், வேலினை கரத்தில் ஏந்தி காட்சி தருவதனால் வேலன் எனவும், இனிமையான நலனை விரும்பி அதனை அடியவர்க்கு அருள்கின்றமையால் சுப்பிரமணியன் எனவும், குழந்தைச்சாமி ஆனமையால் பாலசுப்பிரமணியன் எனவும், மயிலை வாகனமாக உடையவன் ஆனதால் மயூரன் எனவும், தேவரைக் காத்தமையால் தேவசேனாதிபதி எனவும், சூரனை சங்காரம் செய்தமையால் சூரசங்காரன் எனவும், சேவற்கொடியை உடையவன் ஆனதால் கோழிக் கொடியோன் எனவும், பல்வேறு பெயர்களால் முருகன் அழைக்கப்படுகின்றான். மேலும் சிவகுரு, தகப்பன் சாமி, ஞானகுரு, கதிரேசன், குழகன் என்ற பெயர்களும் முருகனுக்கு உண்டு. தேவயானை மகிழ் மணாளனாகவும் குறவள்ளிக் காந்தனாகவும் அவன் விளங்குகின்றான். குன்றில் அமரும் குமரன் அடியார் மனமன்றில் உறைந்து பகையை வென்று என்றும் நன்றே செய்வான். முத்தமிழால் வைதாரையும் அவர் சித்தம் திருத்தி தன்மீது பித்தராக மாற்றி வித்துவம் பெறச் செய்வான். எனவே தான் எண்ணிலடங்காப் பக்தர்கள், அவனது திருவுருவை கண்ணினால் கண்டு களிக்க என்ன புண்ணியம் செய்தோம் என்று நல்லூர் ஆலயம் நண்ணித் தொழுவர்.

மருதமும், யமுனா ஏரியும் சூழந்தும் மனங்கவர் பதி நல்லூர். சைவமும் தமிழும் வளர்த்த நாவல்லார் எனப் போற்றப்பட்ட ஆறுமுக நாவலர் பிறந்த பதி நல்லூர். இலங்கையின் ஒரே ஒரு ஆதீனமான திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைந்துள்ள பதி நல்லூர். மணிபாகவதரின் சமாதி அமைந்துள்ள பதி நல்லூர். தமிழ் இராச்சியத்தின் தலை-நகரமாக விளங்கியது நல்லூர். தமிழ் அறிஞர்களும், சான்றோர்களும் பசுவதை தடுக்க சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்தபதி நல்லூர். எல்லாவற்றிற்கும் மேலாக அழகன் முருகனின் ஆலயத்தால் அகிலமெங்கும் புகழ்பரப்பி நிற்கும் பதி நல்லூர். இத்துணைப்பெருமை பெற்ற நல்லூர் உண்மையில் நல்ல ஊரே ஆகும். அங்கே திருமுருகனின் அரசாங்கம் வரவிரும்பும் அடியவர்க்கு அருள் அமுதம் படைத்து சிரமமின்றி பரம கதி அடையச் செய்யவல்லது. நல்லூர் தேரடி தெய்வீகமுடையது. தவசிரேட்டர்கள் செல்லப்பாசுவாமிகள், யோக சுவாமிகள் ஆகியோரை உற்பவித்த இடம் அது. சித்தர்கள் வாழ்ந்த இடம் அது. தேரடியில் கண்டேனே என்றபடி யோகர் தமது குருவான செல்லப்பரை கண்ட இடம் அது. மகிழமரத்தால் மகிமை பெற்றது தேரடி.

காரியாலய ஒழுங்கிற்கேற்றபடி நல்லூர் கந்தனது ஆலய கருமங்கள் நடை பெறுவது சிறப்பிற்குரியது. ஆசார சீலர்களான அந்தணப்பெருமக்கள், குறித்த நேரத்திற்கு நடைபெறும் ஆலயக் கிரியைகள், விழாக்கள் மாப்பாண முதலியாரின் திறமையான நிர்வாக ஒழுங்கு, அடியவரின் மெய்ப்பாடுகள் கந்தப் பெருமானின் உலாக்கள் எல்லாம் சேர்ந்து நல்லூரை பூலோக கைலாயமாக காட்சியளிக்கச் செய்து விடுகின்றன. விலைவாசி சம்பளம் யாவும் உயர்ந்துள்ள இன்றைய காலகட்டத்திலும் அருச்சனைக்கு ஒரு ரூபா அறவிடும் பெருமை நல்லூர் ஆலயத்திற்குரியது. மகோற்சவ காலத்தில் நல்லூர் இந்திரலோகமாகவே காட்சியளிக்கின்றது. நல்லூர் கந்தன் அலங்கார கந்தனாக காட்சியளிக்கின்றான். முருகனின் அழகு அதிசயமானது. அதனை வலிந்திழுக்கும் வனப்பு எனலாம். அதனைப்பருக நலாயிரம் கண்படைத்திலனே என்ற அருணகிரியாரின் ஆதங்கம் முற்றிலும் பொருந்துவதாகும்.

அதிகாலை நான்கு மணிக்கு ஒலிக்கும் முருகனின் ஆலயமணி அனைவரையும் கண்விழிக்கச் செய்கின்றது. முருகா, கந்தா, கடம்பா, கார்த்திகேயா என்று சொல்லியே துயில் நீத்து எழுகின்றனர் மக்கள். காலையில் ஏற்படும் முருக சிந்தனை அவனை வந்தனை செய்தற்கு ஆலயம் நோக்கி பந்தமுடன் உந்துதல் செய்கின்றது. நாள் முழுவதும் பக்தி உணர்வு மேலோங்கி இருக்கும் அதனை மணிவாசகர் வார்த்தையில் பின்வருமாறு கூறலாம்.

என்பு நைந்து உருகி நெக்கு நெக்கு
அன்பு என்னும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதரென்று அரற்றி
உரோமம் சிலிர்ப்ப கரமலர் மொட்டித்து
இருதயம் மலர கண்களி கூர

பக்தர்களின் பரவச நிலையை யோகசுவாமிகள் பின்வருமாறு அருளியுள்ளார்.

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக் கும்பிடுவர்
தேடுவர் செய்வ தொன்றறிகிலர் திடமுடன்
நாடுவர், வாடுவர் நம்பர் தம் அடியரே.

நல்லூரானை நாளும் வலம் வந்து வணங்கினால் எல்லா நலனும் எய்தப்பெற்று சொல்ல முடியாத சுகத்தில் பல்லாண்டுகள் திளைக்கலாம். புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தேவர் குலம் காத்த செல்ல நல்லூர் குமரன் வீதி வலம் வரும் காட்சியை அகக் கண்ணில் கண்டின்புற்று நலம் பல பெற்று வாழ்வோம்.

எல்லையில்லாப் பிணிதீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லை என்னாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து
நல்ல மருந்து ஒரு குரு மருந்து
நல்லூரில் இருக்கின்றதை நாடிடுவீரே!



நா. க. சிவராமலிங்கம்

# போட்டா...

21ஆம் பக்கத்தொடர்ச்சி



வெள்ளைக்காரிகள் சகிதம் ஆட்டம் போட்டிருக்கிறார்.

வசனங்கள்தான் படத்தில் பெரிய பலம். நான்கு ரன்களும் ஆறு ரன்களுமாக வசனங்கள் விளாசுகிறது. "என் பாவாடை-யை தூக்கிட்டு போனவன்தானே நீ..." என்று கதாநாயகி, கதாநாயகனைப் பார்த்து சொல்வதை, எவ்வித விரசமும் இல்லாமல் காட்சிப்படுத்தியிருப்பது அழகு. அந்த பொ-டியன், "சிவப்பு ஜட்டிதானே போட்டிருக்கே" என்று கேட்பது அதிர்ச்சி. வசனத்தில் அங்கங்கே தென்படும் இரட்டை அர்த்தங்களை தவிர்த்திருந்தால், சிறந்த வசனகர்த்தா விருதுக்கு நாமே பரிந்துரை செய்திருக்கலாம். இடைவேளைக்குப் பிறகு, சற்றே தொய்வு முக்கால்வாசி கிராமத்து மனிதர்களையே நடிக்க வைத்திருப்பதால் ஒரு சில இடங்கள் நாடகம் போல இருக்கிறது கடைசி கிரிக்கெட் காட்சிகள் அத்தனை பரபரப்பு இல்லாமல் இருப்பதும் ஒரு சின்ன குறை.... இதுபோல் சில சின்னச் சின்னக் குறைகள் இருந்தாலும், இவை எல்லாவற்றையும் மீறி, நல்லதொரு நகைச்சுவைப் படத்தைக் கொடுத்திருக்கிறார்கள். படத்தில் லாஜிக்கே கிடையாது. ஆனால், உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குள் படமே முடிந்த உணர்வு!

போட்டா போட்டி - விறுவிறுப்பான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி!

# தேங்காய் எண்ணெயின் மகத்துவம்

## மின்வலையில் வந்தவை - 19

தாயகத்தில் தேங்காய் எண்ணெய் மிகவும் தாராளமாகப் பாவிக்கப்பட்டது. பொரிப்பது, விளக்கெரிப்பது, தலைக்கு வைப்பது, கால்வாதத்துக்குப் பூசுவது எனப் பல்வேறு பயன்பாடுகளுக்குப் பாவிக்கப்பட்டது. விலை மலிவாகவும் தாராளமாகக் கிடைப்பதாகவும் தேங்காய் எண்ணெய் விளங்கியது. போர்க் காலங்களில் பெற்றோல் கிடைக்காத சந்தர்ப்பங்களில் தேங்காய் எண்ணெய் மோட்டார் சைக்கிள் இயங்குவதற்கும் பயன்பட்டது. நாளடைவில் தேங்காய் எண்ணெய்ப் பாவனையால் கொழுப்பு அதிகரிக்கிறது என மருத்துவர் கூறவே மக்கள் படிப்படியாக உணவில் அதைச் சேர்த்துக் கொள்வதைக் குறைத்துக் கொண்டார்கள். ஆனால் மருத்துவப் பாவனையாக நாட்டு வைத்தியத்தில் தேங்காய் எண்ணெய் இன்னும் பாவனையில் உள்ளது. அண்மையில் கனடாவில் நடந்த ஒரு சம்பவத்திலிருந்து அதன் மருத்துவ மகிமை வெளிப்பட்டிருக்கிறது.

**- துறையூரான் -**

இரு மாதங்களுக்கு முன் புறூஸ் பிளெற் என்ற மத போதகர் கடுமையான மூளை அசதிக் கோளாற்றால் (Dementia) பீடிக்கப்பட்டிருந்தார். அவருக்கு வாசிப்பதும் பேசுவதும் முடியாமலிருந்தன. அவரது அடிப்படைத்தேவைகளைச் செய்வதற்கு உதவி தேவைப்பட்டது. அவர் இனிமேல் போதனை செய்வது முடியாத காரியம் என வைத்தியர் கூறினார். தேங்காய் எண்ணெய் குடித்த மூன்று மணித்தியாலத்தில் இவையாவும் மாற்றமடைந்தன. தற்போது இவர் யாவற்றையும் தானாகவே செய்கிறார். அதுமட்டுமன்றி கோவிலில் போதனையுஞ் செய்கிறார். அண்மையில் ஒரு கலியாணமுஞ் செய்து வைத்தார்.




கனடாவில் பெய்ஸ்லி என்ற இடத்தில் வசிக்கும் அவரது மனைவி கரோல் கூறுவதைப் பாருங்கள். "எனது கணவர் புறாசின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. அவரது அசதிக் கோளாறு வேகமாக முன்னேறியது. அவருக்கு ஒரு சிறிய வசனத்தைப் பேசுவதே மிகக் கடினமாய் இருந்தது. அவரது தேவைகளையும் சிறிய வேலைகளையும் கூட அவரால் சொல்ல முடியாமல் இருந்தது. எனவே இது நீடித்தால் அவரது நிலை என்னவாகும் என நான் கவலைப்பட்டேன்."

புறூஸ் பிளெற் ஒரு இளைப்பாறிய போதகர். அவர் நான்கு கிறிஸ்தவ நூல்களை எழுதியவர். 2010 ஆம் ஆண்டு அவருக்கு இதயவழற்சி (Endocarditis) அதாவது இதயப்புண் ஏற்பட்டது. இதற்கு ஒரு பங்கசுத் தொற்றுக் காரணமாக இருந்தது. இதனால் இவரின் இதயத்தின் ஒரு பகுதி பாதிப்படைந்தது. இதனால் இவருக்கு இதயவால்வு புதிதாகப் பொருத்தும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இந்தத் தொற்று இரத்தச் சுற்றோட்டம் மூலமாக அவர் ஈரல், பித்தப்பை, கல்லீரல், மூளை ஆகியவற்றைச் சென்றடைந்தது. மிகவும் ஆபத்தான நிலைமையில் இருந்து இரண்டு மூன்று தடவை செத்துப் பிழைத்தார். ஆனால் இத்தொற்று அவரது மூளை இழையங்களைப் பாதித்து இவருக்கு இந்த அசதி நோயை உண்டாக்கியது. வைத்தியர் இவருக்கு இது நிரந்தரமாக இருக்கும், இவரால் இனிப் போதகராகப் பணியாற்ற முடியாது என மனைவியிடம் கூறினார்.

இவரது நிலைமை நாளுக்கு நாள் மோசமாகியது. அவரது அடிப்படைத் தேவைகளைச் செய்ய அவரது மனைவியே உதவினார். அவரை நான் இழந்து விட்டதாகவே நினைத்தேன். ஒரு குழந்தையைக் கவனிப்பது போலவே நான் அவரைக் கவனித்தேன் என்றார் கரோல்.

அவருக்கு, மூளையின் நிலைமையை அறிவதற்கு ஒரு குறுகிய பரீட்சை கொடுக்கப்பட்டது. இதை Mind Mental States Exam (MMSE) என அழைப்பர். இதன் மூலம் இவரது மூளைக் கோளாற்றின் உண்மை நிலையை அறியக் கூடியதாக இருக்கும். இதில் 30 கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கும். இதில் 25-30 கேள்விகளுக்குச் சரியான விடையளித்தால் அது சாதாரண நிலையாகும். 21-24 சரியான விடையெனில் சாடையான கோளாறு என்றும் 10-20 எனில் இடைப்பட்ட நிலை என்றும் 9க்கும் குறைவாக இருந்தால் மோசமான நிலை எனவும் கொள்ளலாம். புறூஸ் 11 கேள்விகளுக்குச் சரியான விடை அளித்து, மோசமான நிலையின் எல்லையில் இருப்பதை வெளிப்படுத்தினார்.

இவ்வாறான கோளாறுள்ள கணவனைப் பராமரிப்பதில் கரோல் மிகவும் கஷ்டத்துக்கு ஆளானார். எனவே அவரை ஒரு பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கும்படி வைத்தியர் ஆலோசனை கூறினார். அவருக்கு அது செய்ய முடியாத காரியமாகப்பட்டது. எனவே வேறு ஏதாவது மாற்று வழியைக் காட்டும்படி கடவுளை வேண்டினார். அடுத்த நாள் பேஸ்புக்கில் (Face Book) அவருக்கு ஒரு புதிய நண்பரின் தொடர்பு ஏற்பட்டது. இவரது தளத்தில், ஒரு வைத்தியர் அல்சைமர் நோய்க்கு (மூளை அசதி நோய்) தேங்காய் எண்ணெய் பயன்படுத்திக் குணப்படுத்திய நேர்முகவர்னனை யூ ரியூப்பில் (You Tube) இடம் பெற்றதின் தொடர்பு இருந்தது. சில வாரங்களுக்கு முன் ஒரு தாதியின் கூற்றுப்படி தான் பலசரக்கு கடை ஒன்றில் வாங்கிய தேங்காய் எண்ணெயின் ஞாபகம் வந்தது.

எனவே அந்த வீடியோவில் கூறப்பட்டதன் பிரகாரம் கரோல் கணவருக்கு இரு மேசைக்கரண்டி தேங்காய் எண்ணெய் குடிக்கக் கொடுத்தார். மூன்று மணித்தியாலத்தில் அவர் தெளிவாகப் பேச ஆரம்பித்தார். இது பல மாதங்களின் பின் நிகழ்ந்த அதிசயம். எனவே நாடோறும் அவருக்குத் தேங்காய் எண்ணெய் கொடுக்கப்பட்டது. ஒரு மாதத்தின் பின்னர் அவர் தனது தேவைகள் யாவற்றையும் தானாகவே செய்ய ஆரம்பித்தார். தொலைபேசியில் பேசினார். கணினியில் வேலை செய்தார். சிறிய நூல்களை வாசித்தார். ஒரு புத்தக அடுக்குந் தட்டையுஞ் செய்தார். ஒரு மாதத்துக்கு முன் செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்யத் தொடங்கினார்.

"எனது கணவரை மீண்டும் பெற்றுக் கொண்டேன்' என கரோஸ் சந்தோசத்துடன் கூறினார். அவர் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து என்னோடு தெளிவாகப் பேசும் போதெல்லாம் நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்' என்றார்.

அவரது நிலையைப் பார்த்த வைத்தியர் மிகவும் அதிசயப்பட்டார். அவர் இன்னுமொரு MMSE பரீட்சை செய்யும்படி கூறினார். இத்தடவை அவர் 30 கேள்விகளில் 24க்குச் சரியான விடையளித்தார். இது அவரது நிலையை சாதாரண நிலைக்கு அண்மையில் இருப்பதாகக் காட்டியது. எனவே கரோல் தான் அவருக்குத் தேங்காய் எண்ணெய் கொடுத்த கதையை வைத்தியருக்குக் கூறினார். 'அது வேலை செய்வதால் நீங்கள் தொடர்ந்தும் அதைக் கொடுங்கள்' என வைத்தியர் கூறினார்.

தற்போது புறூஸ், நாளாந்தம் முன்னேறி வருகிறார். கலியாணம் நிகழ்த்துதல் போன்ற தனது போதகர் வேலைகளைச் செய்து வருகிறார். புறூசும் கரோலும் விவாகஞ் செய்து 43 வருடங்களாகின்றன. இன்னும் பல்லாண்டுகள் தம்பதிகளாகச் சந்தோசமாக வாழவே விரும்புகின்றனர். தாங்கள் தேங்காய் எண்ணெய்க்கும் கடவுளுக்கும் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என அவர்கள் கூறுகின்றனர்.

கனடாவிலும் பிறநாடுகளிலும் முதியோரைத் தாக்கும் நோய்களுள் அல்சைமர் அதாவது மூளை அசதி நோயும் ஒன்றாகும். இதற்கு இன்னும் மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. மூளையின் சில பகுதிகள் பாதிப்படைவதால் இது ஏற்படுகிறது என விஞ்ஞானிகள் கூறினாலும் அதைக் குணப்படுத்துவதற்கும் பல ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே தேங்காய் எண்ணெயின் மகத்துவத்தை உணர்த்தியுள்ள புறூசின் வரலாறு மருத்துவ உலகில் பரப்பரபை ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. இது பற்றிய மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் வலைத்தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

www.coconutreasearchcenter.com

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.
Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# அடிப்படைகளின் ஆரம்பம் ஆண்டவனே!




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப் பிரார்த்திக்கிறேன்.

ஒரு இனத்தின் இருப்புக்கும், தொடர்ந்த நல்வாழ்வுக்கும் அதன் வரலாறும் பாரம்பரியமும் பேணப்படுவதும், பயிற்றுப் படுவதும் புதிய தலைமுறையினரால் பின்பற்றப்படுவதும் முக்கியமானதே. 'Elements' என்று ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை உண்டு. இதன் தமிழ் ஆக்கம் 'அடிப்படைகள்' என்பதாகும். அடிப்படை களில் அவதானமும், அக்கறையும் கொள்ளும் ஒருவர் தனது அடையாளங்களைத் தக்க வைத்துக் கொள்வார். அடையாளம் அவரை ஊக்கப்படுத்தும் ஆக்கங்களை உருவாக்கத்துணை நிற்கும். 'ஆள் சாவது மட்டும் மரணம் இல்லை. அடையாளம் சாவதும் மரணம் தான்' என்றார் ஒரு கவிஞர். அத்திவாரம், அடிப்படை என்பவை மனிதவாழ்வின் எல்லா அலகுகளுக்கும் அவசியமானதே.

நண்பா! இந்தச் சிந்தனை உனக்கும் எனக்கும் ஏன் வருகிறது? நமது இனத்தின் வருங்காலம் குறித்து யோசிப்பதால் வருகிறது. இது பிழைப்புக்காய் எடுக்கும் எண்ணமில்லை. நம் இனத்தை வாழவைக்க எண்ணும் ஆன்மீகச் சிந்தனைகளில் ஒன்று. இது குறித்துச் சொண்டு சுழிக்கிறவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். வரலாறும் பாரம்பரியமும் அடிப்படைகளும் தெரியாமல் நமது பரம்பரையினர் வாழ்ந்தால் எதிர்காலத்தில் அவர்கள் என்னென்ன துன்பங்களை அனுபவிப்பார்கள் என்பதை ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள். அடிப்படை-களை மறந்து அடையாளங்களை இழந்த இன்றைய இனங்களின் நிஜத்தை யதார்த்தத்தைப் பாருங்கள். கருத்தூன்றிச் சிந்தியுங்கள். உங்கள் சொண்டு சுழிப்பு ஏழனம் இல்லை. எடுபடுமா? சூழல் இடங்கொடுக்குமா? என்ற அர்த்தத்தில் தான் நெளிகிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். எல்லாம் நம்பிக்கையிலும் தான் இருக்கிறது. நம்பினோர் நலிவதில்லை.

நண்பா! எதையும் என் வாழ்க்கை அனுபவங்களோடு எழுதச் சொன்னாய். அதற்காக எழுதுகிறேன். விலாசம் எழுப்ப அல்ல. விளம்பரம் தேடவும் அல்ல. இனி ஏன் எனக்கு விலாசமும், விளம்பரமும். எழுபதுக்கும் அடுத்தபடியில் நிற்கிறேன். 'எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே'. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஸ்காபுறோ அரசினர் மருத்துவ மனையில் ஆன்மீக ஆதரவுப் பணிக்காக வாரம் ஒரு நாள் போவேன். நோயாளிகளின் கட்டிலடிக்குச் சென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து அவர்களின் நோய் தீரவேண்டுதல் செய்து, அவர்களின் ஆன்ம அமைதிக்காகவும் போதனைகள் செய்வேன்.

ஒருநாள் ஒரு கயானாக்காரர் என்னைக் கண்டதும் கட்டிலில் இருந்து எழுந்து என்கையைப் பிடித்தபடி அழுதார். அவருக்கு அறுபது வயதிருக்கும். அவர் தனது நோய் குறித்து அழுகிறார் என்று நினைத்து ஆறுதல் சொன்னேன். சிறிது நேரத்தில் அவர் தனது இனத்தின் அடையாளம் அழிந்ததற்காகவும், அடிப்படைகள் பேணப்படாமல் தாம் முகவரியில்லா முகங்களாய் கணிப்பின்றி வாழ்வது குறித்தும் கவலை நெஞ்சை அடைப்பதாகக் கூறி மீண்டும் கலங்கினார். இத்தோடு நமது தமிழ் இனத்தின் அடிப்படைகளை நாம் பேணி, அடையாளங்களைப் பதிய வைப்பது தமக்கு மகிழ்வைத் தருவதாகவும் கூறினார்.

நண்பா! கயானாக்காரரின் கூற்றில் உண்மை உண்டு தான். நமது இனத்தின் மொழி, சமயம், கலை, பண்பாடுகளை நாம் வளர்க்கப் பல்வேறு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த முயற்சிகளை முழுமையாக எல்லா மக்களும் பயன்படுத்திக் கொள்கிறார்களா? ஐம்பது வீதம், எழுபத்தைந்து வீதம் தேறுகிறார்கள் என்பது திருப்தியா? நூறு ஆட்டுக்குட்டிகளில் ஒரு ஆட்டுக்குட்டி காணாமல் போனதும் மிகுதியாக இருந்த தொண்ணூற்று ஒன்பது குட்டிகளோடும் திருப்திப்படாமல், காணாமல் போன குட்டியை யேசு நாதர் தேடினாராமே. ஏன்? இதனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நம்மில் சிலருக்கு இருக்கும் இடைஞ்சல்கள், நெருக்கடிகள், தடைகள் புரியாமல் இல்லை. புலம் பெயர்ந்த வாழ்வின் அழுத்தங்கள் பாரமானவை தான். கடவுள் நம்பிக்கையோடும், சோர்ந்து போகாத சுறு சுறுப்போடும் இயங்கினால் பலன் உண்டு. நிற்க, நாம் சுகமாய் இருக்கவே விரும்புகிறோம். 'சுகம் வேண்டுமானால் சிவம் வேண்டும்' என்பர். சிவன் சுகத்தைக் கொடுப்பவன். இதனால் சங்கரன் என்ற பெயரைப் பெற்றான். சங்கரனான சிவபெருமான் தன்னை அணுகுவோருக்கே சுகம் செய்வான். அணுகாதவர்களுக்கு துன்பம் செய்வானா? இல்லை. பின் அவர்கள் நிலை என்ன? அவன் பொறுப்பில் அவர்கள் இல்லை. அவ்வளவுதான் அவர்கள் தன்னை அணுகாதவர்கள் என்பதால் விக்கினங்களைக் கொடுப்பது அவன் வேலை இல்லை. அவர்கள் விடயத்தில் அவன் சும்மாயிருப்பான். 'சிவபெருமான் சஞ்சலம் இல்லாதவன்' 'நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன். சலமிலன் பெயர் சங்கரன்' என்பார் உமாபதி சிவாச்சாரியார்.

எரியும் விளக்குக்குப் பக்கத்திலே போனால் வெளிச்சத்தைப் பெறலாம். எட்ட நின்றால் இருட்டே. இந்த இருட்டுக்கும் விளக்குக்கும் சம்பந்தம் இல்லை. இந்த இருட்டில் இருப்பவர்கள் வேதனைப்பட வேண்டும் என்று வெளிச்சம் தரும் விளக்கு விரும்புவதில்லை. இருட்டில் துன்பப்படுபவர்கள் பற்றி விளக்கு எண்ணிப்பார்ப்பதில்லை. இருட்டில் இன்பப்படுபவர்கள் குறித்தும் விளக்கு அலட்டிக்கொள்வதில்லை. சிவபெருமான் விளக்கமானவன். வெளிச்சமானவன். வெளிப்படையானவன். ஓசை ஒலி எல்லாம் ஆனவன். 'எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான். நண்ணினர்க்கு நல்லன்.'

சிவபெருமானின் அருளைப் பெறுவதற்கு அவன் நாமத்தைக் கூறி வழிபடுதலே சுருக்கமான சுகமான வழி. 'பிணக்கு இலாத பெருந்துறைப்பெருமான் உன் நாமங்கள் பேசுவார்க்கு இணக்கு இலாதது ஓர் இன்பமே வரும்' என்கிறது திருவாசகம். தியானம், தவம், ஞானம் என்பதெல்லாம் கடினமாயிருந்தால் கவலைப்பட வேண்டாம். நாமத்தைச் சொல்லி வழிபட்டாலே வேத நாயகன் வேண்டியதைத் தருவான் என்றார்கள். நமது அனுபூதியச் செல்வர்கள் சிவ நாமத்தைச் சொல்லுவதும், பிறர் சொல்லக் கேட்பதும் வழிபாட்டில் அடங்கும். திருஞானசம்பந்தர் சுவாமிகள் தன் நாவால் சிவ நாமத்தைச் சொன்னதோடு, கிளி மொழியாலும் சிவநாமத்தைக் கேட்க விரும்பினார். 'சிறையாரும் மடக்கிளியே இங்கே வா' என அழைத்து தேனோடு பால் முறையாகக் கலந்து உனக்கு உண்ணத் தருவேன். பிறையாளனான இறைவனின் திருநாமத்தை எனக்கொருக்கால் சொல்லாயோ என்று கெஞ்சி நின்றார்.

சிவநாமத்தின் சக்தியால் நாம் இயங்கும் நிலை அடைவோம். அப்பரும், சுந்தரரும், ஆளுடைப்பிள்ளையும் அருள் மணிவாசகரும் இயங்கியமைக்கு சிவநாமமே உந்து சக்தியாய் உதவியது. நமது வாழ்க்கைச் சக்கரத்தை நல்ல பாதையில் உருட்டிவிடும் சக்தி சிவநாமத்துக்கு உண்டு. சிவநாமங்களில் 'சங்கரா' என்னும் பெயர் நமது நித்திய உச்சரிப்புக்கு உரியது. உடல்நோயோ, மனநோயோ ஏற்படும் போது சங்கரா! சங்கரா! என்று உச்சரித்தால் சுகத்தைக் கொடுப்பவனாகிய சிவன் சிரத்தை எடுப்பான். வைத்தீஸ்வரனானவன், இல்லங்கள் தோறும் எழுந்தருளுவான்.

நண்பா!
'தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை, யார் கொலோ சதுரர்' என்று போட்டிக்கு நின்ற மணிவாசகர் 'சங்கரா' என்னும் நாமத்தையும் கூறி நின்றார். நோய் தீர்ப்பவனே என்று அந்த நேரத்தில் விளித்தமை சிந்தனைக்குரியது. தனது போட்டிமனப்பான்மையை ஒரு நோய் என்று மணிவாசகர் குறிப்பால் உணர்த்தினார். நமக்குள்ள நோய் ஒன்றா இரண்டா? சங்கரா! சங்கரா! சங்கரா! என்று சொல்லிச் சொல்லி அமைதியைக் கேட்போம். சஞ்சலம் நீக்கி சாந்தி தரும் சிவபெருமான் தோன்றாத்துணையாய் நின்று, தொற்றுவியாதிகளையும் தோன்றிய வியாதிகளையும் நீக்கி அருள் செய்வான்.

நமது வருங்காலச் சந்ததியினருக்கு முதல் தேவை கடவுள் நம்பிக்கையும் சமயப்பற்றுமே. படித்தால் மட்டும் போதுமா? வாழ்க்கைக்கு துணையும், வழிகாட்டியும் வேண்டாமா? 'கற்றதனால் ஆயபயன் என்ன?' என்று கேட்கும் திருவள்ளுவர் கூற்றினைத் திரும்பிப் பார்க்க நம் பரம்பரையினருக்குப் பழக்க வேண்டும்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# தூத்துக்குடி...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழ்நாடு, கற்கால மனிதன் வாழ்ந்த பல தொன்மையான இடங்களைக் கொண்டுள்ளது என முதன் முதலில் உலகுக்கு உணர்த்தினவர். இதற்கு முன்னரே பிறிக்ஸ் என்பவர் நீலகிரிப் பகுதிகளில் 1837ஆம் ஆண்டளவில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பலவற்றை அகழ்ந்து அங்கு வாழும் பழங்குடி மக்களுக்கும்



பெருங்கற்கால ஈமச் சின்னங்களுக்கும் இருக்கும் தொடர்பினை ஆய்வு செய்திருந்தார். இந்த நூற்றாண்டில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கள ஆய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இக்கால கட்ட ஆய்வுகள் பற்றி, அறிவியல் சார்ந்த அகழாய்வுகளோ, காலக் கணிப்பு முறைகளோ அக்கால கட்ட ஆய்வுகளில் பின்பற்றப்படவில்லை. எனவே, அகழாய்வு செய்யப்பட்ட பல்வேறு இடங்களில் நிலவிய பண்பாட்டின் தாக்கத்தையும் காலத்தையும் இன்று நம்மால் சரியாக அறிய முடியவில்லை" என்கிறார் சத்தியமூர்த்தி.

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலகட்டத்தில் சர் மார்டிமர் வீலர் என்பவர் அறிவியல் சார்ந்த அகழாய்வு முறைகளை இந்தியத் தொல்லியல் துறையில் புகுத்தினார். சர் மார்டிமர் வீலர் கால கட்டத்தில்தான் தட்சசீலம், ஹரப்பா, தமிழ்நாட்டில் அரிக்கமேடு அகழாய்வுகள் நடத்தப்பட்டன. அரிக்கமேடு அகழாய்வு, வீலரின் மிகச் சிறந்த ஆய்வாக தொல்லியலாளர்களால் கருதப்படுகிறது. அரிக்கமேடு அகழாய்வு மூலம்தான் தமிழ்நாடு, உரோமாபுரி நாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு அறியப்பட்டது.

தொடரும்

# உலக முடிவு...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

என்னும் சிவனிடம் ஒடுங்குகின்றன. இது மத்திம பிரளயம் ஆகும்.

**5. மகா பிரளயம் அல்லது மகா சங்காரம்** - மேற்சொன்ன அனந்தேசுவரர் உள்ளிட்ட உயிர்கள் வதியும் முப்பத்து மூன்று சுத்த வித்தை புவனங்களையும் ஒடுக்குவது இந்த புவனங்களுக்கும் தத்துவங்களுக்கும் அப்பாலாய் நிற்கும் பரபிரம்மமாகிய பரமசிவன் ஆவார். இதுமகாப் பிரளயம் அல்லது பேரூழிக்காலம் எனப்படும். இவர் சக்தியே பராசக்தி. இவரது நவந்தரு பேதமென்னும் ஒன்பது வடிவங்களில் ஒரு பேதமே மகாவிஷ்ணு. இந்த மகாசிவனே பஞ்ச கிருத்தியம் என்னும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் தொழில்களுக்குரிய சதாசிவர். இவரே சத் சித் ஆனந்த சொரூபியாகிய நடன சிவன் என்னும் நடராசர். இவரது திருமேனியே சிவலிங்கத் திருமேனி ஆகும். ஓம் ஸ்ரீ தத்துவாசனாயை நமஹா என்று ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் கூறுவது இவ்வாறு 224 அண்டத்தொகுதி களுக்கும் மூலமான முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாக அல்லது தளமாகக் கொண்டு இருக்கும் இந்த பராசத்தியையே. இந்த தத்துவ உலகங்களுக்கு அப்பாற்பட்டு மஹாகை-லாசம் இங்கு உள்ளது. அந்த மஹா கைலாசத்தில் நிலை கொண்டுள்ள சக்தியையே மஹாகைலாச நிலையாயை நமஹா என்று ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் கூறுகின்றது. அம்மையப்பராகிய இறை அமரும் கைலாசம் இதுவே. நமது பூலோக



கைலாசம் இதன் ஒரு சின்னமே ஆகும். இங்கு கூறப்பட்ட 224 அண்டத் தொகுதிகளும் எமது புவி சார்ந்த கோடிக் கணக்கான அண்டத்தொகுகளில் ஒன்றினது விவரணமேயாகும்.

இவ்வளவு காலமும் இறையின் பஞ்ச கிருத்தியங்களுக்கு காரணமாக இருந்த சக்தியும் மகாசங்காரத்தின் முடிவில் சிவத்தில் ஒடுங்கும். அப்போது சிவன் ஆடுவது சங்கார தாண்டவம். சிவனுடைய எல்லா தாண்டவங்களிலும் அருகில் இருக்கும் சக்தி இந்த சங்கார தாண்டவத்தில் இருப்பதில்லை. ஏனெனில் சங்கார காலத்தில் எல்லா உயிர்களும் மாயையில் ஒடுங்கிய மாயை சக்தியில் ஒடுங்க சக்தியும் சிவத்தில் ஒடுங்குவாள். அப்போது உலகின் இருமை வயப்பட்ட உந்தல்கள் எல்லாம் ஒடுங்கி ஒன்றாகும். இதையே அண்டவியல் விஞ்ஞானம் ஒருமைப்புள்ளி (Point of singularity) என்று கூறுகின்றது. இதுவே ஸ்ரீ சக்கரத்தின் முப்பரிமாணமாக அமைந்துள்ள மகாமேருச் சக்கரத்தின் உச்சியில் உள்ள முக்கோண வடிவத்தின் மேல் உள்ள புள்ளியாகிய பிந்து.

நவ ஆபரணங்களாகவுள்ள மகாமேருச்சக்கரம் இவ்வாறு பல்வேறு படிநிலைகளில் உள்ள அண்டத்தொகுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக, ஒழுங்கு முறையில், ஒன்றில் ஒன்று ஒடுங்கி, ஈற்றில் யாவும் சக்தியில் ஒடுங்க, அறுதியாக சக்தியும் சிவத்தில் ஒடுங்குவதைக் காட்டும் இயந்திர வடிவமாகும். சிவலிங்கத்தில் உள்ள ஆவுடையார் இந்த மாகமேருச்சக்கரத்தின் முக்கோண வடிவு குறிக்கும் பராசக்தியே. இந்த ஆவுடையாரை ஊடறுத்து நிற்கும் லிங்கம் மகாமேருச்சக்கரத்தின் உச்சிப் புள்ளியான பிந்து ஆகும். சில சக்கர வடிவங்களில் இந்தப் புள்ளி நீட்டமாக இலிங்க வடிவிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். இது ஈற்றில் சக்தியும் சிவத்தில் ஒடுங்குவதைக் குறிக்கின்றது.

சக்தியை முழுமுதற் கடவுளாகக்கொள்ளும் சாக்த சம்பிரதாயத்தில் சிவமும் சக்தியில் ஒடுங்க ஈற்றில் சக்தியே நிலை பெற்றிருப்பதாகச் சொல்வார்கள். அவர்கள் மகாமேருச்சக்கரத்தின் முக்கோணத்தை சிவம் என்றும் அதன் மேல் உள்ள புள்ளியை சக்தி என்றும் கொள்வர். இது சிவனின் உடலின் மேல் அமர்ந்திருக்கும் சக்தியின் திருவுருப் படங்களுக்கு ஒப்பானது. ஆயினும் இம்முறையில் சிவலிங்க வடிவில் உள்ள ஆவுடையாருக்கும் இலிங்கத்துக்கும் விளக்கம் தர முடிவதில்லை. சைவம் ஒன்றேதான். தான் உள்ளிட்ட கடந்த கால, நிகழ்கால, எதிர்கால மதங்கள், அவற்றின் கொள்கைகள், வடிவங்கள் யாவற்றையும் உள்ளடக்ககூடியதாகவும் விளக்கும் தன்மையதாகவும் அமைந்து இவை எல்லாவற்றுக்கும் அப்பாலானதாய், இராஜாங்கத்து அமர்ந்து விளங்குகின்றது. சைவம் விளங்கினால் எல்லா சமயங்களும் விளங்கும். “மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்”

இறுதியாங் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்ற ரென்னின் இறுதிதான் உணாடாகாதாம்
அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்
பெறதும் நாம் ஆக்க நோக்கம் பேரதி கரணத்தாலே
- சிவஞானசித்தியார் பாடல் - 55

At the moment of the final dissolution of the universe there is only One. If both ot them are firm in their existence, then there wouldn't be an end, At last everything is Haran, as he is everlasting after dissolving all. We get everything back with his great operations (of creation, sustenance, dissolution, obscuration and bestowing grace.

*Siva jnana siddhiyaar song - 55*



# “இனி உங்களுக்காகவே...

18 ஆம் பக்கத்தொடர்ச்சி

நடந்துகொள்கிறேன். அதன்மூலம் என் தாயை எப்போதும் நினைவு கூர்கிறேன்.”

எப்படி நடிப்புக்கு வந்தீர்கள்? நடிகையாக வேண்டும் என்ற தீர்மானத்துடன் வந்தீர்களா அல்லது தற்செயலாக உங்களை நடிப்புக்கு யாராவது அழைத்து வந்தார்களா?

“மருத்துவராக வேண்டும் அல்லது மருத்துவமனையில் வேலை பார்க்க வேண்டும் என்பதே சிறிய வயதில் எனது கனவாக இருந்தது. எங்கள் குடும்ப நண்பரும் டாக்டருமான கமலா செல்வராஜின் வழிகாட்டுதலில், எம்.எஸ்.சி. நியூட்ரீசியன் படிக்க தீர்மானித்திருந்தேன். சென்னை பெண்கள் கிறிஸ்தவ கல்லூரியில் பி.எஸ்.சி. நியூட்ரிசியன் படித்துக் கொண்டிருந்த போது, ‘நாயகன்’ படத்தில் நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அடுத்து அடுத்து பட வாய்ப்புகள் வந்ததால், படிப்பைத் தொடர முடியாமல் ஆகிவிட்டது. பிறகு, இயக்குநர் பொன்வண்ணனுக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றது. சினிமா சூழலிலேயே தொடர்ந்து இருந்ததால் நடிப்பே வாழ்க்கை என ஆகிவிட்டது. இப்பொழுது கணவர், குழந்தைகளின் சந்தோஷத்துக்காகவே நடிக்கிறேன்.”



உங்கள் கணவர் பொன்வண்ணன் மற்றும் குடும்பம் பற்றி...

“திரையுலகுக்கு வந்ததால் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு, என் கணவர் பொன்வண்ணன்தான். அவர் இல்லையென்றால் என் வாழ்கையில் எதுவுமில்லை. ஒரு தாய், குழந்தையை பாதுகாக்க வெறித்தனமாக உழைப்பதைப் போல என்னை செதுக்குவதில் என் கணவர் அக்கறையாக இருக்கிறார். படங்களை தேர்வு செய்ய வழிகாட்டுவது முதல் என ஒவ்வொரு வெற்றியிலும், ஒரு சர்வதேச வீராங்கனையை ஒலிம்பிக் போட்டிக்குத் தயார் செய்வது போல பொன்வண்ணன் செயல்பட்டுள்ளார்.

எங்களுக்கு இந்திரா பிரியதர்சினி, சாந்தினி என இரண்டு மகள்கள். திரையில் ஹீரோக்களை உருகி உருகி பார்த்துக் கொள்ளும் சரண்யா, நிஜத்திலும் குழந்தைகள் விரும்பும் பாசமான அம்மாதான். எனது மகள்களின் உடைகளை தைப்பது முதல், படிப்புக்கு பயிற்சி தருவது வரை எல்லாமே எனது பொறுப்புதான்.”

அடுத்த இதழில் முடியும்


RBC Royal Bank

Switch your Mortgage to RBC And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee

• 1st Time Home Buyers
• Pre-Approvals
• Debt Consolidation
• Home Equity Line of Credit
• New Immigrant & Self-Employed Programs
• Over 20 years of experience with RBC
• Fast and Efficient Service
• Always with a Smile!!!

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham &14th Ave Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

வீட்டு வர்த்தக இடியப்ப மெசீன்கள்
மின் தேங்காய்த்துருவி, பற்றீஸ் Cutter, Samosa Cutter, மற்றும் பல சமையலை விரைவு படுத்தும் கருவிகள்.
உறுதியான துருப்பிடிக்காத எவர் சில்வர் (Stainless Steel) இல் செய்யப்பட்டது.
(Life Time Waranty)
இவை யாவும் Engineer மோகன் P.Eng கண்டிபிடிப்புக்கள்
www.cancey.com
www.stringhoppermachine.com
Call: 416.433.6006

RE/MAX
Vision Realty Inc. Brokerage.
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Email: anton.jeeva@gmail.com
Web: AntonJeeva.com
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6
2007 - 2010
Anton Jeeva Arulappu B.Eng
Real Estate / Principal Mortgage Broker
(416) 575-5055
AWARD WINNING REALTOR
Specialized in bank sale homes
Preconstruction condos in downtown from $239,000
Mortgage can be arranged as low as 2.2 % ( variable)

275,900
Warden/Finch
Bedrooms: 2+1
Washrooms: 2

489,000
Kennedy/Steeles
Bedrooms: 3+2
Washrooms: 3
Brand New Basement

369,900
Markham/Mclevin
Bedrooms: 3+2
Washrooms: 3
Brand New Basement

649,900
Port Union/401
Bedrooms: 4
Washrooms: 3
Basement: Finished

728,000
Markham/14th/Legacy
Bedrooms: 4
Washrooms: 4
Appx 2900 sqft

Call for VIP Princing ($10,000 off)
Want to own a new condo unit in
Bathurst/Lakeshore
Donmills / Yorkmills
Commercial & Investment properties

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

IDOL BANQUET SERVICES
IDOL Banquet & Convention Center
VIJAY
Even Planer
416-908-8344
647-707-1230
vijayapala@hotmail.com
திருமணம்
பூப்புனிதநீராட்டு விழா
பிறந்தநாள் கொண்டாட்டம்
வர்த்தக ஒன்றுகூடல்கள்
நினைவுநாள் நிகழ்வுகள்
வர்த்தக கண்காட்சிகள்
ஆண்டு விழாக்கள்
ஒன்றுகூடல்கள்
அரங்கேற்றம்
மற்றும் அனைத்து விதமான வைபவங்களையும் உட்புறம் மற்றும் வெளிப்புற மண்டபங்களில் சிறப்பாக நிறைவேற்றிக்கொள்ள...
Tel: 416.908.8344, 647-707-1230
610 Coronation Drive, Scarborough, ON M1E 2K4
Email: contact@idolbanquet.com, Web: www.idolBanquet.com